www.tamilarangam.net

# யாவரும் கேளிரென..

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொதுமை வெளியீடு

யாவரும்கேளிரென...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாவரும் கேளிரென....

YAVARUM KELIRENA...

(பொதுமை இதழில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பு)

முதற்பதிப்பு: 1988-09-25

பொதுமை வெளியீடு

(C) வெளியீட்டுக்குழு

*ஈழப்புரட்சி அமைப்பு* (**EROS**)

39, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

*39, TEMPLE ROAD,*
*JAFFNA.*

## முன்னுரை

*1983 களின் பின் ஸ்ரீலங்கா பௌத்த பேரினவாத அரசின் கொடூரமான அடக்கு முறைகள் தமிழ் பேசும் மக்களின் மேல் வியாபித்திருந்த வேளை தமிழ் பேசும் மக்களது தேசியப்போராட்டம் முனைப்பு பெற்றிருந்தது. இக்காலகட்டத்தில் ஆயுதந் தாங்கிய போராட்டம் தேசிய எதிர்ப்பு அலையை ஈடுசெய்யும் வகையில் அமைந்து, முடிந்தளவில் ஸ்ரீலங்கா அரசை நெருக்கடிக்குள்ளாக்கியிருந்தது. இக்காலகட்டத்தில் ஈழப்போராட்டம் தொடர்பான சித்தாந்த ரீதியான கருத்துப் போராட்டம் சமாந்தரமாக நடைபெற்றிருக்கவில்லை என்ற ஆதங்கம் எமக்குண்டு.*

ஈழப்புரட்சி அமைப்பு ஸ்தாபிக்கப்பட்ட காலகட்டம் தொடக்கம் சித்தாந்த ரீதியில் போராட்ட முன்னெடுப்பு நெறிப்படுத்த வேண்டுமென்ற கருதுகோள் எம்மால் ஆணித்தரமாக வலியுறுத்தப்பட்டு வந்தது. *இதற்கமைவாக தேசிய இனப் போராட்டம் முனைப்பு பெற்றிருந்த காலத்தில் நிலவிய அரசியல் இராணுவ நிலைமைகளை தெளிவு படுத்தும் நோக்கோடும் கருத்து நிலை விவாதங்களினூடாக போராட்ட முன்னெடுப்பினை செழுமைப் படுத்துவதற்கு உந்து சக்தியாக அமைய வேண்டுமென்ற நோக்கோடும் எமது வெளியீடான பொதுமை இதழில்* "யாவரும் கேளிரென" *பகுதி வெளியிடப்பட்டு வந்தது இங்கு முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் ஒரு முடிந்த முடிவாக கொள்ளாமல் கருத்து நிலை விவாதங்களுக்கு ஆரம்பமாக அமைந்து தகுந்த வழிகாட்டியாக அமைய வேண்டும் என்பதே எமது நோக்காகும்.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்நூலின் கடைசியாக இடம்பெறும் கட்டுரையான ''அரிசிப்பொதியோடும் வந்தீரோ தம்பி'' யானது யாவரும் கேளிரென பகுதியில் வராத போதும் ஒப்பந்தத்தின் பின் ஏற்பட்ட சூழ்நிலையை கவனத்தில் கொண்டு எழுதப்பட்டதால், யாவரும் கேளிரென என்ற தொகுப்பில் இடம்பெறக் கூடியது என்பதை கவனத்தில் கொண்டு விசேடமாக இணைக்கப்பட்டுள்ளது.

பொதுமை இதழ் வெளியிடப்பட்ட காலங்களில் வெளியீட்டுக்குழுவால் சர்ச்சைக்குரிய பிரச்சனைகள் பற்றி ஆராயப்பட்டது உலகில் நடைபெற்ற போராட்டங்களின் வெற்றி பெற்ற அனுபவங்களிலிருந்தும்; முன்னோடி புரட்சிவாதிகளின் பட்டறிவு கருத்துக்களிலிருந்து நாம் கிரகித்துக் கொண்டவற்றையும்; எமது மண்ணின் போராட்ட பாதையில் கிடைத்த படிப்பினைகளை கவனத்தில் கொண்டும் ஆராய்ந்து கட்டுரைகள் ஆக்கப்பட்டன. இவ் ஆக்கத்திற்கு தோழர் பாலநடராஜனின் எழுந்துக்களால் வடிவமைக்கப்பட்டது

ஈழப்புரட்சி அமைப்பின் பதின்மூன்று ஆண்டுகால வரலாற்றில் கூட்டப்படும் திட்டப்பிரகடன மாநாட்டையொட்டி இக்கட்டுரைகளை தொகுத்து நூலாக வெளியிடுகின்றோம். எதிர்காலத்தில் தொடரப்படவிருக்கும் போராட்ட முன்னெடுப்பிற்கு கடந்தகாலம் குறித்ததான பரிசீலனையின் அவசியம் கருதி இந்நூல் வெளியிடப்படுகிறது.

இதில் தொகுக்கப்பட்டுள்ள கட்டுரைகளின் தொடர்பான வெளிப்பாடு ஆரோக்கியமான விமர்சனங்களையும், கருத்துக்களையும் எதிர்பார்க்கின்றோம்.

வெளியீட்டுக்குழு,
ஈழப்புரட்சி அமைப்பு.
88-09-25

# யாவரும் கேளிரென...

15 - 03 - 85

## இயக்கங்களின் நடைமுறை

இன்று ஈழவரின் மீதான அடக்குமுறைகள் அதிகரித்து வரும் வேளையில் சமூக பொருளாதார அரசியல் காரணிகளால் மட்டுமன்றி சரீர ஆத்மார்த்த ரீதியிலும் பெரும் தாக்கத்துக்குட்பட்டிருக்கும் நம்மவரிடையே இயக்கங்களுக்கிடையிலான ஐக்கியப்பாட்டின் அவசியம் பற்றிய கருத்து வலுவடைந்து வருவதனை உணர முடிகிறது. ஆழமான கருத்தோட்டத்தை நாம் முன்வைக்க வேண்டியது அவசியம்.

முதலில் இயக்கம் என்றால் என்ன? அது போராளிகளை எவ்வகையில் இனங்கண்டு உருவாக்குகிறது? என்ற விடயங்களை கவனித்து அதனடிப்படையில் ஐக்கியம் பற்றியசாத்தியப்பாட்டை விளக்குவதே பொருத்தமானது.

### இயக்கம் என்றால் என்ன?

☐ ஒரு தெளிவான அரசியல் கொள்கை, அதனடிப்படையிலான கோரிக்கை, அதை முன்னெடுத்துச் செல்லும் உறுப்பினர்களை உருவாக்கவும் மக்களை அணிதிரட்டவும் முன்வைக்கும்மறைமுக வேலைத்திட்டங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

☐ இக்கோரிக்கையை வென்றெடுக்க மேற்கொள்ளும் வெளிப்படையான அரசியல் இராணுவ நடவடிக்கைகள்.

☐ சர்வதேச ரீதியில் இயக்கக்கொள்கையினாலும் நடவடிக்கையினாலும் ஏற்படும் செல்வாக்கு

ஆகிய காரணிகளினாலேயே ஒரு இயக்கம் வரையறுக்கப்படுவதும், விமர்சிக்கப்படுவதும் முறையாக இருக்கிறது.

## இயக்கங்களின் தோற்றமும் நோக்கும்

எழுபதுகளின் ஆரம்பத்தில் இருந்தே ஆயுதந் தாங்கிய நடவடிக்கைகள் ஆரம்பித்தாலும் இது ஈழக்கோரிக்கையாக எழுபத்தைந்தின் பின்பே உருப்பெற்றது. 5 செப்ரெம்பர் 74 இல் புதிய தமிழ்ப் புலிகள் (TNT) என்ற பெயரில் தோற்றம் பெற்று இயங்கியோரும்: 'ஆதாரம்; அமரர் இரசரத்தினம் டயறி) 75 அக்டோபரில் முத்துக்குமாரசாமியின் தலைமையில் இயங்கிய தமிழீழ விடுதலை இயக்கமும், 75 நவம்பர் 23இல் கருப்பெற்று 76 ஜனவரியில் பிரகடனம் செய்யப்பட்ட ஈரோஸினதும் செயற்பாடுகள் மே 76இல் வட்டுக்கோட்டை மாநாட்டைக்கூட்டி தமிழீழ தீர்மானம்எடுக்க தமிழர் கூட்டணியை நிர்ப்பந்தம் செய்தன.

இவ்வாறாக 75 இன் பின் உருப்பெற்ற ஈழக் கோரிக்கையில் ஆரம்பம் முதலே இருவிதமான போக்குகளை காணுதல் முடியும். வாக்குரிமையும் குடியுரிமையும் இழந்து வறுமைக் கோட்டிற்கு கீழ்வாழும் மலையக மக்களை முன்னணியாகவும் வடக்கு கிழக்கில் வாழும் தொழிலாள விவசாயிகளை அவர்களுடன் இணைந்துப்போராடும் வடக்கு, கிழக்கு மலையகத்தை உள்ளடக்கிய பிரதேசத்தை ஈழம் என அழைத்த ஈரோஸ் இயக்கம் அதற்கான ஆயுதப்போராட்டத் தயாரிப்பில் ஈடுபட ஆரம்பித்தது. அதே நேரம் வடபகுதி இளைஞர்களை பெரிதும்பாதித்த தரப்படுதலையும் மொழியுரிமையையும்முன்



வைத்து வடக்கு கிழக்கை உள்ளடக்கிய பிரதேசத்தை 'தமிழீழம்' என அழைத்து அகிம்சை மார்க்கத்திலும், ஆயுத நடவடிக்கையூடாகவும் முறையே தமிழர் கூட்டணியினரும் புலிகள் இயக்கமும் செயற்படலாயின. காலப்போக்கில் அகிம்சை மார்க்கம் மங்கிப்போக புலிகளின் ஆயுத நடவடிக்கைகள் கவர்ச்சி நிலையை எய்தின.

இவ்விரு போக்குகளிலும் ஆயுதப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து மறைமுக இயக்கங்களாக உருவாகி வந்த ஈரோசும், புலிகளும் சமரசம்காண எடுக்கப்பட்ட முயற்சிகள் முளையிலேயே முறிந்து போயிற்று.

## உறுப்பினர்களை உருவாக்கும் வழிமுறைகள்

ஈரோஸ் தனது கருத்தை முன்வைத்தபோது அதை ஏற்றுக்கொண்டு செயற்பட முன்வந்தவர்களை வடக்கு, கிழக்கு மலையகப்பகுதிகளில் கூட்டுறவு முறையில் உருவாக்கப்பட்ட பண்ணைத்திட்டங்களிலும் கைத்தொழில் திட்டங்களிலும் வெளியீட்டுத்துறைகளிலும் ஆரம்பத்தில் ஈடுபட வைத்து அதனூடாக ஆள் தெரிவை செய்து ஆயுதப் பயிற்சியளிப்பதையே தனது போக்காகக் கருதிச் செயற்பட்டது.. இது 1977 இல் தனது மாணவ அமைப்பாக ஈழமாணவர் பொது மன்றத்தை (GUES) பிரகடனப்படுத்தி பகிரங்கமாக மாணவர் மத்தியில் செயற்படவும் செய்தது. இவ்வகை அணுகுமுறைகளில் தோழர்களை அரசியல் இராணுவ துறைகளில் வளர்த்தெடுத்து அறிவு ரீதியில் இயல்பான கட்டுப்பாட்டை எட்டமுடியுமென்பதில் அசையாத நம்பிக்கையுடன் செயற்படலானது.

விடுதலைப் புலிகள் தமது இராணுவத் தாக்குதல் மூலம் தம்மை வெளிப்படுத்தி அவற்றை மையமாக வைத்து பிரச்சாரம் செய்து உறுப்பினர்களை தெரிவு செய்து இறுக்கமான இராணுவக்கட்டுப்பாட்டூடாக தமது இயக்கத்தை வளர்க்க முற்பட்டது, கெரில்லாப் போர் முறையிலுள்ள தாக்குதலும் தப்பித்தலும், என்ற வழிமுறையைக் கையாண்டு இவர்கள் தம்மை வளர்க்கலானார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இருசாரரிலும் ஏற்பட்ட பிளவு

படிப்படியாக தமது போக்கில் வளர்ந்துவந்த இவ்விரு சாராரும் 1980-ம் ஆண்டில் தமது இயக்கங்களில் பிளவுகளைச் சந்தித்தனர்

ஈரோஸின் மாணவ அமைப்பாக இருந்த ஈழமாணவர் பொதுமன்றத்தின் உறுப்பினர்கள் பலர் ஈரோஸ் தலைமை மீது குற்றஞ்சாட்டியபடியே பிரிந்து சென்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை (EPRLF) ஆரம்பித்து அதற்குத் தலைமை தாங்கினர். இவர்கள் ஈரோஸின் சில கருத்துக்களை முன்வைத்து பிரச்சாரம் செய்து ஆட்சேர்ப்பு நடாத்தினர். ஆயுதப்பயிற்சியும் வழங்கினர் இவர்கள் சில தேவைகளின் நிமித்தம் இராணுவத் தாக்குதல்களை இன்று நடாத்தி வருகின்றனர்.

விடுதலைப்புலிகளின் (தாக்குதலும் தப்பித்தலும்) அணுகுமுறையை நிராகரித்து பிரிந்து சென்றவர்கள் தம்மை 'தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்' (PLOT) என அழைத்து, 'ஒட்டுமொத்தமான ஒரே தாக்குதல்' தொடுக்க தம்மை தயார் செய்து வருவதாக பிரச்சாரம் செய்து வருகின்றனர். இவர்கள் இத்தாக்குதலுக்காக அதிகப்படியான ஆட்களை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணப்பாட்டில் செயற்பட்டு வருவது வெளிப்படையாக இருக்கிறது. ஆயினும் இதை தற்போது தனித்துத் தாமே செய்து முடிக்க இயலாதெனவும் இதற்கு ஏனைய இயக்கங்களின் இணைப்பு அவசியமெனவும் தமது பிரச்சார ஏடான 'புதிய பாதையில், கருத்து வெளியிட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலை இயக்கத்தினரை (TELO) பொறுத்தவரையில் புலிகளின் பாணியிலான தாக்குதல்களை முதன்மைப் படுத்தி, பெரிய இலக்குகளை தெரிந்து தாக்குவோராக விளங்குகின்றனர். இவர்கள் இத்தகைய தாக்குதல்களையே குறிக்கோளாகக் கொண்டு, ஆட்சேர்ப்பு நடாத்தி வருகின்றனர்.



இவ்வாறாக, வெவ்வேறான இயக்கங்கள் ஈழப்போராட்டத்தை வெவ்வேறு பாதைகளில் முன்னெடுக்க முனையும் போது, சில இயக்கங்கள் ஆட்சேர்ப்பில் கையாளும் வழிவகைகள் ஐக்கியத்துக்கு ஒரு சோதனையாகி விடுகின்றன.

## புதிய சக்திகள்......?

இன்று சில இயக்கங்கள் தமது கொள்கைகளினாலும் தாம் முன்வைத்த கோரிக்கைகளாலும் அரசியல், இராணுவ நடவடிக்கைகளினாலும் ஓரளவு நிறுவனமயப்பட்டிருப்பது தெரிகிறது. இவை இப்போது தம்மை விஸ்தீரணப்படுத்தும் பாங்கில், புதியவர்களை தம்பக்கம் ஈர்க்கும் கைங்கரியங்களில் முழுமூச்சாக ஈடுபட்டு வருகின்றன. இவ்வேளையில் இயக்கங்களுக்குள் நுழைய முயலும் புதியவர்கள் பின்வரும்தேவைகளை தம்மகத்தே கொண்டு வருவதைக் காணலாம்.

- ☐ கொள்கையிலும் கோரிக்கையிலும் கொண்டுள்ள பற்று
- ☐ இயக்கம் தொடுத்த இராணுவ நடவடிக்கைகளினால் பெற்ற கவர்ச்சி.
- ☐ இயக்க வரலாற்றிலும், முன்னணி உறுப்பினர்களிடத்திலும் கொண்டுள்ள நம்பிக்கை
- ☐ தமக்கு ஏற்பட்ட பாதுகாப்பற்ற நிலைமை
- ☐ தனிப்பட்ட வாழ்வில் ஏற்பட்ட தடங்கலும் விரக்தியும்
- ☐ சமூக அந்தஸ்து அல்லது தற்காலிக தேவை, அல்லது சுயவிளம்பரம்

இத்தகைய ஆறு வகைப்பட்ட வழிகளிலும் இயக்கங்களில் புகுவோரில் முதல் மூன்று வகைப்பட்டோராலும் இயக்கம் பெரும் பாதிப்பை எதிர்நோக்க வேண்டியிருக்காது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனல் இறுதி மூன்று காரணங்களுக்காகவும் இயக்கத்தில் சேருவோரையிட்டு மிகுந்த எச்சரிக்கை அவசியமாகிறது. இத்தகைய காரணங்களுக்காக இயக்கத்தை நாடுவோரை தடுத்து நிறுத்தி இயக்கக்கொள்கை கோட்பாடுகளில் நம்பிக்கையூட்டி இயக்கத்தின் அன்றாடச் செயற்பாடுகளினூடாக இவர்களது நேர்மையான அர்ப்பணிப்பை பரிசீலனை செய்து, அதன்பின்னரே பொறுப்புடையவர்களாக மாற்றுதல் வேண்டும்.

இந்தத் தெரிவை சரிவரச் செய்யாத பல இயக்கங்களினலேயே இன்று ஈழப்போராட்டமே வெறும் குதர்க்கமாகும். அபாயம் தோன்றியுள்ளது.

இன்று ஆட்சேர்ப்பில் இயக்கங்களுக்கிடையிலான போட்டி கோஷ்டி மனப்பான்மை தெளிவான சித்தாந்தப் பார்வையற்ற துடிப்பு என்பவை இயக்க முன்னணி உறுப்பினர்களை ஆட்கொண்டிருப்பதால், நபர்களை இணைத்துச் செல்வதே தற்போதைய தேவை என்ற எண்ணத்தில் இயக்கங்கள் செயற்படுவதனை உணர முடிகிறது. அதாவது அரசியல் மயப்படுத்துதல் என்றால் எமது இயக்கத்தின் அரசியல் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளச் செய்தல் என்றும் மக்களை அணிதிரட்டுதல் என்றால் எமது இயக்கத்திற்கு ஆட்சேர்த்தல் என்ற அர்த்தத்திலும் கொச்சைத்தனமான விளக்கத்தின் அடிப்படையிலான செயற்பாடுகளே இன்று பெரும்பாலான இயக்க முன்னணி உறுப்பினர்களைப் பிடித்துக் கொண்டுள்ளது என்பதைக் காணமுடிகிறது.

இதன் விளைவாக தனிநபர்களின் கடந்தகால வரலாற்று நேர்மை என்பவை பற்றி இயக்கங்கள் கவலைப்படுவதில்லை. இதனல் போராளிகள் என்ற போர்வைக்குள் தவறான போக்குடையவர்களும் ஒளித்துக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டு இருக்கிறது. இத்தகைய சக்திகளின் நாளாந்த நடவடிக்கைகள் இயக்கத்தலைமையின் கருத்துக்கும் போக்கிற்கும்மாறாக இருந்தாலும் கூட, தங்கள் இயக்கத்தோழன் என்ற வகையில் மக்கள் மத்தியில் இனங்காட்டத் தயங்கும் போக்கு இச்சக்திகளை மேலும் வளர்க்கப் பயன்படுகிறது. இன்னும் சில இடங்களில் இயக்கத் தலைமைகளே தமது நிதித் தேவைக்கும் வேறு சில தேவைகளுக்கும் இத்தகைய சக்திகளைப் பயன்படுத்தி வருகிறது,



இவ்வாறாக, தெளிவான, முற்போக்கான கருத்துகளைக் கொண்டுள்ள சக்திகளும் அப்பாவித்தனமான, ஆனல் அர்ப்பணிக்கத் தயங்காத சக்திகளும் இருக்கும் அதேநேரம். சந்தர்ப்பவாதப் போக்குடைய தெளிவற்ற தீயசக்திகளும். இன்று சில இயக்கங்களில் காணப்படுகின்றன. இவ்வகையில், இயக்கங்களில் நல்லசக்திகளும் சமூகவிரோத சக்திகளும் முட்டிமோதி வருகின்றன, உட்கட்சிச் சண்டைகளும் சூடுபாடுகளும் இதனையே காட்டுகின்றன. குறிப்பிட்ட ஒரு இயக்கத்தில், எத்தகைய போக்கு மேலோங்கும் என்பதனைப் பொறுத்தே அவ்வியக்கத்தின் எதிர்காலம் அமையமுடியும்.

வெறுமனே எண்ணிக்கைக்காக ஆட் சேர்த்து' இந்நபர்களுக்கு பயிற்சிகளை வழங்கி, கைக்குண்டுகளுடன் குழுக்களாகத் தெருக்களில் திரிய இன்று இவர்கள் விடப்பட்டுள்ளனர். இப்படித் திரிபவர்கள் எது போராட்டம் எனப் புரியாமல், சாதாரண பொதுமக்களையும், சகோதர இயக்கத்தினரையும் நோக்கி, தமது ஆயுதங்களை குறிபார்த்து மிரட்டுவதையே போராட்டமெனக் கருதி வருகிறார்கள். எதிரி தரப்பு இராணுவம் செய்யும் அதே அடாவடித்தனங்களையே செய்து வரும் இந்தக்கட்டுப்பாடற்ற நபர்கள், ஈழப் போராட்டத்திற்கு பெரும் கேடாக விளங்குகிறார்கள். அது மட்டுமின்றி இவர்கள் இயக்கங்களின் ஐக்கியத்திற்கும் பெரும் பாதகமான செயற்பாடுகளையும் செய்து வருகின்றனர்.

## இயக்கப் பிளவுகள் கொடுத்த சந்தர்ப்பம்

ஈழப்போராட்டத்தில், போராட்ட சக்திகளிடையே பிளவுகள் ஏற்பட்டதும் சமூகத்திலிருந்த வெவ்வேறு வர்க்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கத்தினரும், இச்சக்திகளை தமக்குச் சார்பாகவும் பயன்படுத்தத் தொடங்கியதே, இந்த விளைவுக்குக் காரணம்; அதாவது, இயக்கங்கள் பல தாம் பாட்டாளிவர்க்கத்தின் அபிலாசைகளை பிரதிபலிப்பதாகவும், சோசலிச சமுதாயத்தை நிர்மாணிப்பதே தமது இலட்சியம் எனக்கொண்டாலும், இவர்களது நடவடிக்கைகள் இதற்கு மாறாகவே இருக்கின்றன. இவ் வியக்கங்களது மாறுபாடான செயற்பாடுகளினாலேயே, சமூகத்திலுள்ள தீய சக்திகளுக்கு இவர்கள் இரையாகியுள்ளனர்.

ஆனால், இந்தப் பாதிப்புக்குள்ளான இயக்கங்கள் இதை உணர்ந்து தம்மை புனருத்தாரணம் செய்து கொள்ளும் நிலை இன்றில்லை. இதனாலேயே ஒரு இயக்கமோ அல்லது தரமான இயக்கக்கூட்டோ, போராட்டத்தைத் தொடர்ச்சியாக முன்னெடுக்கும் வரை, ஒற்றுமை சாத்தியமில்லை என்ற கருத்தை நாம் வலியுறுத்திவருகிறோம்.



# யாவரும் கேளிரென...

20-04-85

## போராளிகள்

இந்தச் சேனை சக்திமிக்கது. ஏனெனில் இதன் அங்கத்தினர்கள் எல்லோரும் ஒரு உணர்வு பூர்வமான கட்டுப்பாட்டைக் கொண்டவர்கள் அவர்கள் ஒருசில நபர்களினதோ ; ஒரு குறுகியகும் பலினதோ; தனிப்பட்ட நலன்களுக்காக அல்லாமல்பரந்துபட்ட வெகுமக்களினதும், முழுநாட்டினதும் நலன்களுக்காக ஒன்று சேர்ந்துள்ளனர். போர் செய்கின்றனர்.

வர்த்தகர்கள் கடத்தப்பட்டதைக் கண்டித்து கதவடைப்பு; பாடசாலைகளில் உபகரணங்கள், பணம், கொள்ளையிடப்படுவதைக் கண்டித்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம் ஹார்த்தால்; கோயில் கொள்ளைகளைக் கண்டித்து கண்டனப் பிரசுரங்கள்; பொது சன சேவையினை மையமாகக் கொண்ட கூட்டுறவு நிறுவனங்கள், வைத்தியசாலைகள் மற்றும் பொது நிறுவனக் கொள்ளைகளைக் கண்டித்து மக்கள் விசனம்; இவ்வாறாக பல செய்திகள் அண்மையில் ஒலிகத் தொடங்கியுள்ளன, எழுபதுகளில் அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்து மக்களின் எதிர்ப்பு உணர்வின் வடிவமாக வெளிக்காட்டப்பட்ட கதவடைப்பு, ஹர்த்தால், ஆர்ப்பாட்ட ஊர்வலம், பகிஸ்கரிப்பு, வேலை நிறுத்தம் போன்ற நிகழ்ச்சிகள் இன்று இயக்கங்களின் அதாவது இயக்கப் பொடியள் எனப்படுவோரின் தன்னிச்சையான செயற்பாடுகளைக் கண்டித்து வெளிப்படுத்தப்படுவது ஒரு ஆரோக்கிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மான நிலைமையல்ல. பொறுப்பற்ற சில போராளிகளின் நடவடிக்கைகளால் இயக்கமும், அதற்கு ஊடாக இயக்கம் முன்னெடுத்துச் செல்லும் இலட்சியமும் பாதிக்கப்படுவதனை அனுமதித்தல் முடியாது என்பதைப் பலரும் ஏற்றுக்கொள்வர், இத்தகைய பொறுப்பற்ற சிலரை தீர்த்துக் கட்டுவதாலோ அல்லது அவர்களை தனிமைப்படுத்துவதாலோ மட்டும் இந்தப் போக்குகளைத் தடுத்து நிறுத்தல் சாத்தியமற்றதுதொன்றாகும், போராளிகளின் அரசியல் தரத்தை, அறிவு மட்டத்தை உயர்த்துவதன்மூலமே இப்போக்குகளைத் தவிர்க்க முடியும் என்பது எமது நம்பிக்கை.

## யார் போராளிகள்

ஒரு தனிமனிதன் எப்போது புரட்சிவாதியாக அல்லது போராளியாக புனர் நிர்மாணம் பெறுகிறான்? இந்த கேள்விகளுக்கு விடைகாணுவது என்பது துரதிஸ்டவசமாக அவ்வளவு இலகுவானது அல்ல ஆனால் இன்று பெரும்பாலோரும் இது குறித்து என்ன கருதுகிறார்கள் ஏதோ ஒரு இயக்கத்தின் அங்கத்துவ விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து விட்டால் அல்லது ஒரு சிலகாலம் ஊரிலிருந்தோ அல்லது நாட்டிலிருந்தோ தலைமறைவாகி விட்டால் அல்லது இயக்க உறுப்பினர்களோடு நெருங்கிய நட்புறவைப் பேணி விட்டால்; போதும் நாமும் போராளிகளாகி விட்டோம் என எண்ணுகிறார்கள். இத்தகைய எண்ணத்தின் அடிப்படையில் தமது நாளாந்த நடவடிக்கைகளில் பேணும் சுய விளம்பரம். தனிச்சையான போக்கு என்பன இயக்கத்திற்கு கேடு பயப்பதாகவும், ஊறு விளைவிப்பதாகவும் அமைந்து விடுகிறது.

இதே வேளையில் மக்கள் மட்டத்தில் போராளிகள் பற்றி நிலவும் தவறான கருத்தோட்டங்களையும் குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும் போராளிகள் என்றால் மாதக்கணக்காக ''அன்னம் தண்ணி'' இல்லாமல் அவஸ்தைப் படுபவர்கள் என்றும், தலைமறைவாகிக் காட்டுக்குள்ளே



வாசம் செய்பவர்களென்றும் சதாநேரமும் இராணுவமோ பொலிசோ பின்தொடர கருவிகளைகாவித்திரியும் பிறவிகள் என்றும் எண்ணுகிறார்கள், அத்துடன் இப்படித்திரியும் இந்தக் கூட்டங்கள் எமது விடுதலையைப் பெற்றுத்தந்துவிடும் என்ற அசட்டு நம்பிக்கையோடு தமது பங்களிப்பை மறந்தவராக அவ்வப்போது யாரேனும் கேட்கும் சிறுசிறு உதவிகளை மட்டும் நிறைவேற்றுவதோடு தமது கடமைமுடிந்ததென கருதுகிறார்கள். தாங்கள் யாருக்காக, என்ன காரணத்துக்காக இதனைச் செய்கின்றோம், என்ற எண்ணமில்லாமலே தங்களது உதவியின் மூலம் எத்தகைய சக்திகள் வளர்கின்றது. என்றகருத்தில்லாமலே எங்களுக்கென்ன எல்லோரும் ஒன்றுதானே ஏதோ எங்களால் முடிஞ்சதை செய்கிறம்'' என்ற பீடிகையுடனான செயற்பாடுகள் விடுதலையின்பால் மக்களுக்கிருக்கும் அசிரத்தையைக் காட்டுவதாகும்.

மற்றொரு புறத்தில இயக்கப் போராளிகளென மகுடமிட்ட சிலரும் இதைமட்டுமே மக்களின் மகத்தான பங்களிப்பு எனக் கருதுகிறார்கள் அதாவது போராளிகளின் செயற்பாடுகளுக்கு உதவுதல் மட்டுமே மக்களின் கடன் எனச் சிந்திகின்றார்கள் அவ்வாறு போராளிகளது செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்க மறுத்தால், அல்லது அவர்களையும் அவர்களது அவசரத்தையும் உணர முற்படாவிட்டால் எச்சரிக்கையும், ஏன துப்பாக்கிப் பிரயோகம் கூட நிகழ்ந்து விடுகிறது உதாரணமாக போராளிகளுக்கு வாகனங்கள் மிக தேவையான ஒன்றுதான் ஆனால் இதைமட்டுமே கருதி தெருவில் போகும் வாகனம் அனைத்தும் தமது தேவைகளுக்கு முன்னுரிமை தரவேண்டும் என்பது எப்படி நியாயமாகும்? இன்றுள்ள நெருக்கடி நிலையில் மிக மிக முக்கிய தேவையுள்ளவர்களே பெரும்பாலும் தனியார் வாகனங்களைப் பாவிக்கின்றனர் இடைநடுவில் அதனை வழிமறித்து எமது அவசரத்தை மட்டுமே கருதி ''உஸ்! இறங்கு கீழே எடுதிறப்பு'' என்றவாறு செயற்படுதல் இராணுவத்திற்கு பொருத்தமானதாக இருக்கலாம். ஆனால் விடுதலைப் போராளிகளுக்கல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இன்றைக்கு காணப்படும் முரண்பாடுகள்

இன்றைய சூழலில் மக்கள் மட்டத்தில் பல்வேறு வித மான முரண்பாடுகள் காணப்படுகின்றன நடைமுறையில் காணப்படும் இம்முரண்பாடுகளின் மோதலும் வளர்ச்சியுமே நிலைமைகளைச் சிக்கலாக்குவதில் பிரதான பங்கை வகிக் கின்றன. முதலில் அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் அரசின் கொடூரமான சட்டங்களாலும், இராணுவ அடாவடித்தனங்களாலும் எமது மக்கள் நிம்மதி யையும் நம்பிக்கையையும் இழந்துள்ளனர் இந்த வகையில் அரசையும், அதன் இயந்திரங்களையும் தூக்கியெறிய விளும் பும் ஆர்வம் கொண்டு அதில் ஏற்படும் இழப்புக்கள், பாதிப் புக்கள் நாளைய விடுதலைக்கான - விடியலுக்கான உரங்கள் என எண்ணுகின்றனர். இதனால் இயக்கங்கள் அரசைத் தாக்கும்போது மகிழ்ச்சியடைபவர்களாகவும், உற்சாகம் பெறுபவர்களாவும் உள்ளனர்.

அடுத்து மக்களின் விமோசனத்திற்காக விடுதலைக்காக உழைக்க புறப்பட்டு பலவாக பிளவுபட்டுப்போன இயக் கங்களுக்கிடையிலான முரண்பாடுகள் இவை போராட்ட தந்திரங்கள், ஆட்சேர்ப்பு முறைகள், முன் வைக்கும் கருத் துக்கள் நடைமுறைப் பிரச்சனைகள் என்பன போன்ற கார ணிகளில் மையம் கொள்ளுகின்றது. இதனையொட்டிய அணுகும் முறைகளில் ஏற்படும் வேறுபாடுகள் இப்பிளவு களை ஆழப்படுத்தியும், அகலப்படுத்தியும் வருவதனால் இயக்க நலன்களையும் குழு நலன்களையும் முன்னிட்டுச் செயற்பட இயக்கங்களைத் தூண்டுவதாயுள்ளது மூன்றாவதாக இயக் கங்களில் காணப்பட்டுள்ள முரண்பாடுகள், இது தனிமனித குரோதங்கள், கசப்புணர்வுகள், பதவிப்போட்டி, அணுகு முறைவேறுபாடுகள் எனப் பல அம்சங்களில் தங்கியுள்ளது.

போராளிகளின் தோற்றம் என்பது அரசுக்கும் மக்களுக் கும் இடையிலான முரண்பாடுகளின் பிரதிபலிப்பேயாகும். அனைத்து மக்களும் நேரடியாகப் பாதுகாக்கப்படுதுவம்,



ஒடுக்கப்படுவதும் அரசினாலேயே எனவே இந்த முரண்பாடு களை முதன்மைப்படுத்தி விடுதலை போராட்டத்தை முன் னெடுப்பதே இன்றைய அவசியமும் தேவையுமாகும். இதற் காகப் போராளிகள் அரசியல் முதிர்ச்சியை பெற வேண்டியது. அத்திபாவசிமானது துப்பாக்கிக்குண்டுகள் குறிகளை (TARGETS) இலகுவாக அமைந்து விடலாம் ஆனால் குறிக்கோளை (MOTIVE) அடைவது அவ்வளவு இல குவானதால்ல குறிக்கோளையடைய வேண்டுமெனில் துப்பாக் கிக் குண்டுகளுக்கு வேகம் மட்டும் இருந்தால் போதாது. அதை இயக்குபவர்களுக்கு விவேகமும் இருக்க வேண்டும்.

இராணுவ வீரனைப் பொறுத்தவரை அவன் ஒருங்க மைந்த ஒரு நிறுவனத்தில் கடமையாற்றும் ஒரு ஊழியன். ஒரு போராளி நிறுவனத்தைதானே ஒழுங்கமைக்க வேண் டியவனாகிறான. ஒரு போராளி எங்கேயோ இருந்துவரும் கட்டளைகளை நிறைவேற்றும் ஒரு கருவியல்ல மாறாக "மக்களிடையிலான பிரச்சனைகளைப் படித்தறிய ஆர்வமுடைய மாணவனாகவும், அந்தப் பிரச்சனைகளையே ஒழுங்குபட எடுத் துப் போதிப்பதில் நல்லாசிரியனாகவும், இப்பிரச்சனைகளுக்கான தீர்வுகளை நோக்கி வழி நடத்துவதில் வழி காட்டியாகவும், இந்த வழியில் ஏற்படும் தடைகளை நீக்குவதில் – முட்டுக்கட் டைகளை உடைத்தெறிவதில் முன்னணிப் படையினனாகவும் செயற்பட வேண்டியவனாகிறான்". என்கிறார் மாஓ... ...

அதாவது இராணுவத்தானைப் போல துப்பாக்கி தூக் கியவனாக இருந்தபோதும் போராளி. அவனைவிட மிகவும் வேறுபட்டவனாகிறான்.ஒரு இராணுவத்தான் இன்றைய அமைப்பையும், அதன் நிர்வாகத்தையும் பாதுகாப்பதாற் காக கருவி தூக்கியவன். ஆனால் போராளியோ இன்றைய அமைப்பை உடைத்தெறிவதோடு, எதிர்கால நிர்மாணத் திற்காகவும் ஆயுதம் தாங்கியவன் ஆகவே போராளி என் பவன் நடைமுறையில் அழிவு ஏற்படுத்துவதைவிட எதிர் கால நிர்மாணங்கள் பற்றிய ஆக்கங்களிலேயே அதிக கவ னம் செலுத்த வேண்டும். மேலும் இராணுவத்தான் தனது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடவடிக்கைகளின் பலாபலன்களை -அதன் பாதிப்புக்களைப் பற்றி. கிஞ்சித்தும் கவலையற்றுச் செயலாற்றுவான். ஆனால் போராளியோ தனது செயற்பாடுகளால் ஏற்படும் பலா பலன்களுக்கு - பாதிப்புகளுக்கு விலைசெலுத்த வேண்டிய வனாகவும், பதில் சொல்ல வேண்டியவனாகவும் விளங்குகின்றான், அதாவது ஒரு போராளி என்பவன் மக்கள் நேசித்து மக்களுக்காக தன்னை அர்ப்பணித்த சேவையில் ஈடுபடுபவன், மக்களுக்காக மக்களின் மேன்மைக்காக தன்னை இழக்கத் தயங்காதவன் ஆகிறான். ஆனால் இராணுவத்தானோ சம்பளத்தை நேசித்து தனது வாழ்வைமட்டும் மையமிட்டு அதற்காகக் கூட மையில் ஈடுபடுபவன் ஆகவேதான் போராளிகள் எனப்படுவோர் தமது கையில் கிடைத்த கருவிகளின் துணையினால் மக்களை அதிகாரம் செலுத்தவோ - அச்சுறுத்தவோ கூடாது

## போராளிகளின் கவனத்திற்கு

எனவே போராளிகள் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு செயலாற்ற வேண்டியது அவசியமானதாகும். ஒவ்வொரு தனிப்பட்ட போராளியும்மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அவனையும் அவன்சார்ந்த இயக்கத்தையும் மட்டுமன்றி இலட்சியத்தையும் இனத்தையும் பாதிக்கக்கூடியதாக அமைந்து விடக்கூடும். எனவே தனிப்பட்ட கோபதாபங்கள், கசப்புணர்வுகள், போட்டி பொறாமைகள் போன்றவற்றைக் களைந்தெறிந்து பொறுப்புமிக்க நபராக - தன்னை கட்டுப்படுத்தித் தான்சார்ந்த மக்களுக்காகத் துன்பப்படவும் தயாரானவனாக, தான் சார்ந்த மக்களை வழிநடத்தும் ஆற்றல் மிக்கவனாகப் போராளி விளங்கவேண்டியவன் ஆகிறான் இதை விடுத்து தமது கையில் இருக்கும் ஆயுதத்தின் மூலமாக மக்களிடம் அதிகாரம் செலுத்துவதும் துப்பாக்கிக் குழலிருந்தே அரசியல் அதிகாரம் பிறக்கிறது'' என்பதனைக் கொச்சைத் தனமாக மோற்கோள் காட்டுவதும் தமது தேவைகளை நிறைவு செய்வதே மக்கள் கடன் என்ற அடிப்படையில் செயற்படுவதும், இந்த அடிப்படையில் மக்களின் தேவைகள் பற்றிச் சிந்திக்காது செயற்படுவதும்,



மக்களை போராளிகள் மீது மட்டுமன்றி இலட்சியத்தின் மீதும் ஆத்திரம் கொள்ளத் தூண்டிவிடும் இத்தகைய விபரீதப் போக்குகளின் வெளிப்பாடுகளே அநாவசியமாக னக்கடத்தல்கள், ஆள்கடத்தல்கள், கொள்ளைகள் கொலைகள் போன்ற நிகழ்ச்சிகள்.

எனவே மக்களின் விடுதலைக்காகப் போராடும் நாம், ஏனைய நாடுகளில் மக்கள் போராடிப் பெற்ற அனுபவங்களைப் படிப்பினைகளாக்கி எம்மைத் தயார்படுத்துவதே இன்றைய அவசியமாகும். மக்களுக்கும் இயக்கங்களுக்கும் இடையிலான உறவுகள், முன்னோடிகள் மத்தியிலான உறவுகள் என்பவற்றை, ஆட்சி செய்கின்ற சரியான கோட்படுகளைக் கண்டறிந்து நடைமுறைப்படுத்தவேண்டும் இத்தகைய கோட்பாடுகள் போராடிய மக்களின் படிப்பினைகளாகவும், பலவீரர்களின் இரத்தத்திலும் வியர்வையிலும், நனைந்தவையாகவும் உள்ளன என்பதை மறத்தல் ஆகாது. மேலும் போராளிகள் இழைக்கும் தவறுகளுக்காக இரத்தத்தையும் வியர்வையையும் மட்டுமன்றி உயிரிழப்புக்களையும் கூட சந்திக்கவேண்டியிருக்கும் என்பதையும் ஞாபகத்தில் இருத்திக் கொள்ளவேண்டும்.

வியட்னாமிய மக்களின் விடுதலைக்காக உழைத்த ஜெனரல் கியாப்(General Giap) போராளிகளுக்கு பின் வருமாறு அறிவுரை கூறுகிறார். 1) மக்களுக்கு மதிப்பளியுங்கள் 2) மக்களுக்குசேவை செய்யுங்கள் 3) மக்களுக்கு பாதுகாப்பு அளியுங்கள்'' (ResPect the people. serve the people and Defend the people) மக்களோடு பழகும் போது இவற்றை மனதில் கொள்ள வேண்டியது அவசியமாகும். அதை விடுத்து தமது அவசரத்தையும் அவசியத்தையும் மட்டுமே கவனத்தில் எடுத்துப் போராளிகள் செயற்படுவது மக்களுக்கு இவர்கள் மீது வெறுப்பைவளர்க்கும்.

விடுதலைப் போராட்டம் முக்கிய கட்டத்தை அடைந்திருக்கும் இன்றைய காலகட்டத்தில் முக்கியமான பாத்திரத்தை ஆயுதங்களே ஆற்றுகின்றன. ஆனால் ஆயுதந் தாங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கியிருக்கும் போராளிகள் ஒரு தீர்க்கமான பாத்திரத்தை ஆற்றவேண்டுமானால் முற்போக்கான அரசியல் உணர்வில் ஊறிப்புடமிடப்படல் வேண்டும் முற்போக்கான அரசியல் வேலையினூடாக இத்தகைய உணர்வு வளர்க்கப்பட்டாக வேண்டும் இல்லாவிடில் படையின் அத்திவாரமான போராளிகளின் உற்சாகத்தை எதிர்ப்பு யுத்தத்தின் போது பூரணமாகத் தட்டியெழுப்புதல் அசாத்தியமானதாகி விடும் மேலும் ஆயுதக்கவர்ச்சியை மையமிட்ட ஆட்சேபப்புக்கள் கடந்த காலத்தில் தோற்றுவித்திருக்கும் குழப்பங்களும் கொலைகளும் எம்மவருக்கு பாடமாக அமைதல் வேண்டும்

மேலும் இயக்கத் தோழர்களுக்கு இடையில் ஏற்படும் வேறுபாடுகள் இயக்கத்தைப் பாதிக்கும் அளவுக்கு வளரு வதை அனுமதித்தல் கூடாது. வேறுபாடுகள் காணப்பாடும் தோழர்கள் நெருங்கி ஐக்கியமுறுவதில், சேர்ந்து வேலை செய்வதிலும் கவனம் செலுத்தப்படவேண்டும் நாட்டின்பல் வேறுகோணங்களில் இருந்தும் பல் வேறுபட்ட மக்கள் தொகுதிகளிலிருந்தும் விடுதலையை அதன் முழு அர்த்தத் தில் பெற்றுக் கொள்வதற்காக ஒன்று சேர்ந்து போராடி வருகின்ற எம்மவர் தம்மைப் போலவே அதே கருத்துக் களைக் கொண்ட தோழர்களோடும் ஐக்கியமுறுவதிலும் இற மையுடையவர்களாகவும் தேர்ச்சி மிக்கவர்களாக விளங் குதல் வேண்டும். அப்போது தான் போராட்ட சகதிகள் ஒட்டுமொத்தமாக முழுமக்களினதும் நலன்களைப் பிரதி பலிக்கும் ஒரு அமைப்பாக பரிணமம் பெறமுடியும்.

இத்தகைய சத்திகளாகத் திகழும் போராளிகள் கூட் டமே ஈழப் போராட்டத்தின் திசை வழியை தீர்மானிக்கும் ஈழப்போராட்டத்தை புரட்சியாகப் பரிணமம் கொள்ளச் செய் யும் "பெடியங்கள்" என்ற பதம் போய் போராளிகளாக" உயரவைக்கும் இளைஞர் இயக்கங்களை மக்கள் இயக்கமாக மலரவைக்கும், இன்றைய சமூக அமைப்பை உழுது புரட்டி சமதர்மப்பயிரை விளைவிக்கும் உழவர்களாக - எதிர்கால - சமூ கத்தின் சிற்பிகளாக, புரட்சிவாதிகளாக புடமிடும்.



# யாவரும் கேளிரென...

20-05-85

## அராஜகவாதமா? விடுதலைப்போராட்டமா?

எந்த ஒரு இராணுவப் பாதையும் அரசியற் பாதையி லேயே தங்கியிருக்கிறது. அரசியற் பாதையையே வெளிப்பாடு செய்கிறது. கடந்த சில ஆண்டுகளாக அந்நியமான இராணுவக் கோட்பாடுகள் ஆயுதப் போராட்டம் என்ற ரீதியில் பரீட்சார்த்தம் செய்யப் பட்டு கெரில்லாப் போராட்டத்திற்கு முற்றிலும் மாறு பட்ட அர்த்தத்தைக்கொடுக்க விழைந்தன.

இராணுவத்திட்டம் என்ற மாறுவேடத்தைப் பூண்டு ருந்த, இறக்குமதி செய்யப்பட்ட அரசியல் சித்தாந்தங் களாகும். வேறு எங்கே வேரூன்றிய இச்சிந்தாந்தங் கள் முற்றிலும் மாறுபட்ட வரலாற்றுச் சூழ்நிலைகளில் பரிசோதனை செய்யப் பட்டது.

— ரெஜிஸ் டெப்ரே—

அதிகரித்துவரும் நெருக்கடிகள், பொருளாதாரச் சுமை கள் இயக்கங்கள் எனப்படுவோரின் இராணுவச் செயற்பாடு கள், அதற்கான பதிலடிகள் எனப்பலவாறாக நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் மக்களிடையே இருந்து பலவாறான கேள் விகள் இன்று இயக்கங்களை நோக்கி எழுப்பப்படுகின்றது. தமக்குள் ஐக்கியம் காணமுடியாத இவ்வியக்கங்கள் போராட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டத்தை முன்னெடுக்குமா? போராட்டத்தில் எமக்கு வெற்றி கிடைக்குமா? அல்லது இது சிறுபிள்ளை செய்யும் வேளாண்மைதானா? இந்தியா ஏன் இவ்வளவு காலமும் எதுவும் செய்யாமல் இருக்கிறது? எமக்கு வெளிநாட்டு ஆதரவுகள் ஆக்கபூர்வமாக கிடைக்குமா? இப்படிப் பலவாறாக ஐயப்பும் சிந்தனைப்பாடுகளுக்குப் பதிலளிக்கவேண்டிய அவசியமும் கடமையும் எமக்கு உள்ளது.

ஒரு போராட்டம் வெற்றியடைவதற்கு அதாவது மக்கள் போராட்டமாக மலர்ந்து, புரட்சியாக பரிணமம் பெறுவதற்குச் சில சூழ்நிலைகள் அவசியம்.

1. அராஜகமான அரசு அதன் மனிதாபிமானம் அற்ற அடக்குமுறைகளும் இராணுவக் கெடுபிடிகளும்

2. சாதகமான சர்வதேச நிலைமையும், அரசுக்கு எதிரான பொது அபிப்பிராயமும்

முதலாவதனை எடுத்துக் கொண்டால் '77ன்' பின்னால் ஜே. ஆர். அரசு, அடக்குமுறையினை அதிஉச்ச நிலைக்கு பாசிச சர்வாதிகாரத்திற்கு இட்டுச் செல்வது கண்கூடு. சாதாரண சிவில் சட்டங்களால் இனரீதியாக — மொழிரீதியாக காட்டப்பட்ட ஒடுக்குமுறை இன்று வளர்ந்து தமிழ் பேசுவோர் அனைவரையும் பயங்கரவாதிகளாக சந்தேகிக்கும் நிலைக்கும் அவர்கள் அனைவரையும் எமது "எதிரிகள்" என நடத்தும் நிலைக்கும் அரசு சென்றுவிட்டது. இதனால் மக்களனைவரும் இவ்வரசின் கீழ் தமக்கு நேர்மையான நீதி, மனிதாபிமான அணுகுமுறை எதுவும் கிடைக்குமென எதிர்பார்க்க முடியாமையினால் போராடவேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டு உள்ளனர். அரசின் செயல்முறைகளில் நம்பிக்கை கொள்ள முடியாமையினால், வெறுக்க வேண்டிய நிலைக்கும் எதிர்க்க வேண்டிய நிலைக்கும் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.



இரண்டாவதாக, உள்நாட்டில் இத்தகைய எதிர்ப்பை சம்பாதித்துக் கொண்ட அரசு சர்வதேச ரீதியாக ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச்சேர்ந்துள்ளது. அமெரிக்காவின் கைப்பொம்மையாகப் போயுள்ளது. "80-ம் ஆண்டில் கொழும்பில் கூடுவதெனத் தீர்மானிக்கப்பட்ட" இந்து சமுத்திரத்தைச் சமாதானப் பிராந்தியமாகக் கோரும் மாநாட்டை இன்னும் கூட்டாததும், தென்காசியப்பிராந்தியத்தில் அமெரிக்க நண்பர்களான "ஆசியான்" (ASEAN) கூட்டமைப்பில் அங்கத்துவம் பெற்றதும் தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தை நசுக்க இசுரேலை வரவழைத்ததும், அண்மையில் ஜே. ஆர். பாகிஸ்தானின் இராணுவ சர்வாதிகாரி சியா-வுல்-ஹக்குடன் கைகோர்த்துக் கொண்டதும் இன்னும் பலவும் ஜே. ஆர். ஏகாதிபத்தியத்துடன் தம்மை இனம் காட்டத்துணை நின்றன. இவ்வாறு அரசு, தனது நடுநிலைமைக் கொள்கையிலிருந்து நழுவிப்போய் ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச்சேர்ந்துள்ளமையானது உலக சமாதான விரும்பிகளின் நலனுக்கு எதிரானதாகும். இதனால் உலகின் சோசலிச முகாமும், விடுதலைக்காகப் போராடும் நாடுகளும் புரட்சிகர சக்திகளும், ஏகாதிபத்திய எதிரிகளும் ஒடுக்கப்பட்டுப் போராடும் எமது மக்களின் போராட்டத்தை ஆதரிக்கவும் அங்கீகரிக்கவும் செய்வர் என்பது வெளிப்படை. இதனாலேயே அரசு, இது தமிழ்பேசும் மக்களின் போராட்டம் என்பதனை மறுதலித்து, "பயங்கரவாதப் பிரச்சினை"யாகவும் இலங்கையை சிவப்பாக்க எத்தனிக்கும் மார்க்சிய-லெனினிச-கம்யூனிச சக்திகளின் சதி என்றும் இன்னபிறவாறாகவும் பிதற்றத் தொடங்கியுள்ளது.

இவ்வாறு நாம் கூறுவதை கொச்சைப்படுத்து சிலர் "ஏதோ வெளிநாட்டில் இருந்து துருப்புகளை வரவழைக்கப் போவதாகவும்" "எண்ணெய்ச் சட்டியில் இருந்து தப்பி நெருப்புக்குள் பாய முயற்சிப்பதாகவும்" இன்னும் பலவாறாகவும் குறை கூறுகின்றனர். இவர்களுக்கு நாம் சொல்லக்கூடிய ஒன்றுதான். ஒரு புரட்சியாளன் ஒரு முறை கூறியதுபோல, "குஞ்சு பொரிப்பது முட்டைதான், ஆனால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடைகாத்தல் என்றபெயரில் ஒரு வெளிப்புறத்தாக்கம் இல்லையானால் ''குஞ்சு பொரிப்பது எப்படி சாத்தியமில்லையோ, அப்படித்தான் ஒரு புரட்சியில் வெளிப்புறச் சக்திகளின் செயற்பாடுகளும்'' அதாவது புரட்சியில் தீர்க்கமான பாத்திரம் மக்களுக்கும், அகமுரண்பாடுகளுக்கும்தான். ஆனால் புறச்சூழல் சாதகமாக இல்லாவிட்டால் புரட்சி பிசுபிசுத்துப் போகும் என்பதைக் கவனத்தில் எடுக்கவேண்டும் என்பதைத்தான்.

இந்தச் சூழ்நிலையைப் புரிந்து கொண்டால், எமது மக்கள் போராட வேண்டிய நிலைமையினை உணர்ந்துகொள்ளலாம். இந்நிலைமைகளும், இவைகள் மக்கள் மத்தியில் பிறப்பித்த உணர்ச்சிகளின் வெளிப்பாடுகளுமே இயக்கங்களாகும். அதாவது மக்களிடம் உள்ள எதிர்ப்புணர்ச்சியின் வெளிப்பாடுகளே இயக்கங்களின் செயற்பாடுகள். இதனை எதிரி புரிந்து கொண்டிருப்பதாலேயே சுடப்படும் அனைவரும பயங்கரவாதிகளாகக் காட்டபபடுகின்றனர். போராட்டத்தை முன்னெடுக்கும், வழி நடத்தும், பொறுப்பு இயக்கங்களிடம் இருக்கிறது. இந்த இயக்கங்கள் தங்களுக்கெனச் சில போராட்ட வழிமுறைகளைக கடைப்பிடிப்பதாகக கூறுகின்றன. ஒரு சாரார் ''கெரில்லாப் போராட்டமே தமது வழிமுறை'' என்றும் இன்னும் ஒரு சாரார் ''ஒட்டுமொத்தமான மக்கள் போராட்டம்; ஒரே தாக்குதல்' 'அதுவே இறுதித்தாக்குதல்'' என்றும் இன்னும் சிலர் தாக்குதல்களே எமது எண்ணம் என்றும், இன்னும் சிலர் மக்கள் ரீதியான ஒரு எழுச்சி ஒன்றைத் தோற்றுவித்தல் என்றும் பலவிதமான சிந்தனைகளின் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றனர்.

## அராஜகவாதம் விடுதலைப் போராட்டமல்ல.

ஆனால் இவை ல்லாவற்றையும் மறுதலித்தும்நிராகரித்தும் செயல்படும் சிலர் ''அராஜகம்'' தான போராட்ட வடிவம் எனக்கருதுகின்றனர். அதாவது அரசுக்கு எதிராக செயற்படுகின்றோம் என்ற உணர்வின் அடிப்படையில் கண்



மூடித்தனமாக செயற்படுவதனை ''அராஜகம்'' என வரையறை செய்யலாம். தனிநபர்களின் நலன்களை முதன்மைப் படுத்தும் இவ் அராஜகவாதம் சமூக நலனுக்கும் ஏன் சோசலிச நிர்மாணத்திற்கும் முற்றிலும் விரோதமானது. பொதுசனங்களின் அன்றாட அத்தியாவசியத் தேவைகளான உணவு விநியோகம், வைத்திய வசதிகள், செய்திப் பரிவர்த்தனை, போக்குவரத்து. மின்விநியோகம் போன்ற துறைகளைச் சீர்குலைக்க எடுக்கப்படும் முயற்சிகள்; சேவை அடிப்படையில் செயலாற்றும் இந்நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் கொள்ளைகள் என்பவற்றால் மக்கள் பெரும் பாதிப்புகளுக்கு உடனடியாக இலக்காகுவது நிச்சயம். உதாரணமாக செய்திப் பரிமாற்றத்துறையில் தொலைபேசிகளின் பங்கு முக்கியமானது. ஆனால் தொலைபேசிக் கம்பிகளைத் தமது சொந்த நலன்கருதி அறுத்துச் செல்வதும், பின் காவலிடப்படாத அக்கம்பிகளைப் பாவித்து, சட்டவிரோத மின் பாவனைக்குப் பயன்படுத்துவதும் அராஜகவாதத்தின் வெளிப்பாடுகள். அதேபோல் கமநலத் திணைக்களத்திற்குச் சொந்தமான நெல்லைக் கொள்ளையடித்துவிட்டு, இது சிங்களநாட்டுக்கு அனுப்பப்பட இருந்தது எனக்கூறுவதும் கூட அராஜகத்தனத்தின் வெளிப்பாடே. அதாவது விடுதலைப் போராட்டத்தின் பெயரில் சிவில் நிர்வாகம் சீர்குலைக்கப்பட்டு இருப்பதனை தமது நலனுக்குப் பயன்படுத்தும் இச்சக்திகள் தானடித்த மூப்பாக எம்மை யார் கேட்கமுடியும் என்ற தோரணையில் செயல்படுவது சமூகத்திற்குப் பெரும் கேடு பயப்பதாகும். அராஜகவாதமா? சோசலிசப் போராட்டமா? என்னும் தமது நூலில் இப்பிரச்சினைகள் குறித்து தெளிவாக விளங்கவைக்கும் தோழர் ஜே. வி ஸ்டாலின் பின்வருமாறு கூறுகிறார். ''மார்க்சிசம், அராஜகவாதம் ஆகிய இவ்விரண்டும் சோசலிசத்தை அமைப்பதற்காகப் போராடுவதாகச் சொல்லிக்கொண்ட போதிலும் இவை இரண்டும் முற்றிலும் மாறுபட்ட கொள்கையின் அடிப்படையில் எழுந்தவை. அராஜகவாதம் தனிமனிதனை மையமாகக் கொண்டது. தனி மனிதனின் விடுதலை பொதுமக்களின் விடுதலைக்கு முதற்படி ஆகும். தனி மனிதன் விடுதலை பெறும்வரை பொது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களின் விடுதலை சாத்தியம் இல்லை: எனவே ' ஒவ்வொன்
றும் தனி நபருக்காக'' என்பது அராஜகவாதிகளின்
கொள்கை மார்க்சியம் பொதுமக்களை மையமாகக்கொண்
டது. தனிமனிதனின் விடுதலைக்கு முதற்படி பொதுமக்களின்
விடுதலையே ஆகு . அதாவது பொதுமக்கள் விடுதலை பெறும்
வரை தனிமனிதனின் விடுதலை சாத்தியமில்லை. எனவே
'ஒவ்வொன்றும் மக்களுக்காக'' என்பது மார்க்சியக் கோட்
பாடு. எனவே அராஜகவாதமும் மார்க்சியமும் போராட்ட
தந்திரத்தில் மாறுபட்டவை என்பது மட்டுமல்ல. அவை
ஒன்றையொன்று மறுக்கும் இருவேறு கோட்பாடுகள்'' ஆகும்
என்பதைப் பொதுமக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

## போராட்ட முறைகளின் வளர்ச்சியும் இன்றைய நிலையும்

இந்தப் பின்னணியில் நாம், எமது மக்களின் போராட்ட.
முறைகளில் ஏற்பட்ட வளர்சசி பற்றியும், போராட்ட வடி
வங்கள் வளர்ந்த விதங்கள் பற்றியும் ஆராய்வதோடு, இன்
றைய நிலையையும் புரிந்துகொண்டால், எதிர்கால நடவ
டிக்கைகள் பற்றி எண்கலாம். ஆரம்பத்தில் அதாவது இன
ரீதியான ஒடுக்குமுறை ஆரமபமானபோது சட்ட வரைய
றைகளை மீறாத அமைதியான எதிர்ப்புக்கள், உண்ணாவிரதம்
சத்தியாக்கிரகம் என்ற வகையில் வெளிப்படுத்தப்பட்டன
ஐம்பதுகளின் பின் இது சற்று மாறுதல் கண்டு சாதாரண
சிவில் சட்டங்களை ஓரளவு மீறும் செயலாக சட்டவிரோத
ஊர்வலம், ஆர்ப்பாட்டம், கடையடைப்பு, கர்த்தால் என
விரிவு பெற்றது. இது மேலும் விரிவுபட்டு கறுப்புக்கொடி
கட்டுதல், தேசியக்கொடி எரிப்பு, தேச உடமைகளை நாச
மாக்குதல் என விரிகையில் வலுவான எதிர்ப்பியக்கத்தின
அவசியம் உணரப்பட்டது இத்தகைய ஆயுதந் தாங்கிய
எதிர்ப்பு நடவடிக்கைகள் எழுபதுகளில் உதயமாகின.
தொண்டைமானாறு பாடசாலையில் இடம்பெற்ற குண்டு
வெடிப்பு விபத்தையடுத்து அப்போதையப் பிரதிக் கல்வி
யமைச்சர் சோமவீரசந்திரசிறியின் காருக்குப் பொருத்தப்



பட்ட வெடிகுண்டு என்றவாறாக வன்முறை எதிர்ப்பு சக்திக
ளின் செயல்கள் வேகம் பெற்றன வெடிகுண்டுகள் பொருத்
தல், பார்சல் குண்டுகள் என ஆரம்பித்து அரச ஆதரவுகளை
அழித்தல், உளவுப்படையைச் சிதைத்தல், பொலிஸ் நிலையங்
களைத் தகர்த்தல். இராணுவத்துடன் மோதல் என்றவாறாக
எமது மக்களின் போராட்ட வடிவங்கள் காலத்திற்குக்
காலம் வெளிப்படுத்தப்பட்டன. இந்தவகையான வளர்ச்சி
கள் ஈழத்தின் எல்லாப் பிராந்தியங்களுக்கும் எல்லா மாவட்
டங்களுக்கும் பொதுவாகவே காணப்படுகின்றன.

இன்றைய நிலைமை என்ன? வடக்கைப் பொறுத்தவரை
சாதாரண பொலிஸ் சேவைகள் ஏறத்தாழ முற்றாகச் சிதைக்
கப்பட்டு இராணுவத்துடன் நேரடியாக மோத வேண்டிய
நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. கண்ணி வெடிகளைப்
புதைத்து வைத்தும், ஆயுதப்படை முகாம்களை முற்றுகை
யிட்டும் முன்னணி இயக்கங்கள் இராணுவ செயற்பாடுக
ளில் முன்னேறியுள்ளன. கிழக்கில் பொலிஸ் சேவைகள்
சுமாராக அமுல்ப்படுத்தப்படுவதோடு, ஆயுதப்படையின
ரதும், குடியேறிய குண்டர் கூட்டத்தினதும் செயற்பாடுக
ளினால் மக்கள் துன்பப்பட நேர்கிறது அத்துடன் இப்
பிராந்தியங்களின் இராணுவப் புவியியல் அம்சங்கள் எதிரிக்
குப் பெரும்பாலும் சாதகமாகி விடுகின்றது. மலையகத்தைப்
பொறுத்தவரையில் விழிப்புணர்ச்சி பெறுமல், தொழிற்சங்
கங்களிடம் அன்றாடப் பிரச்சினைகளுக்காக அடிமைப்பட்
டிருக்கும் மனோநிலையும் அரசின் நாசூக்கான அடக்குமுறை
யும். போராட்டத் தயாரிப்புகளைத் தடைபடுத்தும் அம்சங்
களாகும்

## எதிர்காலம் என்ன?

எனவே, எதிர்காலத்தில் பரந்துபட்ட மக்கள் எழுச்சி
ஒன்றை பரந்துபட்ட மக்கள் அணி திரண்ட கிளர்ச்சி
ஒன்றை (Mass Violence) வெவ்வேறுபட்ட தொழிற்துறை
களைச் சார்ந்தவரும், சாதாரண பொதுமக்களும்கூட தமது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிர்ப்பை வெளிப்படுத்தக்கூடிய போராட்ட வடிவம் ஒன்றை இயக்கங்கள் அறிமுகப்படுத்தியாக வேண்டும். இத்தகைய மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்திய பேராட்ட வடிவங்கள் ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த நாடுகளின் அரசியல்-சமூக-பொருளாதார நிலைமைகளுக்கேற்ப அந்தந்த நாட்டு மக்களால் அறிமுகப்படுத்தப்பட்டேயிருக்கிறன. இவற்றை ஆழமாகப் பரிசீலிப்பதன் மூலம் எமது மக்கள் இந்த அரசின் மீது தமக்குள்ள வெறுப்பை எதிர்ப்பை வெளிப்படுத்தும் ஒரு போராட்ட முறையினை அறிமுகப் படுத்தி - அமுல் நடத்துவதன் மூலமே மக்கள் போராட்டம் பன்றை எமது மண்ணில் மலரச்செய்ய முடியும்.



யாவரும் கேளிரென...

15-06-85

# பெண் விடுதலை

நவீன குடும்பத்தில் பெண்மீது ஆணுக்குள்ள ஆதிக்கத்தின் அலாதித் தன்மையும், அவர்களிடையே உண்மையான சமுதாயச் சமத்துவம் நிறுவுவதற்கான அவசியமும், வழிமுறையும் அவ் இருவரும் சட்டத்தில் முன் பூர்ணமாகச் சமநிலையில் இருக்கும்போதுதான் முழு உருவத்தில் வெளிக்காட்டப்படும். பெண்ணினம் முழுவதையும் பொதுத்தொழில் துறையில் மீண்டும் புகுத்துவதுதான் பெண்களின் விடுதலைக்குரிய முதல் நிபந்தனை என்பது அப்போதுதான் தெளிவாகும் இது சமுதாயத்தின் பொருளாதார மூலக்கூறு என்ற தன்மையைத் தனிமைப்பட்ட குடும்பம் பெற்று இருக்கிறதே, அந்தத் தன்மையை ஒழித்துத் தீரவேண்டும். என்று கோருகிறது என்பதும் தெளிவாகும்.

- எங்கல்ஸ் -

அண்மைக் காலங்களில் பெண் விடுதலை பற்றிய உணர்வு பூர்வமான பிரதிபலிப்புக்கள் பல ஏற்படுவதனை அவதானிக்க முடிகின்றது. ''பெண் விடுதலை'' ''தேசிய விடுதலை'' இரண்டிற்குமான 'உறவுகள்' போராட்டங்கள் என்பன பற்றிய கருத்துக்கள் உருவாக்கப்பட்டு, வெளிப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுத்தப்பட்டுள்ளன. முதலில் 'தோழியும்' அதனைத் தொடர்ந்து ''சக்தி'', 'விளக்கு' என இதழ்கள் விரிவு பட்டு பெண் விடுதலைபற்றிய ''தாகம்'' பலரிடையே தோன்றியுள்ளது. பாட்டாளி வர்க்கத் தலைமையில் நடாத் தப்படும் தேசிய விடுதலைப் போராட்டத்தின் மூலம் சோச லிசத்தை நிர்மாணிப்பதன் வாயிலாக மட்டுமே பெண் விடு தலை என்பது பெற முடியும் என ஒரு சாராரும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் இரண்டறக் கலப்பதன் மூலம் பெண் விடுதலையை உத்தரவாதப்படுத்தலாம் என ஒரு சாராரும், பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளின் தனித் தன்மையைக் கருதி எல்லா வர்க்கத்திலும், எல்லாத் தரத்திலும் உள்ள பெண்கள் என்ற வகையில் ஓரணியில் திரட்டப்படல் வேண்டும் என ஒரு சாராருமாக வெவ்வேறு கருத்துக்கள் முன் வைக்கப்பட்டிருக்கும் நிலையில் இவை பற்றிச் சிறிது நோக்கலாம்

## பெண்ணடிமைத்தனமும் அதன்வரலாறும்

பெண்ணடிமைத்தனம் அல்லது பெண்களை அடிமை என எண்ணும் போக்கு இன்றோ, நேற்றோ திடீரென ஏற் பட்டதொன்றல்ல. மனித குல வரலாற்றின் ஆரம்பத் தில் அனுமதிக்கப்பட்டிருந்த உறவு முறைகளினுல் தாயு ரிமை அல்லது தாய்வழிச் சந்ததி என்பதே வலிமை பெற் றுத் திகழ்ந்தது காடுகளில் வேட்டையாடித் திரிந்த மனிதன் சாதுவான மிருகங்களை வளர்க்க ஆரம்பித்து, அதன் பின் விவசாயம் விருத்தியுறத் தொடங்கியதும் தனிச் சொத்து ரிமை தோற்றம் பெறலாயிற்று இவ்வாறு தனிச்சொத்து உரிமை தோற்றம் பெற்றதும் சொத்துக்களைப் பேணும் வாரிசும் அதற்காக தனக்கே உரித்தான குழந்தையும் தேவைப்பட்டது. இந்த அடிப்படையிலேயே ஆணின் ஆட்சி தனதே எனக் கூடிய குழந்தைகளைப் பெறுவது - தனது சொத்துக்களுக்கு வாரிசு என வரக் கூடியவர்களைப் பெறு வது என்பவற்றை இலட்சியமாகக் கொண்டு ஒருதார மண



முறை வரலாற்றில் தோற்றம் பெற்றது ஆனுல் இந்த ஒரு
தார மணமுறை அதாவது ''ஒருவனுக்கு ஒருத்தி'' என்னும்
கோ பாடு ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஏற்பட்ட சமர
சமான உடன்பாடாக அமையவில்லை. அப்படிப்பட்ட ஒரு
சமரசத்தின் உச்சக்கட்டம் அதுவாக,அதாவது 'ஒருவ
னுக்கு ஒருத்தி'' என்பதுவாக இருந்த போதிலும் நடை
முறையில் ஆண்கள் பெண்களை அடக்கும் ஒரு முறையா,
கவே இது அமைந்தது. இவ்வாறுன ஒரு தார மணமுறை
மிகவும் பாரபட்சமாகப் பெண்களைப் பாதித்தது. பெண்
களுக்கு மறுமணம் என்ற உரிமையையும், விதவைகளுக்கும்
கூட மறுமணம் என்ற உரிமையையும் ரத்து செய்தது.
கணவனைப் பிரிந்து வ ழுதலும் கட்டாயமாகத் தடுக்கப்
பட்டது ''கல்லானுலும் கணவன், புல்லானுலும் புருஷன்''
என்ச் சிருஷ்டிக்கப்பட்ட புராணங்களுக்குள் பெண் புதைக்
கப்பட்டாள். இவ்வாருகப் பார்த்தால் தாய் உரிமை முறை
பறிக்கப்பட்டதுதான வரலாற்றில் பெண்கள் பெற்ற முதலா
வது தோல்வி எனலாம் தாயுரிமை மறுக்கப்பட்டு ஒரு
தார மணமுறை ஒருதலைப்பட்சமாகக் கட்டாயமாக்கப்பட்
டதையடுத்து. பெண்கள் இழி நிலைக்குத் தள்ளப்பட்டனர்,
பணியகளாக்கப்பட்டனர். காம இச்சைக்கு இரையாகி
குழந்தைகளைப் பெறும் சாதனங்கள் என ஆக்கப்பட்டனர்.
இதனுல் தான் ''வரலாற்றில் தேன்றுகின்ற முதல் வர்க்க
விரோதம் ஒரு தார மணத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கு
மிடையே வளர்வதோடு ஒன்றுபடுகிறது; முதல் வர்க்க
ஒடுக்கு முறையே பெண்பாலை ஆணால் ஒடுக்கும் ஒடுக்கு
முறையோடு ஒன்றுபடுகின்றது ஒருதாரமணமுறை வரலாற்
றில் மகத்தானதொரு முன்னேற்றம். ஆனுல் அடிமையோ
டும் தனிச் சொத்துரிமையோடும் சேர்ந்த ஒரு சகாப்தத்
தையே அது தொடக்கிவைத்தது'' என ஏங்கெல்ஸ் குறிப்
பிடுகிருர.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பெண்களும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளும்

எமது சமூகத்தில் பெண்கள் பல்வேறுன பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றுர்கள் என்பது வெளிப்படை மதச்சடங்குகள், சம்பிரதாயங்கள் என்ற ரீதியிலும் பண்பாடு, கலாச்சாரம் என்ற வகையிலும் அடக்கப்படுகின்றுாகள். இவற்றை எதிர்நோக்க முடியாதவாறு உள்ளமைக்கு முக்கிய காரணம் பொருளாதார ரீதியாக சுயபலம் அற்றவர்களாக, பொருளாதாரத்தில் பிறரைச் சார்ந்து நிற்பவர்களாகப் பெண்கள் விளங்குவதாகும். மகள் தகப்பனிலும், மனைவி கணவனிலும், தங்கியிருக்கும் சூழல்களில் தகப்பன், தமையன், கணவன் ஆகியோரது மனவிருப்பங்களை நிறைவேற்றும் கட்டாயத்துடன் அவளது தலைமீது சுமத்தப்படுகிறது. மதச்சடங்குகள், சம்பிரதாயங்கள் அனைத்தும பெண்களைக் கட்டுப்படுத்தி அடங்கி நடத்தலே அவளுக்குரிய பண்பு என போதனை செய்கிறது. பண்பாடு, கலாச்சாரம் என்ற போர்வைக்குள் புகுந்து கொண்டு சமுதாயம் பெண்ணை அடுக்களை வாசியாக்கி அவளது சிந்தனையையும் செயற்பாடுகளையும் மழுங்கடிக்கின்றது.

இதே வேளையில் இன்னுமொரு விடயத்தையும் இங்கு சுட்டிக் காட்டுதல் பொருந்தும் போலிப் பெருமைகளுக்கும், வீண் ஆடம்பரங்களுக்கும ஆட்பட்டுப் பேணும் பெண்கள், தமக்குள் தாமே சிறைப்பட்டுப் போயுள்ளனர். அடுத்த வீட்டில் இருப்பது போல என்பதில ஆரம்பித்து தமது சக்திக்கும் வருமானத்துக்கும் மீறிய செலவீனங்களைத தேடி போலியான பெருமைகளையும் வீணான ஆடம்பரங்களையும் பேண முயல்கின்றனர். இந்த வகையானேர் தங்கள் நடத்தைக்காக பெருமளவில் தங்கிநிற்றல் (பொருளாதாரத்தில்) அத்தியாவசியமாகிப் போய்விடுகின்றது. இப்போலிப் பெருமைகள், வீண் ஆடம்பரங்கள் என்ற சின்னச் சிறைகளை உடைத்து வெளியேறுவதன் மூலமே பெண்கள் சமுதாய மாற்றத்தில் ஈடுபட முடியும். அதாவது சிக்கன வாழ்வு,



போலிப் பெருமைகளை மறுக்கும் செயற்பாடு என்பவற்றை தமதாக்கிக் கொள்ள வேண்டும்.

## போராட்டத்தில் பெண்கள்

இன்றைய எமது சமுதயத்தில் போராட்ட நடவடிக்கைகளில் பெண்களும் ஈடுபட்டு நிற்கின்றனர் என்பது பலரும் தெரிந்த ஒன்றே. "எனது மகன் எங்குள்ளான் என்பதை நானறியேன் அவன் உயிருடன் உலகில் இருந்தால் போர்க்களத்தில் தோன்றுவான். ஆனல் அந்தப் புலி வாழ்ந்த குகை இதுதான்" என்று சொன்ன தமிழ்ப் பெண்ணை புறநானூற்றில் காணலாம். இதுபோல் கணவனையும் தகப்பனையும் தமையனையும் போர்க்களத்தில் இழந்த பின்பும் தனது சிறிய மகனை வேல் கொடுத்து களத்திற்கு அனுப்பிய தாயையும்; எனது மகன் புறமுதுகிட்டோடி மடிந்திருந்தால், அவன் பால் குடித்த இந்த முலைகளை அறுத்தெறிவேன் எனச் சபதமிட்டு களம் சென்று மகனைத் தேடிக்கண்டு பெருமையுற்ற அந்தத் தாயையும் புறநானூறு எமக்குக் காட்டுகின்றது.

இவைகள் இன்று வெறும் இலக்கிய உதாரணங்களல்ல. இன்று நடைமுறையில் உள்ள சூழலும் இதுதான். மகனைப் பிரிந்த தாயும், கணவனைப் பிரிந்த மனைவியும். காதலனைக் காணத்துடிக்கும்காதலியும் எனப்பலர் சந்திப்புகளுக்கு ஏங்கித் தவிக்கின்றனர் என்பது வெள்ளிடை மலை. இந்தச் சந்திப்புக்களைக் கூட சாத்திய மற்றதாக்கி இருக்கும் இன்றைய சூழல், போராட்டம் வேகத்தோடு முனைப்புப்பெற்று இருப்பதன் வெளிப்பாடாகும். ஆனல் இச்சூழலிலும் இன்றைய எமது பெண்களின் பொதுவான மனோபாவம் என்ன? நாம், எமது குடும்பம், அதன் எதிர்காலம் என்ற வகையில் மட்டும் சிந்தித்து அந்தக் குடும்ப நலனை மையமிட்டுச் சுயநலவாத அடிப்படையில் செயற்படுகின்றனர். போராட்டம் எல்லாம் சரிதான் என்று கூறிக்கொண்டே தமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி விடுகிறவராய் உள்ளனர் இதேபோல் தமது எல்லைகளை வீட்டுக்குள் மட்டும் குறுச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிக்கொண்டு வெளி உலகைப் பார்க்க மறுக்கின்றனர். அப்படிப் பார்ப்பவர்களில் பெரும்பாலானோர் பங்கேற்க மறுக்கின்றனர்.

மறுபுறத்தில் போராட்ட நடவடிக்கையில் ஈடுபடும் பெண்களை ஒரு விதமாகப் பார்க்கவும் சித்தரிக்கவும் இந்தச் சமூகம் முற்படுகின்றது. ஒரு சில இடங்களில் போராளிகளுக்கிடையில் ஏற்பட்ட தவறான நடத்தைகளும், அதன் பின்னான மோசமான செயல்களும் சிலரை வெறுப்புக் கொள்ளச் செய்வது உண்மையே. ஆனால் இத்தகைய அடாவடித்தனங்களைத் தடுக்கும் உறுதியான மனோதிடமும், தெளிவான சிந்தனையும் கொண்டு பெண்கள் அணிவகுப்பதன் மூலமே இவற்றை இல்லா தொழிக்க முடியும். சமூகத்தில் அரைப்பங்கினராக உள்ள பெண்கள் தங்கள் காத்திரமான பங்களிப்பை வழங்குவதன் மூலமே போராட்டத்தை முன்னெடுப்பது சாத்தியமாகும். இவ்வகையில் சிறைசென்ற தம் புதல்வர்களை மீட்கக் கோரி அணிதிரண்ட அன்னையர் ஒரு முன்னணியின் கீழ் நிகழ்த்திய ஆர்ப்பாட்டமான செயற்பாடுகளை நாடறியும்.

## இன்றைய சூழலும் பெண்கள் விடுதலைப் போராட்டமும்

இன்றைய எமது இக்கட்டான சூழ்நிலையில் தேசிய இன ரீதியான அடக்கு முறை கூர்மைப் படுத்தப்பட்டு இன விடுதலையை மையமிட்டுப் போராட்டம் முன்னேறியிருக்கும் நிலையில் 'பெண் விடுதலை' சம்பந்தமான போராட்டம் எப்படியிருக்க முடியும்? எமது பெண்கள் எதிர் நோக்கும் முக்கிய பிரச்சனைகளான 1. பொருளாதார ரீதியாக பிறரைச் சார்ந்து நிற்றல் 2. மதக்கட்டுப்பாடுகள் 3. பண்பாடு கலாச்சார ரீதியான கட்டுப்பாடுகள் என்பவற்றில் இருந்தும் விடுதலை பெறுவதற்குரிய முதல் நிபந்தனை 'பெண்ணினம் முழுவதையும் மீண்டும் பொதுத் தொழில் துறையில் ஈடுபடுத்துவதுதான்'' எனக் குறிப்பிட்டார் ஏங்கல்ஸ். இந்த



வகையான பொதுத் தொழில் துறைகளை நிறுவும் அதிகாரத்தைப் பெறக் கூடியதும், பெண்களினது பிரச்சனைகளைத் தெளிவாகப் புரிந்து கொண்டு நடவடிக்கையில் ஈடுபடுவதும் சாதாரணமான மக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் சக்திகளினாலேயே சாத்தியப்படும் என்பது தெளிவானது.

தேசிய இன விடுதலைக்கான போராட்டம் கூர்மையடைந்திருக்கும் நிலையில், பலவாறான சக்திகள் இப்போராட்டத்தை முன் எடுத்து வருகின்றன. இந்தச் சக்திகள் அனைத்தும் தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் இரண்டறக் கலந்து முன்னணியில் நிற்பதன் மூலம்,விடுதலைப் பயணத்தைத் துரிதப் படுத்த வேண்டும் என அவாவுகின்றன. இதே வேளையில் இப் போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் சிலர் அனுபவித்த கசப்பான அனுபவங்கள் பெண்களைப் பெருமளவில் பாதிப்பதாயுள்ளதனை உணரக்கூடியதாக உள்ளது. ஆதலினால் சாதாரண மக்களின் அபிலாசைகளைப் பிரதி பலித்துப் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசை அமைக்கக் கூடிய சக்திகளின் வெற்றியே பெண்களின் விடுதலையையும் நிதர்சனமாக்கும் என்பதை உணரவேண்டும். அதில்லாமல் பெண்களுக்குரிய பிரச்சினைகளை மறுதலித்து தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் கலக்கச் செய்வதோ; அல்லது தனித்து மகளிருக்கான ஒரு அமைப்பினூடாக பெண்கள் போராட்டத்தை முன்னெடுக்கலாம் என்பதோ நடைமுறைக்கு ஒவ்வாததாகவே இருக்கும்.

எனவே இன்றைய சூழலில் தேசிய இனவிடுதலைப் போராட்டம் கூர்மையடைந்துள்ள வேளையில் முன்னணியில் இருக்கும் சக்திகளை இனம் பிரித்து சாதாரண மக்களின் உண்மையான நலன்களைப் பிரதிபலிக்கும் சரியான சக்திகளுடன் இணைந்து அவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் பெண் விடுதலைக்குரிய பாதையை விரைவு படுத்தலாம். அத்தகைய சக்திகளின் சரிய செயற்பாடே ஈழப் போராட்டத்தை நிதர்சனமாக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**யாவரும் கேளிரென...**

15 - 07 -85

## எமது மக்களின் அரசியல் அபிலாசைகள்

பரவலாக அதிகாரப் பரவலாக்கம் பற்றிப் பேசப்படுகின்ற வேளையில் மாகாணசபை, மாநில சுயாட்சி பற்றிய எண்ணங்களும் முளைவிடுவதை அவதானிக்க முடிகின்றது. அமைதிச் சூழல் ஏற்பட்டு மாநிலசுயாட்சி அல்லது மாகாண சபை அல்லது அது போன்ற ஒன்று கிடைத்தால் ஏற்றுக் கொள்ளலாமா? இயக்கங்கள் இதுபோன்ற தீர்வையொட்டி என்ன நிலைப்பாட்டை எடுக்கக்கூடும்? ஈழம் விடுதலை பெற்று ஒரு தனியரசாக நிலைபெறுதல் சாத்தியமா? என்பன போன்ற பலவிதமான கேள்விகளும் இன்று பொதுமக்கள் அரங்கில் கிளப்பப்படுவதை சமூகப் பற்றுள்ள அனைவரும் உணர்வர்.

இன்னுமொரு மட்டத்தினர் இந்தியாவில் உள்ளது போன்ற மாநில ஆட்சிமுறை ஒன்று கிடைத்தால் போதுமானதே என்ற திருப்தி உணர்வு மேலோங்க 'பெடியளாலதான் வீண் பிரச்சனை'' என்ற மனப்போக்கில் உள்ளனர். அரசாங்கம், மக்களுக்கும் இயக்கங்களுக்கும் இடையில் இடைவெளி ஏற்படுத்த முனைந்து செயற்படுகின்றது. இதனைப் புரிந்தோ, புரியாமலோ சில இயக்கங்களைச் சார்ந்த இளைஞர்கள் பொதுமக்களோடு நடந்துகொள்ளும் முறை மனதுக்கு இசைவானதாக இல்லை.



எனவேதான் (1) இலங்கையின் நிர்வாகமும் அதிகாரப் பரவலாக்கமும், (2) இந்தியாவில் மத்திய மாநில உறவுகள் (3) எமது அபிலா[illegible] தான் என்ன? என்ற அடிப்படையில் இவகு பரிசிலனை [illegible] செய்யலாம்.

1948ற்கு முன்ன[illegible] இலங்கை வெள்ளை ஏகாதிபத்திய வாதிகளின் நேரடி [illegible] ஆளப்பில், அவர்களது படை பலத்தால் கட்டுப்[illegible] பட்டு இருந்தது. 1948ல் இலங்கை சுதந்திரம் பெற்[illegible] து இலங்கை தனக்கென ஒரு நிர்வாக அமைப்[illegible] ந்தியோடு, பாதுகாப்பு, வெளியுறவு, நாணய[illegible] ன்ற துறைகளில் தன்னைதிக்கத் தோடு செயற்[illegible] ந்தியது எனினும் மகாதேசாதிபதி (Gover[illegible] பாராளுமன்றத்தின் அங்கீகாரத் தோடு. பிரதம [illegible] பெரிபிடும் பிரிட்டிஷ் மகா ராணியினால் நியமி[illegible] ர் மகா தேசாதிபதியே சம் பிரதாயப்படி நா[illegible] கத்தின் தலைவராகச் செயற் பட்டுவந்தார் மக்[illegible] தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பா[illegible] ன்றமும், பாராளுமன்ற அங்கத் தவர்களால் தெரி[illegible] செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட செனட் ச[illegible] காட்டு நிர்வாகத்தின் தலைமை அமைப்புக்களாகச் [illegible] ட்டன பாராளுமன்றத்தில் தனி அங்கத்தவர் பிரே[illegible] மசோதககளாகி பாராளுமன் றத்தினால் ஏற்றுக்[illegible] பட்டு செனட்டினால் பரிசீலிக் கப்பட்ட பின் அ[illegible] ஒப்புதலோடு சட்டமாகும் இத்தகைய சட்ட[illegible] வில்நிர்வாகம் நடைமுறைக்கு கொண்டுவரும் பொ[illegible] லீசார் அநுசரணையாகச் செய லாற்றுகின்றனர். [illegible] ரால் கட்டுப்படுத்த முடியாத நிலையில் இராணுவ[illegible] ழக்கப்படும்.

1948ல் சோல்பரி [illegible] செய்யப்பட்ட அரசியல்யாப் பிற்கிணங்க செயற்பட்ட இலங்கை 72ம் ஆண்டில் புதிய அரசியலமைப்பு ஒன்றைப் பிரகடனம் செய்தது, இலங்கையை ''இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு'' எனப் பிரகடனம் செய்த இவ் அரசியலமைப்பு பிரிட்டிசாருடன் இருந்த தொடர்பை முறித்தது. அதாவது ஐனாதிபதியை

யா-5

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாராளுமன்றமே நியமனம் செய்தது. செனட்சபை [illegible]ல் பது ஒழிக்கப்பட்டது பாராளுமன்றமும் அதன் தலைவர் என்ற வகையில் பிரதமரும் சட்டமியற்றல், அமுலாக்கல், மற்றும் நிர்வாக அதிகாரங்களைக் கொண்டிருந்தனர் ஜனாதிபதி பிரதமரின் ஆலோசனைகளையும், சிபாரிசுகளையும் ஏற்றுக் கொண்டு அதற்கேற்ப செயற்படுபவராக இருந்தார். 82ல் ஐக்கிய தேசியக்கட்சி அரசினால் அறிமுகம் செய்யப்பட்ட புதிய அரசியலமைப்பு ஜனாதிபதியை நேரடியாக மக்கள் தெரிவு செய்யவும், ஜனாதிபதியே சகல நிர்வாக நிறைவேற்று அதிகாரங்களையும் கொண்டவராகவும் விளங்க வகை செய்தது

## மாவட்ட சபைகள்

ஆரம்பத்தில் 57ல் பண்டா- செல்வா ஒப்பந்தம் ஏற்பட்டபோது மாவட்ட சபை பற்றி முன்மொழியப்பட்டது. மாவட்ட சபைகள் (1) கமத்தொழில் (2) கூட்டுறவுத் தொழில் (3) காணி காணி அபிவிருத்தி (4) குடியேற்றத் திட்டங்கள் (5) கல்வி (6) சுகாதாரம் (7) கைத்தொழில் (8) மீன்பிடித்தல் (9) மின் சக்தி (10) சமூக சேவை (11) நீர்வளங்கள் (12) தெருக்கள் என்பனவற்றில் அதிகாரம் செலுத்தக் கூடியதாக இருக்க வேண்டும் எனவும், வரையறுக்கப்பட்ட எல்லைப் பிரதேசங்களில் ஆட்சி செலுத்தவும், மாகாண எல்லைகளை மீறியேனும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டசபைகள் ஒன்றிணைந்து செயற்படக்கூடிய வகையிலும், வடக்கில் ஒரு மாவட்ட சபையும், கிழக்கில் இரண்டு அல்லது மூன்று சபைகளும் ஏற்படுத்தப்படவும் வேண்டும் என இணக்கம் காணப்பட்டிருந்தது. மாவட்ட சபைகளுக்கான பிரதிநிதிகளை மக்களே நேரடித் தேர்தல் மூலம் தெரிவு செய்யவும் வகை செய்யப்பட்டிருந்தது. எனினும் இந்த பண்டா – செல்வா ஒப்பந்தம் நடைமுறைக்கு வரவில்லை. இதன் பின்னர் 65 மார்ச்சில் டட்லி-செல்வா ஒப்பந்தம் ஏற்பட்டது. ஒரு நிலையான அரசாங்கத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் காணப்பட்ட



உடன்பாட்டில் மாவட்ட சபைகள் பற்றிப் பின்வருமாறு கூறப்பட்டது. "இரு தலைவர்களாலும் பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளக்கூடியவகையிலான அதிகாரங்களைக் கொண்ட மாவட்ட சபைகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், எனினும் தேசிய அவசியம் கருதி மேற்படி சபைகளுக்கு பணிப்புரை வழங்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு இருத்தல் வேண்டும் என உடன்பாடு காணப்பட்டது எனினும் இந்த ஒப்பந்தம் கூட அமுலுக்கு வரவில்லை, இவற்றின் பின்னர் 80ம் ஆண்டில் மாவட்ட அபிவிருத்திச்சபைஎன்பது அறிமுகம் செய்யப்பட்டது. ஏற்கனவே கிராமசபை நகரசபை, பட்டினசபை போன்ற ஸ்தல ஸ்தாபன சபைகளுக்கு இருந்த அதிகாரங்களையும் கடமைகளையும் ஒருமுகப் படுத்திய அதிகாரங்களையும் கடமைகளையும் கொண்டதாகவே மாவட்ட அபிவிருத்திச்சபை அமைந்தது. இப்பிரச்சனைக்குரிய தீர்வு எனக் கூறிக்கொண்டு அறிமுகம் செய்யப்பட்ட இச்சபையானது தெளிவான எந்த அதிகாரங்களையும் கொண்டிருக்காமையினால் உதாரணமாக குடியேற்றம் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் தனது ஆதிக்கம் அற்றும் ஒரு மாகாணத்திற்கு உள்ளேயாவது வெளியே இயங்கும் வெவ்வேறு மாவட்டசபைகள் ஒருங்கிணைந்து செயற்படுவதனைகூட கட்டுப்படுத்தியது. இவற்றின் காரணத்தால் தமிழ் பேசும்மக்கள் மத்தியில் வெளிப்பட்ட எதிர்ப்பின்விளைவாக இவைகளும் நடைமுறையில் செயலிழந்து போயின.

## இந்தியாவிலுள்ள ஆட்சிமுறை;

இந்தியா பல் வேறுபட்ட மொழி, கலாச்சாரப் பண்பாட்டுப் பாரம்பரியங்களைக்கொண்ட மக்கள் வாழும் பரந்த தேசம் எனவே பல்வேறு மக்களையும் திருப்திப்படுத்தும் முகமாக மொழிகள் அடிப்படையில் மாநிலங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த மாநில அரசாங்கம் ஒவ்வொன்றும்கல்வி சுகாதாரம் உள்ளூர் போக்குவரத்து, சிறிய மத்தியதர தொழில்துறைகள், சமூகசேவைகள், பொது ஒழுங்கு, பொலிஸ், உள்ளூராட்சி, விவசாயம். காடுகள், மீன்பிடித்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துறை, மாநில வரி விதித்தல் என்பவற்றில் பூரண அதிகாரம் கொண்டிருக்கும். ஜனாதிபதியின் அங்கீகாரத்தைப் பெற்ற மாநில சட்டசபை ஒன்றின் சட்டம் மத்திய பாராளுமன்றச் சட்டத்திற்கும் மேலாகச் செல்லுபடியாகும். இதேவேளை பாதுகாப்பு, வெளிவிவகாரம், தொடர்புகள், வங்கிகள், நாணயம், நாணயமாற்றம், வரிவிதிப்பு, பெருந்தொழிற்துறைகள் போன்றவற்றில் மத்திய அரசு முழுக் கட்டுப்பாட்டையும் கொண்டிருக்கும். இவை விட சிவில் நடைமுறைகள், திருமணமும், விவாகரத்தும், நிதியங்கள் தொழிலாளர் நலன், சமூகக் காப்புறுதி, பொருளாதார சமூகத் திட்டமிடல் ஆகிய அம்சங்களில் மத்திக்கும் மாநிலத்திற்கும் பொதுவான சட்டமியற்றும் அதிகாரம் உண்டு. பின்வரும் முறைகளில் மத்திய மாநில உறவுகள் கட்டுப் படுத்தப்பட்டுள்ளன.

1. மத்திய அரசு மாநில அரசுக்கு வழங்கும் பணிப்புகளும், சிபார்சுகளும்

2. மாநில அரசு நிர்வாகத்தை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என மாநில ஆளுநர் சமர்ப்பிக்கும அறிக்கையின் பேரில் ஜனாதிபதி மாநில அரசை எதிர்த்து தனது ஆட்சியைப் பிரகடனப்படுத்த முடியும்.

3. அகில இந்திய சேவைகளின் அடிப்படையில் மூன்றுவது தொடர்பு ஊர்ஜிதம் செய்யப்படும்.

4. மத்திய அரசினுல் மாநில அரசுக்கு வழங்கப்படும் நிதியுதவி.

இவற்றைவிடச் சில யூனியன் பிரதேசங்களும் இந்தியா, அரசில் உண்டு. பாண்டிச்சேரி, மிசோராம், அந்தமான் கோவா போன்றவை யூனியன் பிரதேசங்களாகும். இவை ஒருவகையில் மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் நடத்தப்படும் ஆட்சிகளாகும். மாநில அரசுகளைப் போலல்லாமல் அவற்றைவிடக் குறைந்தளவிற்கே அதிகாரம் படைத்தவைகளாக உள்ளன.



## எமது நிலைப்பாடு:

இனப்பிரச்சனையின் தீர்விற்காக முன்வைக்கப்படும் தீர்வுகள் எமது மக்களின் பாதுகாப்பையும அமைதியான நல் வாழ்க்கையையும் உறுதிப்படுத வேண்டும், ஒப்பந்தம் கிழிக்கப் பட்டால் அல்லது மீறப்பட்டால் மீண்டும் அதனை நிலைநிறுத்த தேவையான பலத்தை எம்மவர்கள் கொண்டிருக்க வேண்டும் ஆனல் அரசு தரப்பில் மாவட்ட சபைகள் பற்றிய பிரேரனையும், ஒரே மாகாணத்தில் இயங்கும் மாவட்ட சபைகள் விரும்பினல் இணைந்து செயற்படும் தன்மை கொண்டதாகவும் அமையலாம் என்ற எண்ணமும முன்வைக்கப்படுகின்றது உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், வடக்கில் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னர், முல்லைத்தீவு, கிளிநொச்சி என ஐந்து மாவட்டங்கள் உண்டு, ஒரே மாகாணத்தில் உள்ள மாவட்ட சபைகள் இணைந்து மாகாண சபைகளை உருவாக்கக்கூடும். ஆனல் வெவ்வேறு மாகாணங்களுக்கு இடையே இணைப்பு துண்டிக்கப்படுகின்றது இது எம்மவரைப் பிளவுபடுத்திவிடும் ஒரு அம்சமாகும் அத், துடன் மாவட்ட சபைகளிற்கு அம்மாவட்டங்களில் பூரண கட்டுப்பாடு இருக்கக்கூடிய வகையிலும் அமையவில்லை.

எனவே தான் எமது மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் வகையிலும் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் எமது போராட்டம் முன்னெடுக்கப் பட வேண்டியது தவிர்க்க முடியாதது. கல்வி, சுகாதாரம். பொது ஒழுங்கு போக்குவரத்து, தொழிற்துறைகள், சமூ சேவைகள். காணி-காணி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன் பிடி, விவசாய விருத்தி, போன்ற துறைகளில் பூரண அதிகாரமும்! எமது மக்களின் பாதுகாப்பை ஊர்ஜிதம் செய்யும் அம்சங்களில் இணக்கமும் கொண்டதான ஒரு தீர்வு மட்டுமே மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய வழி அமைக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

எந்த நாட்டிலும் மக்கள் நம்பிக்கையோடும் அமைதியாகவும் வாழ்வது அந்நாட்டின் ஆயுதப்படைகளின் பொறுப்பிலேயே உள்ளது. ஆயுதப்படைகள் நாட்டு மக்களின் பாதுகாவலராகச் செயலாற்றுவர் என்கிற நம்பிக்கையோடு மக்கள் அரசாங்கத்தின்மீது கொள்ளும் நம்பிக்கைக்கு அடிப்படையாக அமைகின்றது. ஆனால் எமது நாட்டு நிலையைப் பொறுத்த வரையில் நூற்றுக்கு நூறுவீதம் சிங்கள-பௌத்த சோவனிஷத்தால் வளர்த்தெடுக்கப்பட்ட சிங்களக் காடையர்களின் கூட்டமாகவே ஆயுதப்படைகள் விளங்கி வருகின்றன. அவை முகாம்களில் இருக்கலாம். ஆனால் வெளியே வரும் எந்தச் சந்தர்ப்பத்திலும் எமது மக்களோடு ஒட்டாத அந்நியராகவே உள்ளனர். இந்த ஆயுதப்படைகளையும் அவர்களின் செயற்பாடுகளையும் ஒருபோதும் நம்பி இருக்க முடியாது. எனவே இறுதியாகவும் உறுதியாகவும் கூறக்கூடியது யாதெனில், காலாகாலத்திற்கும் எமது மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தாத எந்தச்சபையும் எமது மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய உதவாது. இவ்வாறில்லாத எதையும் நம்பி ஏமாந்துபோக எமது மக்கள் தயாராக இல்லை



**யாவரும் கேளிரென...**

15-08-85

## கட்டுப்பாடு

''புரட்சிகரக்கட்சிக்குள் கட்டுப்பாடு என்பது இல்லையானால் அங்கு தோழமை என்பதற்கே இடமில்லை''

புனிதமான இலட்சியம் ஒன்றை நிறைவேற்றும் பொருட்டு ஆயுதம் தாங்கிய போராளிகளாகிய நாம் அதற்கான பொறுப்புணர்வுடனும் நிதானத்துடனும் செயற்பட வேண்டியது தலையாய கடமையாகும். அடிப்படையிலேயே மக்களை நேசித்து, அந்த மக்கள் படுகின்ற சிரமங்களில் இருந்து அவர்களை விடுவிக்கும் பொறுப்பை எமது தோள்களில் சுமந்து கொண்டிருக்கிறோம் என்பதனை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் மறந்துவிடுதல் ஆகாது.

ஆனாலும், வீரப்போராளிகள் எனத் தம்மை எண்ணிக் கொள்ளும் சிலர் மக்களிலும் பார்க்க தம்மை மேம்பட்டவர்களாக எண்ணும் போக்கு வளர்ந்து வருகின்றது என்பதையே அண்மைக் காலத்தில் இயக்கங்களின் பெயரால் இடம்பெறும் அடாவடித்தனங்களில் காணமுடிகின்றது. மக்களின் விடுதலைக்காக ஆயுதம் தரித்தவர்கள் என்ற மகத்துவத்தை மறந்து ''மக்களின் எசமானர்கள் நாமே'' என்ற விதமாகச் சிலர் செயற்படுவதையிட்டு விடுதலையின் மீது உண்மையான ஆர்வமும் அக்கறையும் கொண்ட எவரும் கவலைப்படாமல் இருக்கமுடியாது.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## யார் புரட்சிவாதி ?

ஒரு சாதாரண நபர் எந்த ஒரு நோக்கத்திற்காகவும் தம்மை வீடுதலை இயக்கமொன்றுடன் இணைத்துக் கொள்ள முன்வரலாம். ஆனாலும் இணைந்து செயற்படுவது என ஆரம்பித்த பின்னர் தனது சொந்த நோக்கங்கள் சுய இச்சைகள் என்பவற்றை மறந்து இயக்கத்தின் கொள்கைகள், செயற்பாடுகள் என்பவற்றுடன் பூரணமாகத் தன்னை இணைத்துக் கொள்ளுதல் வேண்டும். புரட்சிகர இயக்கத்தின் கட்டுப்பாடுகளை தன் உணர்வுபூர்வமாக ஏற்றுக்கொண்டு அவற்றை நடைமுறைப் படுத்தல் வேண்டும். நிர்ப்பந்தக் காரணமாகவோ அல்லது வெளியிலிருந்து கிடைக்கும் தூண்டுதல் காரணமாகவோ வேண்டா வெறுப்புடன் செயற்படும் நபர்கள் இயக்கத்திற்கு எப்போதும் சுமையாகவே இருப்பர்.

எனவேதான் தன்னல மறுப்பு, நேர்மையான அர்ப்பணிப்பு, தளராத மனவுறுதி, திடமான கொள்கைப் பிடிப்பு என்பவற்றைத் தனது குணும்சங்களாகக்கொண்டு துணிவும், தன்னம்பிக்கையும் மிக்கவனாகத் திகழ்பவனே ஒரு சரியான புரட்சிவாதியாக மாறுதல் முடியும்.

இதில்லாமல் பொறுமை, தன்னிச்சையான செயற்பாடுகள், கீழ்ப்படியாமை என்பன போன்ற குணும்சங்களைக் கொண்டு வெறும ஆயுதப் பிரியர்களாகவும், ஆயுத முனையில் மக்களை அச்சுறுத்தும் மனப்பாங்கு கொண்டவர்களாகவும் இவர் செயற்படுவது வேதனைக்குரியது. மேலும், மக்களுக்கு மேலானவர்களாகத் தம்மை எண்ணி, மக்களின் எசமானர்கள் போல் நடக்கும் இத்தகையோரது செயற்பாடுகளே அராஜகத்தின் ஆரம்பம் எனலாம்.

1. இயக்க வேலைகளில் பொறுப்புணர்வு அற்று- இருத்தல்.



2. இயக்கத்தின் பொருட்கள், ஆவணங்களைப் பராமரித்தலில் கவனக்குறைவாக நடந்து கொள்ளுதல்.
3. விதிகப்பட்ட கடமைகளை நிறைவேற்ருது இருத்தல்.
4. இயக்க நலன்களைவிட சொந்த நலன்களுக்கு முன்னுரிமை அளித்தல்.

என்பன போன்ற செயற்பாடுகளே இயக்கத் தோழர்கள் மத்தியில் மனவெறுப்பையும், நம்பிக்கையீனத்தையும் வளர்க்கும் அம்சங்களாகும். இத்தகைய போக்குகளையும் சிந்தனைகளையும் உதறித்தள்ளி, ஈடுபட்ட பாதையில் சரியான திசைவழியில் முன்னெறிச் செல்லுவதே நல்லபுரட்சிவாதிகளாக நம்மை மலரவைக்கும். இனி இவை ஒவ்வொன்றையும் எடுத்துத் தனித்தனியாக இவற்றினுல் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை விளக்குவது அவசியப்படாது.

## தோழர் என்பவர் ...

தோழர் என்ற சொல் வெறுமனே நட்பைக் குறிக்கும் ஒரு சொல் அல்ல. நண்பர், சிநேகிதர், அயலவர், உறவினர் எனப்பல உறவின் முறைச் சொற்கள் எமது மொழியில் பயன்பாட்டில் உள்ள பொழுதிலும் ஒரு இலட்சியத்திற்காய் எம்மை அர்ப்பணித்துக் கொண்ட எம்மவரிடையே தோழர் என்னும் சொற்பதமே விரும்பி உபயோகிக்கப்படுகின்றது. ஏனெனில், தோழமை என்பதனை அதன் உண்மையான அர்த்தத்தில் உணர்வுபூர்வமாய் புரிந்து கொள்ள வேண்டும் என்பதுதான். "தோழன் என்பவன் தோள் தருவான்" என்றும் "உயிர்காப்பான் தோழன்" என்றும் நமது பழமொழிகளில் தோழன் என்பது சிறப்பிக்கப்படுவது யாவரும் அறிந்ததே. உண்மையகாவே விசேட ஆபத்தான சந்தர்ப்பங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களிலும் கூட சக தோழனின் துயரத்தில் பங்கேற்கும் அதாவது தோள் கொடுக்கும் மனப்பக்குவமும் தோழனைக் காப்பாற்றத் துடிக்கும் திடநெஞ்சமும் உறுதியும் கொண்டவர்களே ''தோழர்கள்'' என்ற சொல்லுக்கு இலக்கணமாவர்.

இதில்லாமல் வெறுமனே சகஜமாகப் பழகுவதாலோ. அல்லது இறந்த பின்னர் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டு, சுவர் நிறைய எழுதுவதாலோ தோழமை மலர்ந்து விடாது. இன்னும் சிலர் தோழமை என்பதனைத் தவறான அர்த்தத்தில் புரிந்து கொண்டோ என்னவோ தோழர்கள் விடுகின்ற தவறுகளை முடிமறைக்க முற்படுவோராக உள்ளனர். ஏனைய தோழர்கள் மத்தியில் தவறுகள் சுட்டிக் காட்டப்படுதலை ஒரு காட்டிக் கொடுப்பு போலக் கருதுகின்றனர். இது ஒரு தவறான மனோபாவம் ஆகும். ஒரு முறை ஒரு சந்தர்ப்பத்தில் விடும் தவறு திருத்தப்படவில்லை என்பதே மீண்டும் மீண்டும் அதே தவறுகளை இழைக்கச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திவிடும். எனவே தான் பொறுப்பான ஒவ்வொரு நடவடிக்கையிலும் வேலைகளைப் பகிர்ந்து கொள்பவனும், அவ்வேலைகளில் உண்மையான ஈடுபாட்டுடன் செயற்படுபவனுமே தோழன் என்னும் சொல்லுக்குதகுதியானவனாகிறான். மேலும் இயக்கத்தின் வளர்ச்சிப் போக்கில் ஆண்-பெண் பேதமின்றித் தோழர்கள் நெருங்கிப் பழகவேண்டிய சந்தர்ப்பங்கள் பல ஏற்படலாம். இத்தகைய தனிமைச் சந்தர்ப்பங்களை இயலுமான வரை தவிர்த்து நடப்பதுடன், குறிப்பாகப் பெண் தோழர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாயும், அச்சமின்றி இயல்பாகப் பழகத் தூண்டுவோராகவும் நாம் இருத்தல் அவசியம். இதைவிடுத்து ''இராணுவ சோசலிசம்'' என்று கூறிக்கொண்டு தவறாக நடப்பதோ அல்லது பெண்மையை அவமதிக்கும் நோக்குடன் செயலாற்றுவதோ, ஆணாதிக்க குணம்சத்தின் வெளிப்பாடுகள் ஆகும். மிகுந்த எச்சரிக்கையுடன் இவ்விடயத்தில் நாம் விளங்கவில்லையென்றால் பலவிதமான தவறுகளுக்கும் வித்திட்ட



வர்களாகிவிடுவோம். அதாவது சுருக்கமாகச் சொல்வதானால் இயக்கத் தோழர்களிடையே தோழமை என்கிற உணர்வுபூர்வமான உறவைத் தவிர வேறெந்த உறவுகளும் மேலோங்குவதனை அனுமதிப்பது என்பது இயக்க நலன்களுக்குப் புறம்பானதாகிவிடும்.

உணர்வு பூர்வமாக கட்டுப்பாடுகளை ஏற்றுக்கொண்டு செயற்படும் புரட்சிகர இயக்கமொன்றினுள் உட்பிரச்சனைகள் அதாவது தோழர்களிடையிலான முரண்பாடுகள் மோதல்களாக வெடிக்கும் சாத்தியம் இருக்க முடியாது. அதில்லாமல் வெறும் மிரட்டல்களினாலும், ஆயுதப்பலத்தினாலும் ஒரு ஒழுங்கமைப்பான இராணுவ அணியை நிறுவிப் பாதுகாப்பது என்பது மலத்த சிரமமானது. ஆகவே மீண்டும் கூறுவதானால் புரட்சிகர இயக்கமொன்றின் ஒவ்வொரு தோழனது பாத்திரமும் வரலாற்றில் மிக முக்கியமானது, அந்த முக்கியமான பாத்திரத்தை ஆற்றக்கூடியவர்களாக அதற்கான பரிபக்குவம் உடையவர்களாக ஒவ்வொருவரும் விளங்க வேண்டும். அப்படிப்பட்ட தோழர்களின் ஒன்று பட்ட செயற்பாட்டினால்தான் ஈழத்தின் விடுதலை சாத்தியப்படும் - சமதர்ம சமூக அமைப்பு என்பது நிதர்சனம் ஆகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யாவரும் கேளிரென...

25-09-85

## திம்புப்பேச்சு

ஈழவர் பிரச்சனைககு அரசியல் தீர்வு காணும் முயற்சியில். திம்புப் பேச்சுவார்த்தை பற்றி அரசியல் அவ்தானிகள் கவனஞ் செலுத்த வேண்டியுள்ளது. இப்பேச்சுவார்த்தை முயற்சியானது ஒரு தீர்வுக்கு இட்டுச் செல்லாத நிலையிலும், முழுமையாக முறிவடைந்து விடாத நிலையிலும் தொடர்கிறது. திம்புவல் ஈழப்பிரதிநிதிகளின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து. புது டில்லியில் ஸ்ரீலங்கா அரசுக் குழுத் தலைவர் ஹெக்டர் ஜெயவர்த்தனா சுமார் பத்து நாட்கள் வரை தங்கியிருந்து செயல்திட்ட அறிக்கை வரையில், இந்திய அரசுடன் இணக்கம் கண்டார் என்பதும் கவனிக்கப்பட வேண்டிய தொன்றாகும்.

இந்த நிலையில் திம்புவில் நடைபெற்றதென்ன? இந்தப் பேச்சவார்த்தைகளின் அரசியல் விளைவு என்ன? தொடர்ந்தும் ஈழவிடுதலைப் போராட்டத்தில் இந்திய அரசின் பாத்திரமென்ன போன்ற கேள்விகளுக்கு விடைகாண வேண்டியுள்ளது.

திம்புவில் ஸ்ரீலங்கா அரசினரையும் ஈழப்பிரதிநிதிகளையும் சந்திக்க வைத்த காரணிகளைப் பற்றி பொதுவாக நோக்கலாம் உலகவரலாற்றிலே போராட்ட சத்திகளுக்கும் அடக்குமுறையாளர்களுக்குமிடையில் இயல்பான வலிமை



அடிப்படையிலேயே பேச்சு வார்த்தைகள் இடம் பெற்றிருப்பதைக் கண்டிருக்கிறோம். ஆனால் ஈழப் போராட்டத்தில் தற்போது அவ்வகையான தோற்றம் ஏற் பட்டதா என்பதும், உருவாக்கப்பட்ட தோற்றப்பாட்டிற்கு பின்புலமாக உள்ள சத்திகள் எவை என்பதும் துல்லியமாக ஆராயப்பட வேண்டியதாகும்.

போர்நிறுத்தம். பேச்சுவார்த்தை என்ற நிலை உருவாவதற்கு- அநுராதபுரத் தாக்குதலை அடுத்து ஜெயவர்த்தனா அரசு வட்டாரங்களில் ஏற்பட்ட பதற்ற நிலைமையை தணிக்க வேண்டியும் இயக்கங்களின் பரவலான தாக்குததக்குத் தன்னைச் சரியாகத் திடப்படுத்திக்கொள்ளவும். இந்திய-இலங்கை கடல் பாதுகாப்பைவலுவாக்க ஒரு சமூக கால அவகாசம் தேவைப்பட்டதாலும், ஸ்ரீலங்கா அரசிற்குப் போர்நிறுத்த உடன் பாட்டின் அவசியம் முதன்மைப் பட்டது.

உலக அரங்கில் இந்தியதுணைக் கண்ட நாடுகளுக்கிடையே இந்தியாவின் 'நல்லெண்ணத்தை' உறுதிப்படுத்த இலங்கையில் தோன்றிய பிரச்சனைகளின் சுமூகமான தீர்வுக்கு பேச்சுவர்ர்த்தையின் முக்கியத்துவத்தை இந்திய அரசு வலியுறுத்த வேண்டியதாயிற்று.

இந்தப்பின்னணியின் தாக்கத்தில் போர்நிறுத்த விருப்பத்திலுள்ள முக்கியத்துவத்தை நாடும் ஸ்ரீலங்கா அரசினதும். பேச்சுவார்த்தை முக்கியத்துவத்தை உணர்த்தும் இந்திய அரசினதும் சூழ்நிலைத்தாக்கத்தை உணர்ந்த நிலையிலேயே ஈழப் போராளிகளின் திம்புவிஜயம் அமைந்தது.

சர்வதேச அரங்கில் ஈழப்போராட்டத்தைத் தெளிவுபடுத்தவும், சிறிலங்கா அரசினது உண்மையான சொரூபத்தினைக்காட்டவும், அடுத்த கட்டமாக எதிர் நோக்க உள்ள போராட்டத்திற்கான உறுதியான தயாரிப்புகளை மேலெடுக்கச் செய்யவுமே சூழல்தாக்கத்தினால் உந்தப்பட்ட ஈழப் போராளிகள் தற்போதைய போர்நிறுத்தப் பேச்சு வார்த்தை கட்டத்தை நோக்குகிறார்கள் என்பது தெளிவு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## முதல் சுற்றுப் பேச்சுக்கள்

யூலை 8ம் திகதி ஆரம்பமான முதல்சுற்றுப் பேச்சு வார்த்தைகளில் பரஸ்பர அறிமுகங்களைத் தொடர்ந்து, யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல்கள் பற்றியே பெரும்பாலும் இருதரப்பினரும் பேசிக்கொண்டனர், இச்சுற்றுப் பேச்சுக்களின் இறுதி நாட்களில் ஸ்ரீலங்கா அரசாங்கம் இனப் பிரச்சனைத் தீர்வுக்காக பழைய மாவட்ட சபை யோசனைகளையே முன் மொழிந்தது தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட ஈழவர் பிரதிநிதிகள் அனைவரும் ஒட்டு மொத்தமாக ஒரே குரலில இதனைக் கண்டித்தனர். இதனை தொடர்ந்து ஈழவர் பிரதிநிதிகள் அனைவரும் நான்கு அம்சங்களைக் கொண்டதான ஒரு கோரிக்கையைக் குறைந்தபட்சமாக முன்வைத்தனர்.

இதில் குறிப்பிடப்பட்ட நான்கு அம்சங்களாவன:

1. தமிழ் பேசும் மக்களின் தேசிய தனித்துவத்தை அங்கீகரித்தல்

   Recognition of the separate National Identity of the Tamils.

2. அவர்களின் பாரம்பரிய பிரதேசங்களை ஏற்றுக் கொள்ளல்.

   Respect for the Integrity of the Traditional Tamil Homeland.

3. சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல்.

   Recognition of the Right to self - Determination.

4. இலங்கையைத் தாயகமாகக் கருதும் அனைவருக்கும் குடியுரிமை வழங்குதல்.

   Citizenship Rights for all Tamils who hadChosen to have sri LanKa their home.



## இரண்டாவது சுற்றுப் பேச்சுக்கள்

இத்துடன் முதற்சுற்றுப் பேச்சுக்கள் நிறைவுபெற்றன. இரண்டாவது சுற்றுப் பேச்சுக்கள் ஆகஸ்ட் 12ம் திகதி மீண்டும் ஆரம்பமாகின. இதில் ஈழவர் பிரதிநிதிகளால் சமர்ப்பிக்கப்பட்ட நான்கு அம்சக் கோரிக்கையை நிராகரித்த அரசுக்குழு "இலங்கை என்ற ஒரே அரசினுள் அதிகாரப் பரவலாக்கம்" மூலமாக இனப்பிரச்சனைக்கு தீர்வு காண முற்பட்ட இந்த வேளையில் ஈழவர் பிரதிநிதிகள் தாம் முன்வைத்த கோரிக்கைகளுக்கான வரலாற்றுபூர்வமான நியாயங்களை எடுத்துக்காட்டி இதற்குக் குறைந்ததான அதிகாரப் பரவலாக்கம் அனைத்தும் வெறும் கண்துடைப்பே என வாதிட்டனர். இதே நேரத்தில் வவுனியாவில் அரச படையினர் புரிந்த காட்டுமிராண்டித்தனமான அத்துமீறல்களைக் கண்டித்து ஈழவர் பிரதிநிதிகள் அனைவரும் பேச்சுவார்த்தைகளைப் புறக்கணித்தனர்.

ஆனால் பேச்சுவார்த்தைகள் குழப்பமுறுவதை விரும்பாத இந்திய அரசு தன் விசேட தூதுவராக திரு. ரமேஷ் பண்டாரியை திம்புவுக்கு அனுப்பிவைத்தது திம்புவில் இருதரப்பினரோடும் தனித்தனியாகப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட ரமேஷ் பண்டாரி இணக்கம் ஏற்படுத்தப் பெரிதும் முயன்றார். ஆனால் எந்த இணக்கமும் ஏற்படாத நிலையில் அனைவரும் திம்புவில் இருந்து வெளியேறினர். இதனிடையே ஈழவர் போராட்ட இயக்கங்களின் தலைவர்களைப் புதுடில்லிக்கு அழைக்க இந்திய அரசு முயன்றபோதும் முடியவில்லை. புதுடில்லியில் ஸ்ரீலங்கா அரசுக்குழுவின் தலைவர் ஹெக்டர் ஜெயவர்த்தன தனித்து நின்று செயற்திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதில் இணக்கம் கண்டார்

### அரசியல்விளைவு

இந்த நிலையில் திம்புப் பேச்சுக்களின் தொடக்கம் முதல் இன்று வரையான நிகழ்வுகளை முக்கியமான மூன்று கட்டங்களாக நாம் பார்க்க முடியும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1. இந்திய—இலங்கை அரசுகளுக்கு இடையிலான பேச்சுக்கள்.

2. இந்தியாவிற்கும் ஈழவர் பிரதிநிதிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள்.

3. ஈழவரிடையிலுள்ள மிதவாதிகளுக்கும் போராளிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள்.

கடந்த வருட இறுதியில் பதவியேற்ற பிரதமர் ராஜீவ் காந்தி தனது முதலாவது வெளிநாட்டுப் பயணமாக சோவியத்யூனியனுக்கு விஜயம் செய்த பின்னர், வாஷிங்டனுக்குச் செல்வதற்கான தயாரிப்பு வேலைகளை மேற்கொண்டிருந்தசமயத்தில், ஸ்ரீலங்கா அரசின் சார்பாக லலித் அத்துலத்முதலி, முதலில் டில்லிக்கு விரைந்தார் ஆனால் அவரது விஜயம் பெருமளவு மாறுதல்களை ஏற்படுத்தாத நிலையில் நேரடியாக ஜே ஆர் ராஜீவ் உயர்மட்டச் சந்திப்புக்கு ஏற்பாடாகியது. சந்திப்பு திட்டமிடப்பட்டதைக் காட்டிலும் ஒரு சில நாட்கள் நீடித்து, பங்களா தேஷ் புயல் அழிவுகளை இருவருமாகப் பார்ப்பதுவரை விரிவு பட்டுச் சென்றது. (இப் பேச்சுவார்த்தையின் விபரங்கள் பூரணமாகப் பகிரங்கப்படுத்தப்படவில்லை.) இச் சந்திப்பின் ஒரு பெறுபேருக சிறீலங்கா அரசும் ஈழவர் பிரதிநிதிகளும் ஒரே மேசையில் சந்தித்துப் பேசவேண்டும் என்று இந்தியா விரும்பியது. அவ்வாருன பேச்சுவார்த்தைகளின் பயனுக தமிழ் பேசும் மக்களின் பிரச்சனையைத் தீர்க்கக் கூடியதாக அரசியல் தீர்வொன்றை எட்ட முடியும் என்று, இந்தியா முயற்சித்தது இதனுல்தான் ஈழவர் பிரதிநிதிககளை பேச்சுவார்த்தை மேசைக்கு இட்டுவரச் சில நிர்ப்பந்தங்களையும் இந்தியா பிரயோகித்தது.

ஆனுல் இலங்கையரசோ இந்தியாவின் எதிர்பார்ப்புக்கும். விருப்பத்துக்கும் புறம்பாகப் பழைய உளுத்துப்போன மாவட்டசபை யோசனைகளையே மீண்டும் முன்வைத்து. முட்டுக்கட்டை நிலையைத் தோற்றுவித்தது எனினும் சாதுரியமாக ஒத்திவைத்ததன் மூலம் முட்டுக்கட்டையைத் தவிர்க்க முயற்கித்த இந்தியா. தன் விசேட தூதுவராக திரு. ரொமேஷ்பண்டாரியை மீண்டும் இலங்கைக்கு அனுப்பி வைத்தது. சுமார் நான்கு நாட்கள்வரை இங்கு தங்கியிருந்த ரொமேஷ் பண்டாரி பல்வேறு சந்தர்ப்பங்களையும் பிரயோகித்து புது ஆலோசனை ஒன்றுடன் இரண்டாவது சுற்றுப் பேச்சுத் தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இங்கு தங்கியிருக்கையில் சிறீலங்கா அரசுப் பிரதிநிதிகளை மட்டுமன்றி எதிர்த்தரப்பு அரசியல்வாதிகளையும் சந்தித்துச் சாதகமான தொரு அரசியல் சூழலைத் தோற்றுவிக முயன்ருர் திரு. ரொமேஷ்பண்டாரி. ஆனுல் சிறிமா பண்டாரநாயக்காவும், அநுராவும் கூட இந்திய அரசின் விசேட தூதுவரைச் சந்திக்க மறுத்துவிட்டனர்.



ஆக ஒட்டுமொத்தமாகப் பார்க்குமிடத்து இந்திய —இலங்கை அரசுகளுக்கு இடையிலான பேச்சு வார்த்தைகளில், இந்திய எதிர் பார்ப்புகளுக்கு இசைவாக சிறீலங்கா நடந்து கொள்ளவில்லைஎன்றே கருதலாம். யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட உடனேயே அமைச்சர் லலித்தும், இராணுவ தளபதியும் அவசர அவசரமாகத் தென் கொரியா சென்று ஆயுதக் கொள்வனவுப் பேச்சுக்களில் ஈடுபட்டமை, முறையான தீர்வுகள் எதனையும் முன் வைக்காமை, அரசபடையினரின் அத்துமீறல்கள் என்பன வற்றைக் கவனத்தில் எடுக்கும் போது மேற்படி முடிவுக்கே எவரும் வரமுடியும் அதேவேளை இந்தியப் பிரதமர் ஸ்ரீலங்கா அரசையும், ஆயுதப்படையினரையும் குறைகூறி உள்ளமை, தொடர்ந்தும் அப்பாவித் தமிழ்பேசும் மக்கள் கொல்லப்படுவதனையிட்டு எழும்பும் கண்டனக்குரல்கள் என்பவற்றிலிருந்தும் இதனை உரைமுடியும்.

## ஸ்ரீலங்கா இணங்குமா?

எனவேதான் திம்புப் பேச்சுக்கள் குழப்ப நிலையை எய்தியதும், அரசுக்குழுவின் தலைவர் புதுடில்லியில் தங்கச் செய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யப்பட்டார். அவர் அங்கு தங்கியிருந்த சுமார் பத்து தினங்களில் செயல்திட்ட அறிக்கையொன்று தாரிக்கப் பட்டது. அவ் அறிக்கையில் கைச்சாத்திட்டபின் கொழும்பு திரும்பிய ஹெக்டர் நடத்திய பத்திரிகையாளர் மாநாடொன்றில் பதிலளிக்கையில் "முன் முதலிரு எழுத்துக்களை மட்டுமே இட்டுள்ளேன்" எனக் கூறினார் அதாவது செயற்திட்ட அறிக்கையின் நகல் பிரதியில் முழுமையாககையெழுத்திடவில்லை என்று மேற்படி நகல் திட்டத்தை அரசு முழுமையாக ஏற்றுக் கொள்வதில் சிக்கல்கள் இருக்கின்றன என்பதைத் தெளிவுபடுத்தினார். மேலும் ஏறத்தாழ இருவாரங்களுக்கு மேலாகக் கடந்த பின்னரும் கூட மந்திரிசபை மேற்படி நகல் திட்டம் பற்றி காட்டும் அசாதாரணமான மௌனமும், "என்னை யாரும் நிர்ப்பந்திக்க முடியாது" என ஜே ஆரும் "இரண்டுமாகாணங்களை தமிழர்களுக்கு தாரைவார்க்க தயாரா? என பிரேமதாசாவும். பேசியிருப்பதனையும், புதிய யோசனைகளுடன் பீலிக்ஸ், டயஸ் அபயசிங்கதலைமையிலானோர் புதுடில்லி சென்றிருப்பதனையும். பிரதிநிதியமைச்சரின் அமெரிக்க விஜயத்தையும் சேர்த்துப் பார்க்கும் ஒவ்வொருவரும ஸ்ரீலங்கா மேற்படி நகல் திட்டம் பற்றி என்ன கருத்தைக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

## அரசியலமைதி ஏற்படுமா ?

அடுத்ததாக இந்திய அரசுக்கும் ஈழவர் பிரதிநிதி களுக்கும் இடையிலான கலந்துரையாடல்களைப் பொறுத்தவரையில் பெருமளவு விபரங்கள் பகிரங்கப் படுத்தப்படவில்லை என 'லாம். எனினும் மேலெழுந்த வாரியாகப் பார்க்குமிடத்து 'இந்தியாவிலுள்ளது போன்றதான மொழிவாரி மாநிலம், அல்லது "ஒரே நாடு என்ற வகையில் அரசியல் தீர்வு" என்ற அடிப்படையில் நின்று "பூரண சுதந்திரம் கொண்ட ஈழ அரசின் உருவாக்கம" பற்றி மாறுபாடான நிலைப்பாட்டையும் கொண்டுள்ளது என எண்ணலாம், அப்பட்டமான சந்தர்ப்பவாதப் போக்கையும், இலட்சியத்தில் பூரண விசுவாசமும், தன்னம் பிக்கையும் அற்ற சில சத்திகள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி "இடைக்காலத் தீர்வாக ஏதோவொன்றை ஏற்கலாம்,, என்றும் "போராட்டத்தைத் தொடர்ச்சியாக நடத்தலாம்" என்றும் குழப்பமான கருத்துக்களை மக்கள் மத்தியில் விதைத்து வருகின்றனர். ஆனல் இடைக்கலாத் தீர்வென்பதோ, தற்காலிக அரசியலமைதி என்பதோ சாத்தியமான தொன்றாக எண்ண இடமிருப்பதாகத் தெரியவில்லை. முதலில் கூறியபடி ஸ்ரீலங்கா அரசு இணக்கத் தீர்வொன்றைக் காண்பதில் காட்டிவரும் தயக்கம், தென்னிலங்கையிற் செற்படும் எதிர்க்கட்சிச் சக்திகளின் செயற்பாடு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் எவரும் இத்தகைய இடைக்காலத் தீர்வுகளின் சாத்தியப்பாட்டை எற்க முடியும்.



அடுத்ததாக போராளிகளுக்கும் மிதவாதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல்களைப் பரிசீலித்தால் நான்கு பிரதான அமைப்புகளின் கூட்டணியான ஈழத் தேசிய விடுதலை முன்னனி தனது ஸ்திரமான நிலைப் பாட்டைத் தொடர்ந்தும் பேணி வருகின்றது. ஈழத்தேசிய விடுதலை முன்னணியின் நிலைப்பாடுகளுக்கு நேரெதிரான முரண்பாடு எதையும் வேறெவரும் பிரதிபலிக்கவில்லை, இந்த நிலையில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் கொலைக்கும் ஈழத்தேசிய விடுதலை முன்னணிக்கும் சம்பந்தமிருப்பதாகத் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் (PLOT) அதன் தலைவர் உமாமகேஸ்வரனும், கூறியிருப்பது உண்மையில் ஐக்கியத்தைக் குலைக்கும் ஒரு செயலாகவே கருதவேண்டியுள்ளது, இச்சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர்களை ஆதாரங்களுடன் அடையாளம் காட்டாமல்வெறுமனே குற்றம் சுமத்துவது போராட்ட சக்திகளிடையே ஐக்கியம் வளர்வதைக் குலைக்கும் ஒரு செயல் என்றே கருதவேண்டியிருக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஐக்கியத்தின் முக்கியத்துவம்

எனினும் பேச்சுவார்த்தைகளின் ஆரம்பம் முதல் இது காறும் பல சந்தர்ப்பங்களில் ஏகமனதான தீர்மானங்களை வெளியிட்டு வந்துள்ளமை ஈழப் போராட்டத்தை செழுமைப்படுத்தும் ஒன்றெனக் கருத முடியும். போராட்ட சக்திகள் தமக்கிடையே உண்மையான ஐக்கியத்தையும், புரிந்துணர்வையும் வளர்த்துக் கொள்ளுமாயின் ஈழப் போராட்டத்தின் திசைவழியைத் தீர்மானிக்கும் மாபெரும் பொறுப்பைச் சுமக்கும் பக்குவம் பெற்றவர்களாகலாம்.



யாவரும் கேளிரென...

25 - 10 -85

## தேசிய உற்பத்தி

மக்களின் உணர்வுபூர்வமான பங்களிப்பை ஈர்க்க வல்லவையாக:

ஏர் அதன் ஓட்டங்கள்
இல்லை என்றால்- நெல்லின்
வேர் அதன் ஓட்டங்கள்
இல்லையென்றால்
பார் அதன் ஓட்டங்கள்
தானேது? — கோயில்
தேர் அதன் ஓட்டங்ளே
தானேது?

ஏர் மண்ணைக் கிழித்து ஓடவில்லை யென்றால், நெல்லின் வேர்கள் மண்ணில் ஊடுருவிப்பாய வில்லையானால் நாகரீகச் சின்னங்களான கார் மட்டுமன்றி கடவுளின் வாகனங்கள் கூட ஓடிச் செல்வது சாத்தியமற்ற தொன்றாகிப் போகும் என்பதை ஒரு கவிஞனின் மேற்படி வரிகள் தெளிவாக்கியுள்ளன.

ஆம், மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் உற்பத்திகள் மேற்கொள்ளப்படவில்லையானால் வாழ்க்கை எப்படிப் போகும் என்பது கற்பனை பண்ணக் கூட முடியாத ஒன்று. விவசாயம், கைத்தொழில் துறைக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளில் உற்பத்தியைப் பெருக்குவதும் அதுவும் எமது மண்ணில் கிடைக்கக்கூடிய மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் உற்பத்திகள் பெருக்கப்படுவது இன்றைய காலத்தின் ஒரு கட்டாயத் தேவையாகும்.

இந்திய சுதந்திரப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் அண்ணல் காந்தி கதராடை உற்பத்தியைப் பெருக்க தாமே நூல்நூற்றார் என்பதை சரித்திரத்தின் பக்கங்களில் காணமுடியும், அண்ணல் காந்தியின் அகிம்சைப் போராட்டத்தை முற்றாக ஏற்றுக் கொள்ளாவிட்டாலும்கூட தேசிய உணர்ச்சியைத் தூண்ட, அந்நியத் துணியைப்பகிஷ்கரித்ததையும், கதராடைப் பாவனையை ஊக்குவித்ததையும் நாம் புரிந்து கொண்டாக வேண்டும். தேசிய உணர்வின் எழுச்சியின் சின்னமாக கதராடைப் பாவனை வளர்ந்தது கண்கூடு அந்நியர் எதிர்ப்புணர்ச்சியை வெளிப்படுத்த அந்நியத் துணிகள் எரிக்கப்பட்டன. ஆடம்பரப் பொருட்கள் பகிஷ்கரிக்கப்பட்டன. நாட்டின் ஒவ்வொரு சாதாரணக் குடிமகனும் கூட சுதந்திரப் போராட்டத்தில் தனது ஈடுபாட்டை வெளிப்படுத்தவும்- தமது கோபத்தை வெளிப்படுத்தும் ஒரு வடிவமாகவும் இத்தகைய ஒரு போராட்ட வடிவத்தை காந்தி நெறிப்படுத்தினார். இதுபோன்ற வெகுசனப் போராட்டங்கள் சாதாரணக் குடிமக்களின் நாளாந்த வாழ்வில் சம்பந்தப்பட்டதாக மக்களின் உணர்வு பூர்வமான பங்களிப்பை ஈர்க்கவல்லவையாக இருக்க வேண்டியது அத்தியாவசியமாகும். இதை விடுத்து வெறுமனே கோவில் வாசல்களில் உண்ணாவிரதம் இருப்பதையு ஆர்ப்பட்டமாய் கோஷித்து ஊர்வலமாய் போவதுடனும் மட்டும் வெகுசனப் போராட்டங்களை மட்டுப்படுத்துவது மீண்டும் மிதவாத அரசியற் சகதிக்குள் மக்களை சிக்கவைக்கவே பயன்படும் எலலாம் அதுவும் மக்களிடமிருந்து ஆயுதங்கள் அந்நியப்பட்டுப் போகாமல் பாதுகாப்பதாகப் பறைசாற்றிக் கொள்ளும் சிலர் தாமே மக்களுக்கும் ஆயுதங்களுக்கும் பாலமாகப் பயன்படுவதாக எண்ணிக்கொண்டுஎடுக்கும் ஊர்வலமும் உண்ணா நோன்பும் சுயவிளம்பரத்துக்கு மட்டுமே பயன்பட்டுப் போகும்.



போராளிகள் எனப்படுவோர் வெறுமனே ஆயுதங்களைக் கையாளும் கலையில் மாத்திரம் தேர்ச்சி பெற்றிருந்தல் போதாது. அவர்கள் உற்பத்தித் துறையிலும் தேர்ச்சி பெற்றவர்களாகவும் மக்களை நெறிப்படுத்தும் அரசியல் முதிர்ச்சி பெற்றவர்களாகவும் விளங்க வேண்டியது மிக முக்கியமானதாகும். இதுபற்றி வியட்னாமிய வீரப்புதல்வன் ஹோசிமின் ஓரிடத்தில் குறிப்பிடுகையில் போர்க்களத்தில் மட்டும் வீரர்களாய் இருத்தல் போதாது. உற்பத்தித் துறையிலும் வீரர்களாய் விளங்க வேண்டியது மிக முக்கியமானதாகும் என்றார். போராளிகள் என்றால் வெறுமனே கருவிகளைக் கையாளும் நிபுணர்கள் என்றிருப்பின் எமக்கும் அரச இராணுவத்திற்கும் இடையில் வித்தியாசம் இருக்கமுடியாது. அரசாங்கத்தின் கூலிப்பட்டாளங்கள்தான் எந்த வகையான உற்பத்திகளையும் மேற்கொள்ளாத சோற்றுப் பிண்டங்களாக பவனிவரமுடியும்.

மக்களுக்காக—மக்களின் மேன்மைக்காக ஆயுதம் தரித்த நாம் மக்களுக்குச் சுமையாக மாறிவிடக்கூடாது நமது அன்றாடத் தேவைகளையும் அன்றாடச் செலவீனங்களையும் கவனிக்க மக்களின் பணத்தைப் பயன்படுத்துவதையிட்டு மிக விழிப்பாக இருக்க வேண்டும். சிக்கனம்—எளிமை பொறுமை என்பனவற்றைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும். இவ்வாறு இருக்கும் போராளிகளின் கூட்டுறவும், கூட்டுச் செயற்பாடுகளும்தான் ஈழத்தை நிதர்சனமாக்கும் என்பது வெளிப்படை.

எமது மண்ணில் இலகுவாகக் கிடைக்கும் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி எமது மக்களின் அன்றாடத் தேவைகளுக்கென பாவனைப் பொருட்களை உற்பத்தி செய்வதில் நாம் கவனம்செலுத்த வேண்டும். அதிலும் குறிப்பாக வெளிமாவட்டங்களில் இருந்து பெறப்படும் நுகர் பண்டங்களுக்குப் பதிலாக எமது தேசிய உற்பத்திகளை ஊக்குவித்தல் வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாவரும் கேளிரென...

15-11-85

## தோழமை

தனிநபர்களாகயிருந்த இயக்க அங்கத்தவர்களிடையே கூட்டுச் செயற்பாடு,

ஆழ நெடுந்திரை ஆறு கடந்திவர் போவாரோ?
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாரோ?
'தோழமை'' என்றவர் சொல்லிய சொல்லொரு
சொல்லன்றோ?
ஏழைமை வேடன் இறந்நிலன் என்றெனை ஏசாரோ?

இது கம்பராமாயணத்தில் அயோத்தியா காண்டத்தில் ஒரு பாடல், காட்டிற்குச் செல்லும் வழியில் குகனை இராமன் சந்தித்ததாகவும், அவனைத் தன் தோழன் என்று கூறியதாகவும் இதிகாசம் கூறுகிறது, இங்கே எமது கவனத்திற்கு உரியது என்னவெனில் தோழமை என்ற பதம் விளக்கப்பட்டுள்ள விதமேயாகும். இராமன் காட்டிற்குச் சென்ற பின்னால் அவனைத் தேடி வந்த பரதனையும் கூட்டத்தாரையும் கண்ட குகன், பரதன் இராமனை துரத்தி வருவதாக எண்ணி பரதன் மீது கோபப்பட்ட ஒரு தருணத்தை மேற்படி கவிதை வரிகள் மூலம் கம்பன் வர்ணித்துள்ளான். தோழமை என்று இராமன் கூறிவிட்டானே என்பதற்காக ஆறுகடக்கும் பரதனின் முயற்சியைத் தடுக்கவும் அப்படித் தடுக்கும் போது எதிர்படக்கூடிய யானையை நிகர்த்த படையை முறியடிக்கும் தெம்பையும் கொண்டிருந்தது மட்டுமன்றி, இத்தகையதொரு எதிர்ப்பில் ஏழை வேடனாகிய



நான் இறந்தாலும் பரவாயில்லையே எனக் கூறிகின்றான். இதுவே உன்னத தோழமையின் அடிப்படை உயிர் காப்பான் தோழன் என்ற முதுமொழிக்கு இலக்கணமாகிஆபத்திலும் கைகொடுக்கும் உறவுதான் தோழமை. பக்கத்தில் இருக்கும் போது மட்டும் சிரித்துப் பேசிக் கொஞ்சிக் குலாவுவதும், ஒரே கோப்பையில் சாப்பிட்டு ஒரே பாயில் படுத்துறங்குவதும் மட்டும் தான் தோழமை என்றெவரும் எண்ணினால் அது கேவலமானது. இந்தத் தோழமை வெறுமனே வாய்க்கு வாய் 'தோழர்', 'தோழர்' எனக் கூப்பிடுவதனால் மட்டும் மலர்ந்து விடாது என்பது வெளிப்படை. இதனை புரியாத சிலர் 'தோழர்' என்பதும், 'தோழமை' என்பதும் கம்யூனிஸ்ட்டுக்களுக்கு மட்டும் தான் சொந்தம் என்ற வகையில் புரிந்திருப்பது பரிகசிக்கத் தக்கது என்றே கருத வேண்டும்.

இவ்வாறாகத் 'தோழமை' என்னும் பதம் தனிநபர்களில் இருந்து இயக்க அங்கத்தவர்களிடையே கூட்டுச் செயற்பாடு பரஸ்பர புரிந்துணர்வு, நேர்மையான அர்ப்பணிப்பு என்பவற்றை ஏற்படுத்தும் பலமான ஒரே அத்திவாரமாகும். எனவே தோழர்களிடையே பதவிப் போட்டிகள் என்பதோ, குழிபறிப்புகள் கழுத்தறுப்புகள் என்பதோ ஏற்பட இடமிருக்க முடியாது, அற்பசொற்ப சுகங்களுக்காக அல்லாமல் முழு மக்களினதும் ஒட்டு மொத்த நன்மைக்காக–துன்பப்படும் மக்களின் மீட்சிக்காக தமதுசொந்தவாழ்க்கையையும் எதிர்காலத்தையும் அர்ப்பணித்திருக்கும் போராளிகள் மத்தியில் —தோழர்களிடையில் குறுகிய சுயநல அடிப்படைகளில் போட்டியும், பூசலும் ஏற்படுமானால் நாம் எடுத்த இலக்கை தவறவிட்டவர்களாகி விடுவோம் என்பதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும் எமது இலட்சியத்தை தவறவிட்டால், எமது பாதையில். முன்நோக்கிய தடைகளை தகர்த்து வெற்றிப்பாதையில் வீறுநடை போடவில்லையானால் அடுத்த சந்ததியின் பழிப்புக்கும், துன்பத்திற்கும் நாமே வழி சமைத்தவர்களாகி விடுவோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## விடாப்பிடியும் விட்டுக் கொடுத்தலும்

எனவே தோழர்கள் தமது நடத்தையில் சில குணும்சங்களைக் கொண்டிருக்க வேண்டியது அத்தியாவசியமானது என்றே கருதவேண்டும். எளிமையாகவும் இனிமையாகவும் சகதோழர்களோடு பழகுவதனைக் கட்டாயப் பழக்கமாகக் கொள்ளவேண்டும். இந்தஎளிமையும் இனிமையும் தான்பரஸ்பர நட்பு மலரவும், தோழமை ஏற்படவும் அத்திவாரமாகிறது. ஏனைய தோழர்கள் மத்தியில் தன்னைப் பெரியவனாகக் காட்டிக் கொள்வதும், மற்றையவர்களை விடவும் தானே இயக்கப் பற்று மிக்கவன் என்றும், நேர்மையான அர்ப்பணிப்பு தன்னிடம் மட்டுமே உண்டு என்றும் கருதுபவர்கள் போராட்டத்தின் தொடர்ச்சியான வளர்ச்சிப் போக்கில் நீடித்து நிலைக்கும் தன்மையற்றவர்களாக காலப் போக்கில் உதிர்ந்து செல்வதைக் காணக்கூடியதாக இருக்கும். இனிமையாகவும், எளிமையாகவும் பழகுவதோடு, தாம் இயக்கப்போக்கில் காணும் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டித் திருத்தவும், அதேவேளை தம்மிடையே உள்ள குறைபாடுகளை ஏற்றுத் திருத்தவும் உரிய மனப்பக்குவத்தை தோழர்கள் ஒவ்வொருவரும் பெறவேண்டும். அதை விடுத்து இவர் என்ன பெரியவரோ? என்ற அடிப்படையில் எழும் குரோதங்கள் காலப்போக்கில் தனிமனித முரண்பாடுகளைத் (Personality Clash) தோற்றுவித்து குழுவாதத்தையே (Groupism) வளர்க்க வழி செய்யும் தோழர்கள் இயக்க நலனை முன்னிட்டு மனந்திறந்து பேசுபவர்களாகவும் பழகுபவர்களாகவும் மிளிர வேண்டும் கொள்கை ரீதியான விஷயங்களில் விடாப்பிடியான பற்றுதலையும் உறுதியையும் காட்டும் அதேவேளை நடைமுறைப் பிரச்சனைகளில் சகிப்புத் தன்மையையும், விட்டுக் கொடுத்தலையும் வளர்த்துக் கொள்ளுதல் அவசியம். அதில்லாமல் கொள்கைப் பற்றற்று சேறு கண்ட இடத்தில் மிதித்து, தண்ணீர் கண்ட இடத்தில் கழுவிச் செல்லும் மனப்போக்கு எதிர்காலத்தில் இயக்கத்தையும், இனத்தையும் பாதிக்கும் பாரதூரமான ஒரு அம்சமாகும்.



இவ்வாறாகத் தோழர்கள் நடப்பதற்கு அரசியல் முதிர்ச்சி என்பது மிகமிக முக்கியமானதாகும். நடைமுறையில் ஏற்படும் சின்னச் சின்ன வேறுபாடுகளைக் களைந்து, நாம் வரித்துக் கொண்ட இலட்சியத்தின் தொலைநோக்கையும், எமக்குள்ள பாரிய பொறுப்பையும், எமது நீண்ட பயணத்தின் தாற்பரியத்தையும் எண்ணிப் பார்த்து தமது கடமைகளைப் பொறுப்புணர்வுடனும், அர்ப்பணிப்பு மனோபாவத்துடனும் செயலாற்ற வேண்டியது தோழர்கள் ஒவ்வொருவருக்கும் உரியது. நாட்டின் நாலா பக்கத்திலுமிருந்து வெவ்வேறுபட்ட குடும்ப சமூகச் சூழ்நிலைகளில் பிறந்து வளர்ந்த நாம், ஏதோ எமது சுயதேவைகளுக்காகவோ அல்லது சொந்த முன்னேற்றத்திற்காகவோ இந்தப் பாதையை வரித்துக் கொள்ளவில்லை என்பது நிச்சயம். கொள்கை ரீதியான பிணைப்பும், உறுதியான முன்னேற்றத்திற் கொண்ட நம்பிக்கையும், தீர்க்க தரிசனமிக்க செயற்பாடுகளில் கொண்ட பிடிப்பும் தான் எம்மனைவரையும் ஒரே அமைப்பாகக் கட்டிப் போட்டுள்ளது. இந்த அமைப்பின் ஏற்றமும் வளர்ச்சியும் எம்மொவ்வொருவரையும் பெருமை கொள்ளச் செய்யும் அதே நேரம் எமது மக்களின் எதிர்காலத்திற்கு நாம் ஆற்ற வேண்டிய கடமைகளையும் கடக்க வேண்டிய தடைகளையும் தெளிவாக்குகிறது எனவே தோழர்கள் அனைவரும் வழிகாட்டிகள் என்ற பொறுப்பை ஏற்கக்கூடியளவுக்கு அரசியல் முதிர்ச்சி பெறவேண்டியது அவசியமானதாகும்.

## கற்றுக் கொள்ளல்

தோழர்கள் அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டும் என அழுத்தம் திருத்தமாகக் கூறவேண்டியுள்ளது. கற்றுக்கொள்ளுங்கள் என்னும் போது வெறுமனே சிவப்பு மட்டை போட்ட புத்தகங்களிற் காணும் வாசகங்களை மனப்பாடம் செய்து கொள்ளுங்கள் என்று அர்த்தமல்ல; அல்லது இயக்கங்களின் பெயரா அமைப்புகளின் பெயரால் வெளிவரும் வெளியீடுகள் அனைத்தையும் பாடமாக்கிக் கொள்ளுங்கள் என்றும் அர்த்தமல்ல. அல்லது புரியாத தத்துவப் புத்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கங்களைப் புரட்டிக் குழப்பிக் கொள்ளுங்கள் என்பது அர்த்தமல்ல. எம்மைப்பற்றி எமது நாட்டின் பன்டையவரலாறு தொட்டு இன்றுவரையுள்ள நிலைமை பற்றி-எமது நாட்டின் பொருளாதார வளங்களையும், அவற்றை வளர்க்கும் விதங்கள் பற்றி-இன்றைய சமூக அமைப்பின் சீர்கேடுகளையும், அவற்றைக் களையும் வழிவகைகள் பற்றி-இன்னும் இது போல, எத்தனையோ பற்றி அடுக்கிக் கொண்டே போகலாம் ஆனல் இவை எல்லாவற்றையும் படிக்க முடியாவிட்டாலும் பொதுவான பேலோட்டமான அறிவையாவது பெறும் பொருட்டு வாசிக்கும் பழக்கத்தை நாம் அனைவரும் விருத்தி செய்து கொள்ள வேண்டும். வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறன் என்பது முதுமொழி. அதற்கிணங்க ஆயுதங்களை நேசிப்பதோடு திருப்தியடையாமல் வாசிப்பதிலும் எமக்குக் கிடைக்கும் நேரத்தை நாம் நன்குபயன்படுத்திக் கொள்ள வேண்டும் அப்போது தான் எமது சமூகத்தையும் -மக்களையும் வழிநடத்தும் மாபெரும் பொறுப்பைச் சுமக்கும் பக்குவத்தை பெற்றவர்களாக நாம் மிளிர முடியும்.

## மாபெரும் பொறுப்பு

இன்றைய நிலையில் ஈழப் போராட்டத்தை முன்னெடுப்பவர்களாவும், வழிகாட்டிகளாகவும் விளங்கும் நாம் ஒவ்வொருவரும் புரட்சியை நடத்துவதில் ஏதோ முன்னனுபவம் பெற்றவர்கள் அல்ல என்பது உண்மையே. அதாவது ஈழத்திலேயோ அல்லது வேறெந்த நாட்டிலேயோ புரட்சியை வெற்றிகரமாக நடாத்தி முடித்த ஒரு போராட்ட அனுபவத்தை நாம் நேரடியாகச் சந்தித்ததில்லை. எமது முன்னேர்கள் நடந்து வந்த பாதையில் இடறி விழுந்த இடங்களைப் படிப்பினையாக்கி உலக ரீதியில் மற்றைய நாடுகளில் இடம் பெற்ற புரட்சிகள், போராட்டங் ள் என்பன பற்றிப் படித்தும் கேட்டறிந்த அனுபவங்களால் சிந்தனைக்கு மெருகூட்டி இலட்சியத்தின் மீது கொண்ட தளரா உறுதியோடு வளர்ந்து வருகிறேம் என்பது வெளிப்படையானது. எனவே எமக்குள்ளே எமது செயற்பாடுகளையும்—நடவடிக்கைகளையும் பரஸ்பர புரிந்துணர்வுடன் விமர்சன ரீதியாக அணுகி மீள்பரிசீலனை செய்வதன் மூலம் எம்மைச் செழுமைப்படுத்திக் கொள்ளலாம். இவ்வாருன அணுகுமுறையொன்றின் மூலமே சரியான முற்போக்குவாதக் கருத்துக்களால் நாம் புடமிப்படுவதனை உறுதிப்படுத்த முடியும். அப்போதுதான் ஈழவர்களின் விருப்புக்கும் ஆதரவுக்கும் உரித்துடையவர்களாக நாம் திகழ்வதோடு எதிர்காலத்தில் எம்மவரின் அபிலாசைகளையும், வேட்கைகளையும் ஈடேற்றக் கூடியவர்களாகவும் மலர முடியும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யாவரும் கேளிரென...

15-12-85

**ஒன்றிணைக்கும்சக்தி முன்னெடுக்கும்சக்தி ஈழப்புரட்சியாளரின் அமைப்பு**

**ஈரோஸ்**

*நாட்டின் முழு மனித உழைப்பும், வளங்களும் புரட்சிகரப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படல் வேண்டும்.*

—லெனின்

*தலைமை தாங்கும் கட்சியொன்றின் தலைமையின்கீழ் நடைமுறைப் படுத்தப்படும், ஒழுங்குபடுத்தப்பட்ட எழுச்சியில் மக்கட் போரில் ஈடுபடும் அரசியற்படையே நாட்டுக்கு விசுவாசமான உண்மையான படையாக விளங்கும். இதில் உண்மையில் புரட்சிகர வர்க்கங்கள். நிச்சயமாக நாட்டிற்கு விசுவாசமான குழு பல்வேறுபட்ட ஆதிவாசிகள் ஆகியோரை தொழிலாளர் தலைமையின் கீழ். தொழிலாளர் விவசாயிகள் என்ற தேசிய ஒருமைப்பாட்டின் கீழ் அமைக்கப்பட்ட அமைப்புகள் ஆகியன அடங்கும். இவை உண்மையில் போர் அமைப்புக்கு வேண்டிய முன்னணி, பின்னணி ஆகிய எல்லாப் பிரிவுகளுக்குமான புரட்சிகர படை அமைப்பு பொருளாதார கலாச்சார இராணுவ, ஆன்மீக அம்சங்களைக் கட்டியெழுப்பி வளர்த்துக் கொள்கின்றன.*

—ஜெனரல் கியாப்



ஒரு புறத்தில் அரசாங்கம் யுத்தம் ஒன்றை பிரகடனப் படுத்தி தமிழ்பேசும் மக்களனைவரையும் ''பயங்கரவாதிகளாக்கி,'' எமதுமக்களை அழித்தொழிக்க கங்கணங்கட்டிச் செயற்பட்டு வருகின்றது. ஈழத்தின் தென்பகுதியில் அதாவது திருமலை மட்டக்களப்பு. அம்பாறைப் பிராந்தியங்களில் மிக மோசமாக தினமும் தேடுதல் என்ற போர்வையில் கைதுகளும், அழித்தொழிப்பு நடவடிக்கைகளும் நடைபெற்ற வண்ணமாக எமது மக்கள் சொந்த மண்ணிலேயே அகதிகளாக-அனாதைகளாக நிர்க்கதிக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். ''அரசியல் தீர்வு'' காண்பது பற்றி அரசு உரத்துப் பேசிவரும் அதேசமயத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பெருமளவு நிதியும், அமெரிக்க ஆயுதக் கப்பல்களின் வருகையும், தொடர்ந்து இராணுவத்திற்கு ஆள் திரட்டப் படுதலும் போன்ற செயற்பாடுகள் அரசு எத்தகைய தீர்வைக் காண சித்தம் கொண்டிருக்கிறது என்பதைத் தெளிவு படுத்தும்.

நாட்டின் முழு மனித உழைப்பையும். வளங்களையும் ஒன்று திரட்டி புரட்சிகரப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக செயல்படவேண்டிய இத்தருணத்தில் விடுதலைக்காகப் போராட புறப்பட்ட இயக்கங்கள் தமக்குள்ளேயேபலப்பரீட்சையில் இறங்குவதை மக்கள் நிச்சயமாக விரும்பமாட்டார்கள். ஏற்றுக்கொள்ளவும்மாட்டார்கள் எதிரியுடனை மோதலில் ஒன்றுபட வேண்டிய சக்திகள். தமக்குள்ளே மோதிக் கொள்வதனால் மக்கள் மத்தியில் வேதனையும் வெறுப்பும் ஏன் விரக்தியும் தான் மிஞ்சும். இன்றைக்கு விடுதலைக்காகப் போராடும் இயக்கங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பவை ஏதோ திடீரென தான் தோன்றித்தனமாக தோன்றிவிட்ட தலைமைகள் அல்ல என்பதை அனைவரும் அறிவர். அதே வேளையில் போராட்டம் என்பதும், மக்களின் மேம்பாட்டிற்காக உழைத்தல் என்பதும் ஏதோ ஒரு சில இயக்கங்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல. நீண்ட நெடிய வரலாற்றுப் பின்னணியோடு-எத்தனையோ தடைகளையும் மேடுபள்ளங்களையும் தாண்டி, பாரிய இழப்புக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளைச் சந்தித்துத் தரித்து விடுதலைப் போராட்டத்தின் விழுப்புண்கள் பலவற்றைக் கொண்டிருப்பவையே இயக்கங்கள். இவை எதிர்காலத்தைப் பற்றிய தூர நோக்குடனும், தீர்க்கதரிசனத்தோடும் செயற்படவேண்டியது அத்தியாவசியமானது. இதற்கு மாறாக விடுதலைக்காகப் போராட நாங்கள் மட்டும்தான் உரித்துடையவர்கள் என்ற இறுமாப்போடு—எமது செயல்கள் மட்டும்தான், சரியானவை மற்றையவை அனைத்தும் விடுதலைப் போராட்டப் பாதையை திசைதிருப்பிவிடும் எனச் சில அமைப்புகள் சிந்திப்பது விவேகமாகாது. அதனால் சொந்த நலன்களை—ஆசாபாசங்களை மட்டுமன்றி குறுகிய ஸ்தாபன நலன் என்பதிலிருந்தும் விடுபட்டு பரந்துபட்ட பொதுமக்களின் மேன்மைக்காகவும், சமூகத்தின் இனத்தின் நன்மைக்காகவும் செயற்பட இயக்கங்கள் முன்வர வேண்டும். அப்போதுதான் எதிரிக்கு எதிரான யுத்தத்தில் ஐக்கியம் வலுப்பெறும். போராட்டமும் முன்னெடுக்கப்படும்.

போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற ஒரு அமைப்பின் பலம் என்பதை வெறுமனே ஆட்பலத்தை அல்லது விளம்பரத்தை மட்டும் கருத்தில் கொண்டு கணிப்பிடுதல் மிகமிகத் தவறானதாகவே இருக்கமுடியும். முதலாவதாக போராட்ட அணி முன்வைக்கும் அரசியல் கருத்துக்கள் ; அவற்றிற்கு மக்கள் மத்தியில் கிடைக்கும் ஆதரவு ; இந்தக் கருத்துக்களின் அரசியல் எதிர்காலம் ; என்பவற்றைக் கவனத்தில் எடுக்கவேண்டும். இரண்டாவதாக இக்கருத்துக்களை நடைமுறைப்படுத்துவதற்கு இருக்கக் கூடிய வசதிகளும், வாய்ப்புக்களும். மூன்றாவதாக அமைப்பு ரீதியாகச் செயற்படுவதற்குள்ள நிதியாதாரங்கள். நான்காவதாக சர்வதேச ரீதியாக குறித்த அரசியல் கருத்துக்களின் செல்வாக்கு. ஐந்தாவதாக ஆயுத ரீதியான பலமும் அமைப்பின் தோழர்களினது நேர்மையான அர்ப்பணிப்பும். இந்த அம்சங்களைச் சரியான முறையில் கணக்கிடுவதன் மூலமேதான் ஒரு இயக்கத்தின்—அமைப்பின் பலத்தை மட்டிட முடியும். அதில்லாமல் எப்போது ஆரம்பிக்கப்பட்டது ? என்பதை மட்டும்



கவனத்தில் எடுத்து இயக்கத்தின் பலத்தைத் தீர்மானிப்பது கஷ்டமான காரியமாகிவிடும். எதிர் காலத்தின் பாரிய தவறுகளுக்கு வித்திட்டுவிடும்

இந்த நேரத்தில் ஈழப்புரட்சி அமைப்பு ( EROS ) தான் நடந்துவந்த பாதையையும், கடந்துவந்த தடைகளையும் மக்களோடு பகிர்ந்து கொள்ள விழைகின்றது ஏனெனில் நாம் ஒரே அமைப்பாக ஒன்றுபட்டுச் செயலாற்ற தொடங்கிப் பத்து நீண்ட ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டது என்பதை மகிழ்ச்சியோடு நினைவு கூர்ந்து நாம் நடந்துவந்த பாதையில் பதித்து விட்ட காலடிச் சுவடுகளை தொட்டுக்காட்டுவது எந்த விதத்திலும் தவறாகிவிடாது. எழுபதுகளில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலைகள் தமிழ் பேசும் மக்களை விடுதலைபற்றி சிந்திக்க வைத்தது இந்த அரசியல் சூழ்நிலையின் பாதிப்பிற்கு இலங்கையில் வாழ்ந்தவர்கள் மட்டுமன்றி வெளிநாடுகளில் குறிப்பாக இலண்டனில் வாழ்ந்த பலரும்கூட இலக்காகினர். இதன் விளைவாக தமிழ்பேசும் மக்களின் அரசியல், சமூகப் பொருளாதார நிலைமைகளைத் துல்லியமாக ஆராய்ந்த ஆய்வாளர்கள் பின்வரும் முடிவுகளை வந்தடைந்தனர்.

☐ இலங்கை வாழ் சகல தமிழ்பேசும் மக்களுக்கும் விமோசனமளிக்கக்கூடியது, ஈழத்தின் விடுதலையே.

☐ ஈழத்தின் விடுதலை என்பது வெறுமனே அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வது மட்டுமல்ல. சமத்துவப் சமதர்ம சமுதாயம் ஒன்றை அமைக்கும் சோசலிச சமதர்வ அரசை நிறுவுவது என்ற இலக்கையும் உள்ளடக்கியது.

☐ மன்னார் முதல் மட்டக்களப்புவரை பருத்தித் துறை முதல் பதுளைவரை பொத்துவிலும் உள்ளடங்கிய ஈழப் பிராந்தியத்தில் வாழுமனைவரையும் பிரதேச. மத வேறுபாடுகளுக்கப்பால் ஈழவர் எனக்குறித்துக் காட்டியது. அதாவது 'நாம் ஈழவர்; நமது மொழி தமிழ்; நம் நாடு ஈழம்' என்னும் பதாகையினை உயர்த்திப் பிடித்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

□ ஈழப் போராட்டம் சர்வதேச ரீதியாக முற்போக்குப் பாட்டாளி வர்க்கம் நடத்துகின்ற போராட்டத்தின் ஒரு அங்கம் என்பதை தெளிவு படுத்தியதோடு ஆயுதம் தாங்கிய மக்களின் எழுச்சி ஒன்றே ஈழத்தின் விடிவைக் கொண்டுவரும் என்று எடுத்தியம்பியது.

இத்தகைய கருத்துக்களை முன்வைத்த அணிதிரட்டலை ஆரம்பிக்க 75 ஐனவரி 3ல் ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்) ஈழவிடுதலைக்காகத் தன்னை வரித்துக் கொண்டது. ஆரம்பத்திலேயே சர்வதேச ரீதியாகப் போராடும் சக்திகளின் ஆக்கப்பூர்வமான ஆதரவையும் பெற்றுக்கொண்டு, தன் அரசியல் வேலைகளை ஈரோஸ் ஆரம்பித்தது மிகமிகக் குறைந்த அளவு ஆயுதங்களோடும், இமாலயத்தையொத்த பிக்கையோடும், அசாத்திய துணிச்சலும் செய்து முடி அல்லது செத்துமடி என்ற ஆக்ரோசமான அர்ப்பணிப்பும் கொண்டு ஈழப் போராட்டத்தில் தடம் பதிக்கப் புறப்பட்ட போது எம்மை நோக்கிவந்த தடைகள் பலப்பல. 'ஏனடா தம்பி உங்களுக்கு இந்தவேலை' 'உருப்படுகிற வழியைப் பாருங்கோ' என்று இலவச ஆலோசனைகள் வழங்கிய பெரியார்கள் பலபேர். 'கறிக்குதவாத ஏட்டுச் சுரைக்காய்கள்' என்று கிண்டல் செய்தபடியே அவசர அவசரமாகக் களத்தில் இறங்கியோர் பலர். ஆயுத நடவடிக்கைகள் அற்ற அரசியல், நடைமுறையில்லாத சித்தாந்தம் என்று எம்மை ஏளனமாக விமர்சித்தவர் பலபேர். இலண்டனில் தலைமைப் பீடம் ஈழப் போராட்டத்தில் என்ன உருப்படியான பங்களிப்பை வழங்கும் எனக் குத்திக்காட்டிப் பேசியவர்கள் பலபேர். இப்படிப் பல கேள்விக் கணைகளுக்கும், விமர்சனங்களுக்கும், கேலிகளுக்கும் கிண்டல்களுக்கும் பதிலடி கொடுத்து மக்களுக்கு விடுதலைத் தாகத்தை ஊட்டி—போராட்டத்தில் நம்பிக்கையை விதைத்து ; வளர்த்து எதிர்காலத்தினை எமதாக்கும் முயற்சியில் படிப்படியாக மெல்ல மெல்ல முன்னெறி வருகையில் எதிரியின் கவனம் எம்மீது திசைதிரும்பியதால் பாரிய இழப்புகளையும் சோகங்களையும் தாங்கிக்கொள்ள வேண்டியவர்களானோம்.



ஆரம்பம் முதலே ஆயுதம் தரித்த அடாவடித்தனக்காரர்களின் ஆயுதமிரட்டலுக்கு மத்தியில் கொலை, கொள்ளைச் செயல்கள் போன்ற அராஜகமான மக்கள் விரோத நடவடிக்கைகளைக் கண்டித்தும், ஆயுதக்கிளர்ச்சிக்கும், பயிற்சி மோகத்திற்கும் அப்பால் மக்களை அரசியல் மயப்படுத்தும் பணியில் ஈடுபட்டோம். வெற்றிகண்டோம். கடந்த பத்தாண்டுகளாகச் செயற்பட்டு வரும் நாம் அரசியல் ரீதியாகப் பின்வரும் வெற்றிகளைக் கண்டிருக்கின்றோம் என்பதனையிட்டு பெருமை கொள்ள முடியும்.

□ ஈழப்போராட்டம் என்பது பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் ஒரு அங்கம் என்பதால், மார்க்சிச—லெனினிய சித்தாந்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியதும் அதனை எமது மண்ணில் நடைமுறைப் படுத்துவதும் அத்தியாவசியமானது என அடித்துக் கூறினோம். இதனால் இன்று அனைத்து போராளிகளுமே தவிர்க்க முடியாதவாறு சிவப்புச் சாயம் பூச நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர். போலியாக வேனும் தாமும் இடதுசாரிகள் தான் என்பதை உறுதிப் படுத்த வேண்டியவர்களாயுள்ளனர்.

□ மலையக மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண ஈழப் போராட்டமே வழிவகுக்கும் என முரசறைந்தோம். மலையக மக்களின் சிக்கல்களைத் தீர்க்க ஈழத்தின் ஏனைய பிராந்திய மக்கள் குரல் கொடுக்க வேண்டும்—போராட்டத்தில் ஒரு ஐக்கியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என எடுத்தியம்பினோம் வெற்றி கண்டோம்.

□ "நாம் ஈழவர் ; நமது மொழி தமிழ் ; நம் நாடு ஈழம் என்ற பதாகையினை உயர்த்திப் பிடித்து பிரதேச, மத வேறுபாடுகளுக்கப்பால் ஈழத்தில் வாழுமனைவரும் ஈழவரே எனக்கூறிய போது மக்கள் அணியணியாகத் திரள்வதைக் கண்டு வருகின்றோம். எமது கருத்துக்களும், செயற்பாடுகளும் மக்கள் மத்தியில் பெரு வரவேற்போடு வேரூன்றி' ஆழப்பட்டு அகலப் பட்டுவருவதனைக் காண்கிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

☐ அடுத்ததாக, தற்பாதுகாப்புக் காரணங்களுக்காகவும், இராணுவத்தினரின் கவனத்தைத் திசை திருப்புவதையும் மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நடவடிக்கைகளின் ஊடாக, ஆயுதங்கள் பலவற்றைச் சேகரித்திருப்பதோடு மக்களுக்கு மக்கள் இராணுவத்தின் நடவடிக்கைகளில் நம்பிக்கை ஊட்டுவதிலும் கணிசமான அளவு வெற்றியைப் பெற்றிருக்கின்றோம்.

☐ ஈழப்போராட்டத்தில் இந்திய அரசிற்கும், தமிழகத்திற்கும் இருக்கக்கூடிய காத்திரமான பங்கைக் குறித்து தெளிவுடன் செயலாற்றுவதனால், இந்திய அரசின் ஆக்கபூர்வமான ஒத்துழைப்புகளையும், ஒத்தாசைகளையும் பெற்றுக் கொள்வதிலும் பயன் தரும் வெற்றிகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம்.

இத்தகைய எமது வெற்றிகளைப் பற்றிப் பெருமைப்படும் அதேசமயம் எதிர்காலத்தில் எம்மீது சுமத்தப்பட்டிருக்கும் பாரிய பொறுப்புக்களையும் உணர்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை மக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். இந்த நேரத்தில் இன்று எம்மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு ஏற்றவர்களாகவும் மக்களது எதிர்பார்ப்புகளையும் அபிலாசைகளையும் பூர்த்தி செய்யக்கூடியவர்களாகவும் பரிணமிக்க வேண்டியது அத்தியாவசியமானது. சுருங்கக் கூறின் எமக்குள்ள அதிகாரம் என்பது அராஜகத்தின் கருவியல்ல. மாறாக நிர்வாக அமைப்புகளைச் சீர்படுத்தி ஒரு புதிய சமுதாய அமைப்பைப் படைக்க மக்கள் அளித்திருக்கும் நம்பிக்கையின் வெளிப்பாடுகள் என்றே கருதவேண்டும்

ஈழமெங்கிலும் வாழும் மக்களின் நல்லெண்ணத்தையும், அபிமானத்தையும் பெற்றவர்களாக —ஈழப் போராட்டத்தின் தீர்மானகரமான சக்தியாய் பரிணமிக்க வேண்டிய நாம் அதற்கேற்ற வகையில் மிகவும் பொறுப் புணர்வுடனும், நிதானமாகவும் நடந்து கொள்வோமாயின் எதிர்காலம் எமக்காகும். இந்தவகையில் போராட்டத்தை முன்னெடுக்கும் வழிமுறைகள், எமது போராட்டதந்திரோபாயங்கள் குறித்தும் பின்னர் விரிவாக ஆராயலாம்.



# யாவரும் கேளிரென...

15-05-86

## விமர்சனம்

“சோசலிசத்தில் உதித்துள்ள விமர்சன வகைப்பட்ட” போக்கு ஒரு புதுவகையான சந்தர்ப்பவாதம்தவிர வேறில்லை என்பதை வெறுமனே கண்ணை மூடிக் கொண்டாலொழிய காணாமல் இருக்க முடியாது அணிந்துகொள்ளும் பட்டுப் பீதாம்பரங்களை வைத்தோ சூட்டிக்கொள்ளும் படாடோபமான பட்டப் பெயர்களை வைத்தோ, மனிதர்களை எடைபோடாமல்; அவர்களின் செய்கைகளை வைத்தும், யதார்த்தத்தில் பரிந்துரைக்கின்றவற்றை வைத்தும் எடை போடுவதனால், “விமர்சன சுதந்திரம்” என்பதன் பொருள் சமூக ஜனநாயகத்தில் சந்தர்ப்பவாதத்திற்கு வேண்டிய சுதந்திரம் சோசலிசத்தில் முதலாளி வர்க்க கருத்துக்களையும் – நபர்களையும் புகுத்துவதற்காக சுதந்திரம் என்று தெளிவாகும்.

லெனின்- என்ன செய்ய வேண்டும்?

ஒரு கடினமான, நீண்ட நெடிய பாதையிலே, காட்டாறுகளையும், புயல்வீசும் வனந்தரங்களையும் தாண்டி ஆளுக்கு ஆள் கைகோர்த்திக்கொண்டு ஒரு நெருக்கமான கட்டுப்பட்ட குழுவாக நாம் நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம். எல்லாப் பக்கங்களிலும் பகைவர்கள் நம்மைச் சூழ்ந்து கொண்டுள்ளனர். பகைவர்களின் ஏறத்தாழ இடையறாத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாக்குதல்களுக்கு முகம்கொடுத்து நாம் முன்னேற வேண்டியுள்ளது. சுயேச்சையாக நாம் ஒவ்வொருவரும் எடுத்துக் கொண்ட முடிவின்படி பகைவரை எதிர்த்து-விடாப்பிடியாகப் போராடுவதற்காக நாம் ஒன்று சேர்ந்திருக்கிறோம். இந்தவகையில் ஒன்றுசேர்ந்த போதும், நடைமுறையில் ஏற்படும் அபிப்பிராய பேதங்களும் அணுகுமுறை மாறுபாடுகளும் பரஸ்பர சந்தேகத்தைத் தோற்றுவிப்பதோடு இறுக்கமான உறவுகளில் சில தளர்வுகளையும் கொண்டுவந்துவிடக் கூடியதாக இருப்பதை உணர முடிகின்றது. இத்தகைய போக்குகள் இனங்காணப்பட்டு தீர்க்கப்படாவிடில் - அபிப்பிராய பேதங்கள் நீக்கப்படாவிடில் இதன் எதிர் விளைவுகள் பாரதூரமானவையாகிவிடக்கூடும். எனவே தோழர்கள் மத்தியில் இறுக்கமான தோழமை உணர்வை வளர்ப்பதற்கும், சுயவிருப்புப்படியே கட்டுப் பட்ட குழுவாக இயங்கச் செய்யவுமாக விமர்சனம், சுயவிமர்சனம் என்பது அத்தியாவசியமாகிறது.

எனினும், விமர்சனம் என்பது வெறுமனே ''குற்றங் காண்பது'' என்பதை அடிப்படையாகக் கொண்டு, தனிமனித ஆளுமைகளை நிலைநாட்டுவதற்குரியதான விதண்டாவாதப் போக்கில்- அமைவது கட்டாயமாகத் தவிர்க்கப்படல் வேண்டும். ''குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை'' என்பது ஒரு தமிழ் பழமொழி; இது கூறுவது போல 'குறை காண்பது' அல்லது 'பிழை பிடிப்பது' என்ற மனோநிலையிலிருந்து ஆரம்பித்தால் நிறைவு என்பது கண்களுக்கு மறைக்கப்பட்டுவிடும். அதிலும் தேர்தற்கால அரசியல்போல தனிமனிதர்களுடைய குணதிசயங்களை மையப்படுத்தி 'அவர் நல்லவர்' இவர் வல்லவர்'' என்ற கணிப்பீட்டின் அடிப்படையிலமைந்த குறை காணும்போக்கு நிச்சயமாக விமர்சனமாக இருக்க முடியாது.

இன்னுமொரு ஆபத்தான போக்கும்கூட நடைமுறையில் காணப்படுகின்றது. சொந்தப் பலவீனங்களை சுய விமர்சன அடிப்படையில் ஏற்றுக் கொண்டு தத்தமது இயலாமைகளை உணர்ந்து திருந்திக்கொள்வதற்குப் பதிலாக ஏனைய



வர்களை அநியாயமாகப் பழிசுமத்தும் தன்மையை மையப் படுத்தியதாக அமையும் விவாதங்கள் விமர்சன வகைப் பட்ட வையல்ல. தம்மைத்தாமே விமர்சனத்திற்கு உட்படுத்தாமல் - தமக்குத் தரப்பட்ட பொறுப்புகளை - கடமைகளை நிறைவேற்றும் பணியில் சொந்த முயற்சிகள், பிரயாசைகள் என்பவற்றைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளாமல் குருட்டுத்தனமாக அமைப்பின் பலவீனங்களில் பழி சுமத்தப்படுவதும் கூட சந்தர்ப்பவாதப் போக்கின் ஒரு சாயலே.

அடுத்ததாக; விமர்சனத்திற்கு வழங்கப்பட்ட சுதந்திரத்தைத் துஷ்பிரயோகம் செய்யும்போக்கு அதீத ஜனநாயகத் தன்மையின் வெளிப்பாடே. கண்ட கண்ட இடங்களிலும், பொருத்தமற்ற நபர்கள் முன்னிலையிலும் மேற் கொள்ளப் படும் விமர்சனங்கள் அமைப்பிற்குள் தளம்பலான ஒரு சூழ் நிலையை ஏற்படுத்தும். அத்துடன் குழுவாதம் (Groupism) தோன்றவும் வழிவகுக்கும். இதுவும்கூட ஆரோக்கியமற்ற ஒரு விமர்சனமே.

எனவே, விமர்சனம் என்பது ஒன்று பட்டுச் செயற்பட்டே தீரவேண்டும் என்பதை மையப்படுத்தி - அமைப்பின் இலட்சியத்தின் நலன்களுக்கு முன்னுரிமை வழங்கி- பரஸ்பரமான புரிந்துணர்வை வளர்க்கும் ஒரு அம்சமாகப் பயன்படவேண்டும் நமது தவறுகளை மறைப்பதற்காக அல்லது ஏற்றுக் கொள்ள மாறுப்பதற்காக ''பிழை பிடிக்கும்'' சுபாவத்துடன் விமர்சிப்பதனை தவிர்க்கும் அதே சமயம், சுயவிமர்சன மூலம் எமது தவறுகளைத் திருத்துவதோடு, நடைமுறையில் சுட்டிக்காட்டப்படும் தவறுகளை மனப்பூர்வமாக உணர்ந்து ஏற்றுத் திருந்த வேண்டியதும், திருத்திக்கொள்ள வேண்டியதும் ஒவ்வொருவருக்கும் உள்ள கடமையும், பொறுப்பும் ஆகும் அத்துடன் காலம், இடம் பொருள் ஏவல் என்னும் அம்சங்களை கவனத்திற்கு எடுத்துப்பொருத்தமான நேரத்தில் - பொருத்தமான இடத்தில் - பொருத்தமான சந்தர்ப்பத்தில் தான் விமர்சனம் செய்யப்படல் வேண்டுமே தவிர தேவைவற்ற சந்தர்ப்பத்தில் - தேவையற்ற இடத்தில் அல்ல. மேலும், தவறுகளே விடாமல் இருப்பதற்கு நாமனைவரும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உத்தம புத்திரர்கள் அல்ல. அதற்காகத் தவறுகளையே தொடர்ந்து செய்வது மனிதப் பண்புமல்ல. இதனை நன்கு உணர்ந்துகொண்டு நாமனைவரும் ஒன்றுபட்டே தீரவேண் டும் என்பதற்காக இயக்கத்தின் நடைமுறைக் குறிக் கோளை நிறை வேற்றுதற்கான உடன்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும் இதற்கு நடைமுறையில் ஏற்படும் அபிப்பிராய பேதங்களையும், அணுகுமுறை மாறுபாடுகளை யும் விமர்சனம்- சுயவிமர்சனம் என்ற அடிப்படையில் தீர்த் துக்கொள்ள வேண்டும். எனினும் அடிப்படைக் கொள்கை கள் கோட்பாடுகள் பற்றி எந்தவிதமான பேரத்திற்கும் இடமின்றி - தத்துவார்த்த வகைப்பட்ட சலுகைகள் எதுவு மின்றி நடைமுறைக குறிககோள்களை அடைவதற்கான உடன்பாடு செய்யப்பட்டாக வேண்டும்.



# யாவரும் கேளிரென...

20.10.88

**புரிந்துணர்வு:**

"நமது கட்சி ஒரு மகத்தான கட்சி. புகழ்மிக்க கட்சி பிசகற்ற கட்சி, இது அங்கீகரிக்கப்பட வேண்டிய ஒரு உண்மை. ஆனாலும் நம்மிடம் இன்னும் குறைபாடுகள் உண்டு. இதுவும் அங்கீகரிக்கப்பட வேண்டிய உண்மை யாகும். நாம் எல்லாவற்றையும் அங்கீகரிக்கக்கூடாது. சரியானவற்றை மாத்திரம் அங்கீகரிக்க வேண்டும். அதேபோல் எல்லாவற்றையும் நிராகரிக்கக் கூடாது. தவறானவற்றை மாத்திரம் நிராகரிக்க வேண்டும்.

நமது வேலையில் முக்கியமான அம்சம் நமது சாதனை கள். ஆனால் அதில் இன்னும் பல குறைகளும் தவறு களும் இருக்கத்தான் செய்கின்றன. என்வே தான் நாம் ஒரு சீர்செய் இயக்கத்தை நடாத்தவேண்டியிருக்கிறது. நமது சொந்த மானசீகவாதம், அதிகாரத்துவம், கோஷ்டிவாதம் ஆகியவற்றை நாம் விமர்சனம் செய் தால் நமது கட்சியின் புகழுக்கு மாசு ஏற்படுமா? இல்லை என்று நான் எண்ணுகிறேன்."

மாவோ சே துங்.

*(பிரச்சார வேலைபற்றிய தேசியமா நாட்டுரையில்)*

எங்கள் மீது துப்பாக்கி சன்னங்களையும், பாரிய குண்டுக ளையும் பொழிந்து எமது அருமைத் தோழர்களை — தலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறந்த வீரர்களை, வீழ்த்திக் கொண்டிருக்கும் எதிரி எம் முன்னே முழுப்பலத்துடன் உயர்ந்து நிற்கிறுன். எதேச்சா திகாரமான அரசுக்கு எதிராகப் போராடுவதும், அரசியல் சுதந்திரம் பெறவேண்டியதுமே இன்று எமக்கு முன்னுள்ள முக்கியமான பணியாகும்.

இத்தகையதொரு போராட்டத்தில் தியாக உணர்வுடனும் நேர்மையான அர்ப்பணிப்போடும் போராளிகள் தமது கரங்களையும் இறுகப்பிணைத்துக் கொள்ளவேண்டும் என்றே மக்கள் விரும்புகின்றனர். அவ்வாறு இறுகப்பிணைந்த போராளிகளின் உருக்கையொத்த பலத்தினுல் எதிரிகள் விரட்டப்பட வேண்டும். எமது மண் மீட்கப்பட வேண்டும்: வாழ்வில் வசந்தம் வீசவேண்டும் என்ற அவாவினுல் உந்தப்பட்டோராய் மக்கள் வாழ்கின்றனர்.

ஆனுல் நமது கருத்துப்படி ஒரு நெருக்கடியான நிலைக்குள் படிப்படியாக தள்ளப்பட்டு வருகின்ருேம் என்பதை வருத் தத்துடன் தெரியப்படுத்த வேண்டும், இந்த நெருக்கடிக்கு மூன்று காரணிகளை குறிப்பிட்டு கூறமுடியும் முதலாவ தாக ஈழத்தின் தென்பகுதியில் அதாவது திரியாய் திரு மலை, மூதூர், மட்டக்களப்பு, அம்பாறை போன்ற பகுதி களில் அரச இராணுவத்தின் அதிகரித்த செயல்பாடுகளும் அடாவடித்தனங்களும், அன்ருடம் காயச்சி அனுதைகளாக வாழ்வு குலைக்கப்பட்டு காடுகளிலும், மலைகளிலும், ஒழிந்து கொள்கின்ற மக்களின் நிலை, தினசரி நடக்கும் கொலைக ளாலும் சித்திரவதைகளாலும் உள்ளம், உடல், உடமை இழப்புக்களான போதிலும் மண்ணைக் காப்பதற்காக போராடிவரும் தரம்.

இரண்டாவதாக கபடத்தனமாக அரசு மேற்கொள்ளும் பேச்சுவார்த்தை என்னும் மாயைகளிற் சிக்கி இடைக் காலத்தீர்வு கிடைக்கப்போவதாக எண்ணுகின்ற போக்கு. அரசு தன்பிடியில் இருந்து வளர்ந்து வருகின்ற இத்த சந் தர்ப்பத்தில் பேரம்பேசி ஆதக்கூடுதலானதைப் பெற்றுக் கொண்டு விடுதல் வேண்டும் என மிதவாதிகள் துடிக்கின்



ருர்கள். இப்படியான சமாதான தீர்வின்பின் இன்றைய போராளிகளை எப்படிச் சமூக வாழ்க்கை ஓட்டத்துடன் இணைப்பது என்றும் இவர்கள் அளவுக்கதிகமாகவே கவலைப் படுகின்ருர்கள். இந்தப்போக்கின் விளைவால் ஏற்படுகின்ற சிக்கல்கள்.

மூன்ருவதாக போராளிகள் மத்தியிலே காணப்படுகின்ற சலிப்பு-களைப்பு. இந்த அம்சம் குறித்து நுணுகி ஆராய வேண்டியுள்ளது எந்தவிதமான சுயலாபத்தையும் கருதா மல், தம் சொந்த எதிர்காலத்தைப் பணயமாக்கி, உயி ரையும் இழக்க திடங்கொண்டுள்ள போராளிகள் மத்தி யில் சோர்வு ஏற்படுவதைக் கண்டு கொள்ளாமல் இருக்க வும் முடியாது. இத்தகைய சோர்வின் அடிப்படையை ஆராய்ந்து தெளிவுபடுத்துதல் மூலமே இறுக்கமான கட் டுக்கோப்பினை இயக்கத்துள் பேணுதல் சாத்தியமாகும். போராளிகளுக்கிடையில் - இயக்கத்தோழர்களுக்கு இடை யில் ஏற்படுகின்ற சிக்கல்களை பொதுவாக மூன்று வகைப் படுத்தலாம். அவையாவன.

1) உணர்ச்சி வேகத்தினுலும், ஆயுதங்களைப்பாவிப்பதில் பிரியப்பட்டும் இணைந்தவர்களினுல், நீண்டகாலத்திற்கு நிலைக்கமுடியாத தன்மை

2) இயக்கங்களுக்கிடையிலும், இயக்கத்துக்குள்ளும் ஏற்ப டுகின்ற முரண்பாடு மோதலாக வெடிக்கின்ற சூழ்நிலையி ஞல் போராட்டப் போக்கில் தோன்றும் அதிருப்தி

3) சொந்தப்பிரச்சனைகளால் தத்தம் தனிப்பட்ட எதிர் காலத்தை வளப்படுத்த முனையும் போக்கு எனக்குறிப்பிட முடியும். இனி இவை ஒவ்வொன்றையும் தனியாகப் பார்ப் பது தன்மைபயக்கும் எனலாம்.

முதலாவதில்: குறிப்பாக யூலை 83 இல் ஏற்பட்ட நெருக் கடியின் விளைவால் உந்தப் பட்டு இணைந்து கொண்டவர் கள். நேரடியாக தாக்குதல்களுக்கு இலக்கானதாலோ அல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லது மறைமுகமாக பாதிக்கப்பட்டதாலோ இணைந்து கொண்ட இத்தகைய நபர்களிடம் உணர்ச்சி மேலீடும், எதிர்களை பழிவாங்கும் மனோபாவமும் தான் நிறைந்து காணப்பட்டது. இயக்கப்போக்கில் ஏற்பட்ட வளர்ச்சியின் விளைவினால் வினால் தனித்தனி ஒவ்வொருவரையும் இனம்பிரித்து வேறு படுத்திப் பார்பதில் ஏற்பட்ட இடைவெளிக்குள் இணைந்து கொண்ட இத்தகையோர் காலப்போக்கில் வேகம் குறைந்து ஒதுங்கிச்செல்ல முனைவதைக்காணலாம். தாங்கள் ஒதுங்கிச் செல்லவேண்டும் என்பதையே முதன்மைப்படுத்தும் இவர்கள் இதற்காகவே அமைப்பின் மீதும் அமைப்பின் தோழர்களின் நடவடிக்கைகளின் மீதும்சதாகுற்றம் காண்பதையே இலக்காகக் கொள்கின்றனர். தத்தமக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களை செவ்வனே நிறைவேற்றமல் காலத்தை கடத்துவதையும், ஏற்படுகின்ற நிருவாகரீதியான சிக்கல்களை பெரிது படுத்தி தோழர்களின் தொழில பாடுகளுக்கு தடங்கலாக இருப்பதையும் இவர்கள் கொண்டிருப்பதை பரவலாக காணலாம்.

இரண்டாவதாக; அமைப்பின் முன்னணித் தோழர்கள் மத்தியில் இருக்கக்கூடிய அணுகு முறை மாறுபாடுகள், ஆளுமைகள் என்பவற்றில் வேறுபாடு காண்பதினால் ஏற்படுகின்ற சிக்கல்களாலும், வெவ்வேறு அமைப்புகளுக்கு இடையில் மூழுகின்ற பகைமை. மோதலாக வெடித்து தீர்த்துக்கட்டுவது என்பது வரை செல்லும்போது தோன்றுகின்ற விரக்தியா போராட்டப் போக்கில் ஒரு நம்பிக்கையீனமும் அதிருப்தியும் பிறக்க வழிசமைக்கப்படுகிறது. சுருங்கச் சொன்னால் அமைப்பின் பொறுப்பான சில தோழர்களின் நடவடிக்கையால் பாதிக்க, பாதிக்கப்படும்போது அதையே அமைப்புமுழுமைக்கும் பொதுவாக்கிபார்ப்பதும், இணைந்துச் வேலைசெய்கின்ற அமைப்பின்மீது ஏற்படும் அதிருப்தியை, இலட்சியம் முழுமைக்கும் பொதுவாக்கிப்பார்ப்பதுமான போக்கு, இது தவறான தொன்றாகும். உணர்வு பூர்வமாக சாதாரணமக்களின் பால்கொண்ட பாசமும், இந்த மண்ணின் விடுதலைக்கான அர்ப்பணிப்பும் மிக்க தோழர்கள் இந்தத் தவறை இழைக்க மாட்டார்கள் என்றே நம்புகிறோம்.



மூன்றாவதாக; இளைஞர்களாக அமைப்புடன் இணைந்து வேலை செய்ய ஆரம்பித்தது தொடர்ந்து நீண்டகாலமாக போராட்டப்போக்குடன் பின்னிப்பிணைந்து வேலை செய்யும் தோழர்களுக்கு அமைப்பு நடைமுறைகளுடனே உடல், உளரீதியாக ஏற்படுகின்ற தாக்கங்களும் பாதிப்புகளும். இதன் காரணமாக தத்தம் சொந்த எதிகாலத்தை மட்டும் முன்னிலைப் படுத்திப்பார்ப்பது. அமைப்பில் இருந்து தூரவிலகிச்செல்லும் போக்கு, இவ்வாறனபோக்குகளினால் அமைப்பிலிருந்து தூரவிலகிச் செல்பவர்களை கட்டுப்படுத்த வேண்டிய அமைப்பை இறுக்கமானதாக வரையறுப்பது அவசியமானதாகும். அமைப்பின் ஒவ்வொரு தோழரும். ஏன் ஒவ்வொரு போராளியும்கூட இன்றைய சிக்கல்களையும், இச்சிக்கல்களின் அடிப்படையையும் புரிந்து தெளிந்து கொள்ள வேண்டும் அப்போது தான் வரலாற்றில் தத்தம் பாத்திரத்தைச் செவ்வனே ஆற்றுதல் சாத்தியமானதாகும்.

இந்த வகையில் தோழர்களுக்கு ஏற்படுகின்ற சிக்கல்களைப் புரியவைப்பதில் சுய விமர்சனங்களை முதன்மைப் படுத்த வேண்டும். சுயநலவரம்புகளை ,மீறமுடியாமல் பொது மக்களிடம் இருந்தும் போராட்டப்போக்கிலிருந்தும் பிரிந்து போக விரும்புவர்களை அன்னியப்பட்டுப் போகவிரும்புபவர்களைப்பற்றி அதிகம் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை. ஆனால் அமைப்பின் வேலைகளில் ஆர்வமும் ஈடுபாடும் உள்ளவர்கள் ஏதோ சில குறைபாடுகளினால் ஒதுங்கி செல்ல முனைவதை கட்டுப்படுத்தவேண்டும் தோழர்கள் மத்தியில் மேற்கொள்ளப்படுகின்ற விமர்சனமானது நியாயம் நிறைந்ததாகவும் ஆராய்வுடன் நிலைமைகளை விளக்குவதாகவும் நம்பிக்கை ஊட்டுவதாகவும் இருக்கவேண்டும், அதில்லாமல் கரடுமுரடானதும் அதிகாரத்துவம் உடையதாகவும் கட்டுப்பெட்டித்தனமாகவும், வரட்டுவாதமாகவும் இருக்கக்கூடாது. அப்படி இருக்குமாயின் தோழர்கள் தூரவிலகி செல்வதை ஊக்கிவிப்தாகவே போய்விடும். இது தவறானது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

எனவே விமர்சனம் செய்யப் படுவதில் நமக்கு இருக்கவேண்
டிய நோக்கம், வைத்தியர் ஒருவர் நோய்க்கு சிகிச்சை அளிப்
பதுபோல இருக்கவேண்டும், அதாவது, நோயாளியைக்
காப்பாற்றுவதேயன்றி அவர் இறப்பதற்கு சிகிச்சை அழிப்
பதல்ல. அனைத்து சிகிச்சை முறைகளும் நோயாளியைக்
குணப்படுத்துவதையே உறுதி செய்யவேண்டும். உண்மை
யாகவும், விசுவாசமாகவும் உழைக்கும் தோழர்களிடம்
அவர்களுடைய சித்தாந்த அல்லது அரசியல் நோயைக்குணப்
படுத்துவதில் கடினமாகவும் மூர்க்கத்தனமாகவும் நடந்து
கொள்ளக்கூடாது. அப்படி நடக்குமாயின் நாம் எமது
நோக்கத்தில் வெற்றி பெறுவது இயலாததாகிவிடும்.



## யாவரும் கேளிரென...

15. 2. 87

### பத்திரிகையின் பயன்பாடு

பத்திரிகை என்பது ஒரு கூட்டுப்பிரசாரகனும், கூட்டுக் கிளர்ச்சியாளனும் மட்டுமல்ல; அது ஒரு கூட்டான அமைப் பாளனுமாகும். இவ் விடயத்தில் கட்டப்பட்டு வரும் ஒரு கட்டடத்தைச் சுற்றி எழுப்பப்படும் சாரக்கட்டுக்கு அதை ஒப்பிடலாம். அது கட்டடத்தின் உருவரைகளைக் காட்டுகி றது. கொத்தனார்களிடையே தொடர்பிற்கு வசதி செய் கிறது. வேலையைப் பங்கிட்டுக் கொடுக்கவும் தமது ஒழுங் கமைத்த உழைப்பால் சாதிக்கப்பட்ட பொதுவான விளை வைப் பார்க்கவும் இடமளிக்கிறது.

- லெனின் -

கற்றறிதல், ஒழுங்கமைத்தல், ஒன்றுபடச் செய்தல் போராடுதல் என்பனவே இன்று எமக்கு முன்னால் விதிக் கப்பட்டிருக்கும் பெரும் பணிகளாகும். இதனைச் செவ் வனே நிறைவேற்றும் போது தான் புரட்சிப் பாதை யில் எமது பாதச்சுவடுகள் ஆழப்பதியப்படும், என் பது நிச்சயமானது. கற்றறிதல், ஒழுங்கமைத்தல், ஒன்று படச் செய்தல், போராடுதல் என்னும் இந்த நான்கும் அடிப்படையில் ஒன்றோடொன்று மிக நெருங்கிய தொடர் புள்ளவையே. கற்றறிவதன் வாயிலாகக் கிடைக்கப்படும் பட்டறிவைப் பயன்படுத்தி மக்களை ஒழுங்குபடுத்துவதும், ஒழுங்கமைந்த மக்கள் சக்தியினை ஒன்று படச் செய்வதும்



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதனூடாகப் போராட்ட முன்னெடுப்பில் ஈடுபடுத்துவது என்பதும் தொடர்ச்சியாக நடைமுறை படுத்தும்போதுதான் மக்கள் போராட்டம் மலரும் வாய்ப்பு ஏற்படும். அஃதில்லாமல் அங்கத்தவர்கள் தொகையை விஸ்தரிப்பதனலோ இவர்கள் எல்லாம் எமது ஆதரவளர்கள் என்று முத்திரை குத்தி விடுவதனலோ மக்களின் அரசியல் அறிவு மட்டம் உயர்ந்து விடப் போவது இல்லை, அவர்களின் அரசியல் ஈடுபாடு மிகுந்துவிடப் போவதுமில்லை.

குறைபாடு மிக்க இன்றைய சமுதாய அமைப்பை உழுது புரட்டி இல்லாமையை இல்லாதொழிக்கும் சமத்துவ சமதர்ம சமூக அமைப்பொன்றை உருவாக்கத் திட்டம் கொண்ட நாம் இந்தநிலை குறித்து மகிழமுடியாது. இன்றைய சமூக அமைப்பின் தன்மைகளைக் குறித்த தெளிவும், இவ்வமைப்பில் மாற்றத்தைக் கொண்டு வரும் வழிவகைகள் குறித்தும் தெளிவுபெற வேண்டியவர்களாக உள்ளோம் இதற்குநாம் கற்றறிதல் முக்கியமானதாகின்றது. இளைஞர் கழகங்களின் பணி குறித்து லெனின் விளக்குகையில் இக்கற்றறிதல் குறித்து மிக ஆழமாகவே குறிப்பிட்டுள்ளார் கம்யூனிசத்துக்கு முன்னேறிச் செல்ல விரும்பும் இளைஞர்கள் அனைவரும், கம்யூனிசத்தைக் கற்றறிந்ததாக வேண்டும் என்பது இயற்கையான பதிலாய் தோன்றலாம். கம்யூனிசத்தை கற்றறிதல் என்பது குறித்து லெனின் கூறியவற்றின் சாரத்தை இங்கு குறிப்பிட்டுக் காட்டுதல் சற்று பொருத்தமானதாகவே இருக்கும் கம்யூனிஸ்ட் பாடப்புத்தகங்களில் இருந்தும், பிரசுரங்கள் நூல்களில் இருந்தும், பெறப்படும் அறிவை ஒட்டு மொத்தமாய்க் கிரகித்துக் கொள்வதே கம்யூனிசத்தைக் கற்றறிதல் என்று யாரும் எண்ணக் கூடும். ஆனால் இது கம்யூனிசத்தை மிதமிஞ்சி கொச்சைப்படுத்துவதாகவே இருக்கும் எனக் கூறிய லெனின் இது குறித்து பின்வருமாறு விளக்குகிறார் புத்தகங்களிலும் பிரசுரங்களிலும் கூறப்படுபவற்றைப் படித்து தெரிந்த பின் பல்வேறு அறிவுத் துறைகளையும் சேர்த்து இணைத்திடும் திறன் புரட்சியாளருக்கு அவசியமானதாகும். வெறுமனே



கோசங்களை மட்டும் கிரகித்து கொண்டு நமது அன்றாட வேலைகளுடன் இணைக்காத இடத்து தத்துவத்திற்கும், நடைமுறைக்கும் இடையே பாரிய பிளவு ஏற்படுவது தவிர்க்க முடியாது போய்விடும்.

புரட்சிகர அமைப்பொன்றைக் கட்டி எழுப்ப முற்படும் நாம், அதன் கட்டுப்பாட்டைக் கட்டிக்காப்பது அவசியமானதாகும். பாட்டாளி வார்க்க அணியின் வர்க்க உணர்வாலும், புரட்சியின் பால் உள்ள விடாப்பிடியானபற்றினலும், தன்னலம் அற்ற தியாகத்தாலும், வீரத்தாலும் இறுகப் பிணைக்கப்பெற்று மக்கள் திரளின் அனைத்துப் பிரிவினரோடும் இணைப்புக் கொள்ளவும், ஒன்று கலக்கவும் வேண்டும். இத்தகைய பின்னணி அமைப்பின் அரசியல் தலைமையின் பிழையற்ற தன்மை, போர்த்தந்திரம். இவற்றூடாக வெகு மக்கள் தமது சொந்த அனுபவத்தின் வாயிலாகவே இது சரியானது எனக் கண்டு கொண்டாகும் நிலைமையை உருவாக்க வேண்டியது எமது பாணியாகும்.

இந்த வகையில் தோழர்கள், மக்கள் ஆகியோரின் தொடர்பு சாதனமாய் விளங்கும் பத்திரிகையின் பணி பாரியதாகும். அமைப்பின் குரலாக வரும் பத்திரிகையானது.

1. வழிகாட்டி
2. அரசியல் பிரச்சாரம்
3. செய்தி பரிவர்த்தனை
4. மக்கள் தொடர்பு சாதனம்

என்னும் கடமைகளை நிறைவேற்றியே ஆகவேண்டும்.

முதலாவதாக வழிகாட்டி என்ற வகையில் அண்மைய எதிர்காலம் குறித்து முன்மொழிதல் அவசியமாகிறது. அரசின் செயற்பாடுகள் அவற்றினூடாக அரசு சாதிக்கவிருப்பவைகள் என்ன? என்பது குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டிய அதேசமயம் இவற்றை எவ்வாறு எதிர்கொள்ளலாம் என்னும் ஆலோசனைகள் பத்திரிகை வாயிலாக வெளிப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுத்தப்படல்வேண்டும். இத்தகைய முன்மொழிவுகளையும், ஆலோசனைகளையும் பத்திரிகை கொண்டிருக்காத இடத்து; வெறுமனே இலாபநோக்கைக் கருதும் ஒரு தொழிற்துறையாக ஆகிவிடும். எனவே ஒரு அமைப்பின் குரலாக வெளி வரும் இதழ்களானது ஒரு வழிகாட்டி என்ற அந்தஸ்தைப் பெற வேண்டியது அவசியமானதாகும். அப்போதுதான் மக்களின் எதிர்பார்ப்பையும் தேவையையும் அதனால் பூர்த்தி செய்ய முடியும்.

இரண்டாவதாக அரசியல் பிரச்சாரகன் என்ற வகையில் உழுத்துப்போன இன்றைய சமூக அமைப்பின் குறைபாடு களைச் சுட்டிக்காட்டுவதுடன் சமூக மாறுதலின் அவசியத்தை வலியுறுத்தவும் அதன் தேவையை மக்களுக்கு உணர்ந்தவும் வேண்டும் சமூக அமைப்பின் குறைபாடுகள் நாளாந்த வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்கள், பாதிப்புக்கள் அதனால் சமூகத்தில் எழும் பிரச்சினைகள் என்பவற்றைத் துல்லியமாகத் துலக்கி மக்களை அரசியல் போராட்டத்துடன் இணைக்க வேண்டி பத்திரிகை பயன்படுதல் வேண்டும்

மூன்றாவதாக செய்தி பரிவர்த்தனை ஊடகம் என்ற வகையில் அமைப்பில் பல்வேறு மட்டத்தில் நடக்கின்ற வேலைத் திட்டங்கள். செயற்பாடுகள் என்பவை குறித்தான செய்திகள் பரிமாறப்படல் வேண்டும். இதற்கு ஊடாக தோழர்களிடையே இறுக்கமான ஒரு அமைப்பையும், செயற்பாடுகளில் ஒரு ஒத்த தன்மையினையும் பேணுதல் வேண்டும்.

நான்காவது மக்கள் தொடர்பு சாதனம் என்ற வகையில் அமைப்பின் கருத்துக்களையும், எண்ணங்களையும் மக்களுடன் பகிர்ந்து கொள்ளும் அதேவேளையில் அமைப்புக் குறித்தான மக்களின் எண்ணங்களை ஒழுங்குபடுத்துவதும் பத்திரிகையின் பணியாகிறது. மக்களுக்கும், அமைப்புக்கும் இறுக்கத்தை அதிகரித்து, அரசியல் அறிவு மட்டத்தை உயர்த்தி அக்கறையுடனை ஈடுபாட்டைத் தோற்றுவிப்பதைப் பத்திரிகை முதன்மைப்படுத்த வேண்டும்



இதைவிடுத்து அபரிமிதமான நம்பிக்கையைத் தோற்றுவிக்கும் எழுத்துக்களால் பத்திரிகையின் பக்கங்களை நிறைத்து விடுவதானது காலப்போக்கில் நீடித்துநிலைக்காமல் புஸ்வாணமாகிப் போய்விடும் என்பது நிச்சயம். அதனால் அசகாய சூரர்கள் நாமே என்ற அடிப்படையில் நாங்கள் சொல்வது சரித்திரம். அதுமட்டும் தான் உண்மை என்ற போக்கில் செயற்படாமல் தெளிவான சிந்தனைகளைத் தோற்றுவிக்கப் பாடுபட வேண்டியவர்களாயுள்ளோம். ஒரு பிரமையை அதாவது ஒரு மாயைத் தோற்றத்தை உருவாக்கி அதனடிப்படையில் மக்களிடம் செல்வாக்குச் செலுத்தலாம் என்று எண்ணும் போக்கு எம் மக்களிடையே தலைதூக்கி இருப்பது வெளிப்படையானது.

இந்தப் போக்கின் பிரதிபலிப்புகளை நாம் குடாநாட்டிலிருந்து வெளிவரும் தினசரிகளில் பொதுவாகப் பார்க்க முடியும். இலாபம் சம்பாதித்தலை முதன்மைப்படுத்தும் இத் தினசரிகள் எந்த விடயத்திலும் ஒரு பொதுக்கருத்தை உருவாக்குவதில் பின் நிற்பதைக் காணலாம் மக்கள் நலன் சார்ந்து பெரிதுபடுத்த வேண்டிய முக்கிய செய்திகளைக் கண்டு கொள்ளாமல் விடுவதும், தாமே நேருக்கு நேர் சந்திக்கும் உண்மைகளை அப்பட்டமாக அப்படியே வெளியில் வைப்பதற்குப் பதிலாக கட்டுண்டு கிடக்கும் தன்மையினையும் எவரும் அவதானிக்க முடியும். இதன் காரணமாகவே காத்திரமான பல விடயங்களைத் தாங்கி வரவேண்டிய போராட்ட சூழலில் வெளிவரும் இத் தினசரிகள் மரண அறிவித்தல்களாலும், விளம்பரங்களாலும் பக்கங்களை நிரப்பி வருவதைக் காணமுடிகிறது.

இதிலிருந்து மாறுபட்டு இருக்கின்ற நிலைமைகளை யதார்த்த பூர்வமாகச் சிந்திக்கத் தூண்டுதல் வேண்டும். எமது நிலைப்பாடு என்ன? எமது பலங்கள் எவை? எமது பலவீனங்கள் என்ன? நாம் போராட்ட முன்னெடுப்பில் ஆற்றிய காத்திரமான பங்களிப்புகள் என்ன? தொடர்ந்து முன்னேறி செல்ல என்னென்ன செய்யப் படலாம்? நாம் எவ்வாறு படிப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படியாக முன்னேக்கிச் செல்கிறோம்? என்பதை மிக அழுத்தமாக எடுத்துச்சொல்லி அவற்றினூடாக மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்தாக வேண்டும். அதே சமயம் மக்களுக்கு கொடுக்கப்படும் நம்பிக்கை எதுவும் அமைப்பின் செயற்பாடுகளினூடாக நிறுவப்படல் வேண்டும். வெறுமனே தேர்தல்கால வாக்குறுதியைப் போல வாயில் வந்தவற்றையெல்லாம் கூறி விட்டு பின், அவற்றைக் காப்பாற்ற முடியாதபோது திண்டாடுவது மக்களைக் குழப்பமுறச் செய்வதோடு போராட்டத்தில் இருந்து அன்னியப்படுத்தி விடும்.

மக்கள் மத்தியில் இருந்து ஆதரவைத் திரட்டுவதிலும் அபிமானத்தைப் பெறுவதிலும், பிரச்சாரம் முக்கிய பாத்திரத்தை ஆற்றுகிறது. செய்யப்படுகின்ற வேலையும், செய்யப்படுகின்ற பிரச்சாரமும் ஒரு சமாந்திரத் தன்மையைப் பெற்றிருத்தல் அவசியம்.

செயற்பாடு – பிரச்சாரம் அமைப்பு என்ற நடைமுறைப் பாணியில் செயல்பட வேண்டும். வேலைகளைச் செய்து எமது சாதனைகளை நிலைநாட்டி அவற்றின் அடிப்படையில் பிரச்சாரத்தை முன்னெடுக்க வேண்டும். இதற்கூடாக அமைப்பு இறுக்கமாகக் கட்டுப்படும். ஒன்றிணைந்த தோழர்கள் மீண்டும் செயற்பாடு பிரச்சாரம் ஊடாக அமைப்பைக் கட்டும் போது அமைப்பு விரிவுபடும். பலம்பெறும்.



## அரிசிப் பொதியோடும் வந்தீரோ தம்பி

10-9-87

இந்திய இராணுவ வீரனே வா! வேட்டுச் சத்தங்களாலும் விமான கெலிகொப்டர் இரைச்சலாலும் இன்னும் இது போன்ற யுத்தகால சத்தங்களினாலும் பதட்டத்துக்குள்ளாகி இருக்கும் எமது மண்ணின் நாளாந்த வாழ்க்கையை சுமுகமாக்கியது உனது வருகையே அதனால் உன்னை வாழ்த்தி வரவேற்பது எமது கடமையே.

ஈழத்தின் விடுதலையை வேண்டிப் போராடிய எமது மக்கள் உனது ஆதரவையும், ஒத்துழைப்பையும் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள் என்பது வெளிப்படை. ஆனால் இவ்வளவு விரைவாய் இவ்வளவு வேகமாய், இவ்வளவு சுமுகமாய் உனது வருகை அமையும் என்பதை யாரும் எண்ணியிருக்க முடியாது ஏனெனில் கடந்த நான் காண்டுகளில் மட்டும் சிந்தப்பட்ட வியர்வையும், கொட்டப்பட்ட குருதியும் போராட்டத்தில் உனது மக்களின் ஒத்துழைப்பையும் எமது எதிரி கூட உன்னை வரவேற்பான் என்ற எண்ணத்தை எம்மவர்களுக்கு ஊட்டியிருக்கவில்லை. ஏன்? மிராஜ் விமானங்கள் இன்னல் பட்ட மக்களுக்காய் உணவுப் பொருட்களை வீசிய பொழுது கூட நீ வந்து விடுவாய என எதிர்பார்த்திருக்கவில்லை. ஸ்ரீலங்காவின் பிரதமர்பிரேமதாஸ உணவுப் பொருள் விநியோகத்தை 'ரோயன் கோஸ்' (Troyan Horse) என்று வர்ணித்த போது கூட நாங்கள் நம்பவில்லை. எது எப்படியோ நீ இப்போது எமது மண்ணில் எம்முடன் கூடவே உள்ளாய் அந்த வகையில் உன்னை வரவேற்பது உனது எண்ணங்களுடன் எமது சிந்தனைகளை பகிர்ந்து கொள்வது அவசியமாகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீண்ட காலமாக இராணுவத்தினர் செய்த அட்டூழியங்களாலும், அடாவடித்தனங்களாலுமே என்னவோ இராணுவம் என்ற சொல்லே எமக்கு திகிலை ஊட்டுகிறது. பச்சை நிற உடுப்புகளும், வாகனங்களும், தாங்கியிருக்கும் ஆயுதங்களும். இன்ன பிறவும் எம்மையும் அறியாமலே நெஞ்சில் அச்சத்தைவரவழைக்கின்றன. எனவே தான் எம்மால் உன்னுடன் நெருங்கி வர முடியவில்லை. அதனால் தான் பகிரங்கமான இம் மடலில் சில விடயங்களை சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

போராட்டம் என்று புறப்பட்ட சக்திகள் அனைவரும் ஒன்று திரண்டு ஒத்த குரலில் ஸ்ரீலங்கா அரசிற்கு நெருக்கடியைக் கொடுத்திப்போமானால் உனது வருகை சில சமயம் தேவைப்பட்டிருக்காது. அந்தரங்க திரை மறைவு ஆலோசனைகளையும் ஒத்துழைப்புகளையும் வழங்கிய உனது பிராந்திய நலன்கள் எமது போராட்டத்தினூடாகவே பாதுகாக்கப்பட்டிருக்கக் கூடும். உனக்கும் வீணை இந்த சிரமங்கள் ஏற்பட்டிருக்க மாட்டாது. ஆனால் எம்மவர்களிடையே நிலவிய போட்டி மனப்பான்மையும், குரோதமும்; அகங்காரமும் இன்ன பின்னவுமாக எமக்குள்ளேயே முட்டி மோதிச் சின்னாபின்னப்பட்ட போது எதிரி இராணுவம் இன ஒழிப்பை வேகப்படுத்திய வேளையில் உனது வருகையானது தேவைப்பட்டது ஏன்? வரவேற்கவும் பட்டது.

எனினும் எமது அச்சங்கள் குறித்து உனக்கு தெளிவுபடுத்த வேண்டியது எமது கடமையல்லவா? முன்னர் இந்திய பாகிஸ்தான் போரில் இந்தியா பெற்ற வெற்றியை எண்ணிக் களித்திருப்பாய். மகிழ்ந்திருப்பாய். ஆனால் இந்தியாவின் வட புலத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளைச் சமாளிக்க இலங்கையுடன் நேச உறவு காட்ட வேண்டி ஆட்சியாளர் விரும்பியதன் விளைவாக எம்மவர்கள் அனுபவிக்கும் இன்னல்கள் குறித்து நீ அறிந்தாயோ என்னவோ தெரியாது. 1948 முதல் ஜவகர்லால் நேருவும் பிறரும் மலையகத் தமிழ் பேசும் மக்கள் இலங்கைப் பிரஜைகளே எனக் கூறிவந்ததற்கு மாறாக லால் பகதூர் சாஸ்தரி - ஸ்ரீமாவோ பண்



டாரநாயக்காவுடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டார் எமது மக்களின் எண்ணங்களைக் கோராமலேயே கைச்சாத்திட்ட இந்த உடன் படிக்கையின் பிரகாரம் எம்மவர்களில் ஐந்து லட்சம் பேர் துடிக்கப் பதைக்க நாடு கடத்தப்பட்ட செய்தி வரலாற்றில் கறை படிந்த சம்பவமாகும். இவ்வாறு நாடு கடத்தப்பட்டவர்கள் இந்தியாவில் தமிழ் நாட்டில் நெய்வேலிச் சுரங்கத்திலும், கேரளாவில் வண்டிப் பெரியாறிலும், ஆந்திராவில் ராஜ மூந்திரி, குண்டக்கல பகுதிகளிலும் கொடைக்கானலிலும் இன்ன பிற இடங்களிலும் அனுபவிக்கும் நரக வேதனைகள் உனது செவிக்கும எட்டியிருக்குமோ என்னவோ? 1964 இல் இந்திய சீனப் போருக்காக எமது மக்கள் பலியிடப்பட்டதுபோல இன்று அமெரிக்க ஊடுருவலைத் தடுப்பதற்காக எம்மையும் பலிக்கடா ஆக்குவீரா? என்ற அச்சம் எம்மைச் சூழ்ந்து கொண்டுள்ளது. ஸ்ரீலங்காவின் ஆட்சியாளர்கள் ஏகாதிபத்திய தாசர்களாகிய கொலைகார மொஸாட்டுக்கும் பிறநாசகார சக்திகளுக்கும் சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்றது தெரிந்ததே. இந்து மாகடல் பிராந்தியத்தை யுத்த மேகங்களால் சூழவைக்க திருமலையின் எண்ணெய் குதத்தையும் புத்தளத்தின் அமெரிக்க வானொலி நிலையத்தையும் பயன்படுத்த முயற்சிக்கையில் உனது துரித செயல்பாடு அதைத் தடுக்க வேண்டியது கட்டாயமே. சந்தேகமின்றிப் பாராட்டப்பட வேண்டியது.

ஆனால் நீ உனது தாயகத்தை எவ்வளவு நேசிக்சின்றாயோ தாய்நாட்டு நலன்களின் மீது எவ்வளவு அக்கறை காட்டுகின்றாயோ; அவ்வளவுக்கு நாமும் எமது மண்ணையும் மக்களையும் நேசிக்கின்றோம். என்பதை நீ புரிந்து கொள்ள வேண்டும். இலங்கைத் தீவில் ஸ்ரீலங்கா, ஈழம் என்னும் இரண்டு தேசங்கள் உருவாக்கப்படுவதன் மூலமே எமது எண்ண வேட்கைகள் பூர்த்தியாக்கப்படும். மாபெரும் இழப்புக்களையும் வதைகளையும் படுகொலைகளையும் கூட இந்த ஒரே இலட்சியத்திற்கு தான் காணிக்கை செலுத்தி உள்ளோம் எனவே எமது இந்த இலட்சியப் பயணத்திற்கு நீ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தடை போட முனைந்தால் அது எமது தாயக நேசத்தைக் கொச்சைப்படுத்துவதாகிவிடும். எனவே தான் இந்திய வீரனே ஏகாதிபத்திய எதிர்ப்பிலும் சோவனிச இனவாத எதிர்ப்பிலும் உன்னோடு தோள் கொடுக்கத் தயாராய் இருக்கும் நாம் எமது மண்ணின் விடுதலையை நீ அடக்குவதை எப்படிச் சகித்துக் கொள்ள முடியும்

எனவே தான் இந்திய வீரனே தயவு செய்து எம்மையும் எமது உணர்வுகளையும் புரிந்து கொள். ஆட்பலத்தால் ஆயுத பலத்தால் பிராந்திய முக்கியத்துவத்தால் இன்னும் இது போன்ற விடயங்களில் எத்தனையோ மடங்கு வலிமை மிக்கவன் நீ என்பது நாங்கள் அறிந்தது தான் ஆனால் அந்த வலிமையைக் காட்டி எம்மைப் பயமுறுத்திப் பணிய வைத்து எமது இலட்சியத்தை, எண்ண வேட்கையை மழுங்கடிக்க எடுக்கும் முயற்சிகள், அமைதி பேணும் படை என்ற உனது பெயரையே அர்த்தமற்ற தாக்கி விடும்

நாம் தமிழ் பேசுபவர்கள் என்ற வகையில் தென்னிந்திய கலாச்சார மரபுகளுடன் ஒத்துப் போகக் கூடியவர்கள் என்ற வகையில் உனக்கு ஒன்றைச் சுட்டிக் காட்டுதல் பொருத்தமானதே. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற முதுமொழியில் அடக்கப்பட்டிருக்கும் சர்வதேசியம் நாம் ஏற்றுக் கொண்டதே· எல்லோரும் உறவினனே, எல்லாம் எமது ஊரே, அதேவேளை பிரிந்துபட்டுப்பார்க்கும்போது நன்மையோ, தீமையோ நாமேதான் தேடிப் பெற்றுக் கொண்டே இருக்கிறோம்.

ஆதலால்,

''யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும், நன்றும் பிறர் தர வாரா.

என்ற கணியன் பூங்குன்றனின் புறநானூற்று வாசகத்தைச் சுட்டிக்காட்டி இந்த திறந்தமடலை முடித்துக்கொள்கின்றேன்



MR,MME GUNARAJAH SINNATHAMBY
14 Rue Chaillon-(ESC F)
92390 VILLENEUVE LA GARENNE Tél: 47.98.62.9[illegible]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொதுமை வெளியீடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்